## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

# ஆண்டறிக்கை - 2023

இது மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 2023 ஆம் ஆண்டின் செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கிய ஆண்டறிக்கையாகும். இவ்வறிக்கையானது 1996 இன் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 30 ஆவது பிரிவிற்கமைய சமர்ப்பிக்கப்படுகின்றது.

**இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு**
தலைமை அலுவலகம்
இல. 14, ஆர் ஏ டி மெல் மாவத்தை கொழும்பு 04.
தொ.பே.: (94) 0112505580இ 2505581இ 2505582
தொலைநகல்: (94) 0112505591
மின்னஞ்சல்: ளநஉ˙ாசஉ˙ளட;பஅயடை.உழஅ
இணையத்தளம்: றறற.ாசஉ˙ளட.டம

# 2024 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்

**தவிசாளர்**

நீதிபதி எல்.ரீ.பி. தெஹிதெனிய

**ஆணையாளர்கள்**

பேராசிரியர் தையமுத்து தனராஜ்

பேராசிரியர் பாத்திமா பர்சானா ஹனிபா

திரு. நிமல் ஜீ. புஞ்சிஹேவா

கலாநிதி கெஹான் தினுக் குணதிலக்க

# தவிசாளரின் ஆசிச் செய்தி

ஒரு சட்டப்பூர்வ சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு என்பது இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் முதன்மையான கண்காணிப்பு நிறுவனமாகும். இந்த நாட்டின் வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியின் பின்னர் நாடு என்ற வகையில் மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்பிக்கொண்டிருந்த இலங்கை, 2023 ஆம் ஆண்டில் மனித உரிமைகளில் முற்போக்கான முன்னேற்றங்கள் மற்றும் பின்னடைவுகள் இரண்டையும் சந்தித்தது. நாட்டில் நிலவுகின்ற மனித உரிமைகள் சார்ந்த பிரச்சினைகளை சிறப்பான முறையில் நிவர்த்தி செய்யும் நோக்கத்துடன், நாட்டில் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் தலையீட்டை மேற்கொள்ளும்போது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அதன் பல்வேறு துறைகளில் ஒருங்கிணைந்த அணுகுமுறையை பின்பற்றுதல் மீது விசேடமாக கவனம் செலுத்தப்பட்டது. இதற்காக, ஆணைக்குழுவின் செயற்பாட்டு திறனை மேம்படுத்துவதற்கு மற்றும் அதன் ஆலோசனை, கண்காணிப்பு, விசாரணை, கல்வி மற்றும் அதன் சமூக ஈடுபாடு மற்றும் அழுத்தம் போன்ற செயல்பாடுகளை வலுப்படுத்தவும் அதன் வளங்கள் சிறப்பான முறையில் பயன்படுத்தப்பட்டன.

2023 ஆம் ஆண்டில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முக்கிய மூலோபாய ரீதியிலான கவனம் செலுத்தும் பகுதி பொதுமக்கள் ஆணைக்குழுவை அணுகுவதனை அதிகரிப்பதாகும். அதன்படி, இரத்தினபுரி மற்றும் நுவரெலியாவில் இரண்டு புதிய உப அலுவலகங்கள் தாபிக்கப்பட்டதுடன், இங்கு குறிப்பாக அந்தப் பிரதேசங்களில் வாழுகின்ற தோட்டப் பிரிவு ஊழியர்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவை அணுகுவதை அதிகரிப்பதில் கவனம் செலுத்தப்பட்டது. இது தவிர, செயற்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்காக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தில் முறையே சர்வதேச உறவுகள் பிரிவு மற்றும் துரித பதிலளிப்பு அலகு எனப் பெயரிடப்பட்ட ஒரு புதிய பிரிவும் மற்றும் ஒரு சிறப்பு அலகொன்றும் நிறுவப்பட்டன. சர்வதேச மனித உரிமைகள் தரநிலைகளுக்கு ஏற்ப தேசிய சட்டத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அரசாங்கத்திற்கு ஆலோசனை மற்றும் பரிந்துரைகளை வழங்குவதற்காக சர்வதேச உறவுகள் பிரிவு நிறுவப்பட்டது. அதன்படி, 2023 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவினால் சில சட்ட வரைவுகுள் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டு அதன் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் வழங்கப்பட்டதுடன், பயங்கரவாத எதிர்ப்பு சட்ட வரைவு, தேசிய பெண்கள் ஆணைக்குழு பற்றிய சட்ட வரைவு, பெண்களை வலுவூட்டல் சட்ட வரைவு, பாலின சமூக சமத்துவம் தொடர்பான சட்ட வரைவு, இணையப் பாதுகாப்பு சட்ட வரைவு, மற்றும் இயலாமையுடையோரின் உரிமைகளைப் பாதுகாத்தல் சட்ட வரைவு உள்ளிட்ட பல வரைவு சட்ட வரைவுகள் இதற்குள்ள அடங்கும். கடுமையான வகையிலான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் சொந்தப் பிரேரணை வழிகாட்டலின் கீழ் ஆரம்பிக்கப்படும் விசாரணைகளுடன் (*ளரழ அழவர* உயளநள) தொடர்பாக சரியான நேரத்தில் தீர்வுகள் மற்றும் பரிந்துரைகளை வழங்கும் நோக்கில் நிறுவப்பட்ட துரித பதிலளிப்பு அலகினால் 2023 ஆம் ஆண்டில் ஆறு துரித பதிலளிப்பு விஜயங்கள்

மேற்கொள்ளப்பட்டன. குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில், இந்த ஆறு நிகழ்வுகளும் இலங்கையில் சட்ட அமுலாக்க அதிகாரிகளால் தனிநபர் சுதந்திரத்தை இழக்கச்செய்தலுடன் தொடர்பானவையாகும்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட பரிந்துரைகள் மற்றும் கட்டளைகளை செயற்படுத்தும் வேகத்தை அதிகரிப்பதே மற்றொரு மூலோபாய ரீதியில் கவனம் செலுத்தப்பட்ட விடயமாகும். அதனால், செயற்படுத்தாமை அலகு தீவிரமாக மீண்டும் செயல்படுத்தப்பட்டது. இதன் விளைவாக, ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட பரிந்துரைகள் மற்றும் கட்டளைகளை செயற்படுத்துவதற்கு பிரதிவாதிகள் பின்பற்றிய நடவடிக்கைகள் தொடர்பான இற்றைப்படுத்தப்பட்ட தகவல்கள் பொருத்தமான பிரகாரம் ஆணைக்குழுவுக்கு குறித்த சரியான நேரத்தில் மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை ஆணைக்குழு பெற்றது. நிலவுகின்ற முறையில் மனித உரிமைகள் தொடர்பான கலாச்சாரத்தை உள்ளடக்குவதற்கான கூட்டு செயற்பணிக்காக இது ஒரு சாதகமான நடவடிக்கையாகும். இருப்பினும், சில நிகழ்வுகளின்போது பரிந்துரைகளை மீளாய்வு செய்வதற்கான மேன்முறையீடுகளும் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படுவதுடன் அவ்வாறான சந்தர்ப்பங்களில் தொடர்புடைய மேல்முறையீடுகளின் நியாயத்தின் அடிப்படையில், தற்போதைய சூழ்நிலையில் பரிந்துரைகளை செயல்படுத்துவதற்கான சாத்தியத்தை மீளாய்வு செய்வதற்கு ஆணைக்குழுவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

முன்னைய ஆண்டுகளில் போன்றே 2023 ஆம் ஆண்டிலும் சட்டவிரோத மனித உரிமை மீறல்களுடன் தொடர்புடைய தனிப்பட்ட சுதந்திரத்துடன் தொடர்பான அதிக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்த மூன்று வகையான முக்கிய முறைப்பாடுகளாக சித்திரவதை, துன்புறுத்தல் மற்றும் தன்னிச்சையான கைது மற்றும் தடுப்புக்காவல் என்பவற்றைக் குறிப்பிடலாம். தனிப்பட்ட சுதந்திரத்தை பறிக்கும் சம்பவங்களைத் தடுப்பதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் இலங்கையில் சட்டங்களை செயல்வலுப்பெறச் செய்யும் அலுவலர்களுக்காக ஆண்டு முழுவதும் தொடர்புடைய மனித உரிமைகள் சட்டங்கள் மற்றும் தரநிலைகள் குறித்து பல பயிற்சித் திட்டங்கள், விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. பூகோள ரீதியாக எட்டு வலயங்களின் சிறைச்சாலை அதிகாரிகளுக்காக நடாத்தப்பட்ட திறன் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் நாட்டின் பல்வேறு பொலீஸ் நிலையங்களில் பணியாற்றுகின்ற 170 உப பொலீஸ் பரிசோதகர்களுக்கு சித்திரவதை தடுப்பு குறித்த பயிற்சி ஆகியவை உள்ளடங்கும். கைது செய்யப்பட்டுள்ள நபர்களின் மனித உரிமைகள் முடிந்தவரை முழுமையாக மதிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் பொலீஸ் நிலையங்கள் மற்றும் தடுப்பு நிலையங்களுக்கு குறிப்பிட்ட மற்றும் வழக்கமான விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நாட்டில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவரும் கடுமையான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அரசாங்கத்திற்கு பல பொதுவான வழிகாட்டுதல்கள் மற்றும் பரிந்துரைகள் வெளியிடப்பட்டது. மனித உரிமைகள் பாதுகாவலர்களைப் பாதுகாப்பதற்கான

வழிகாட்டல்கள் மற்றும் பரிந்துரைகள், பாலியல் மாற்றத்திற்குள்ளாகின்ற நபர்களைப் பாதுகாப்பதற்காக பொலீஸ் அதிகாரிகளுக்கான வழிகாட்டுதல்கள், சிவில் சமூகப் போராட்டங்களைக் கையாள்வதில் அரசாங்கம் மற்றும் சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்காக பரிந்துரைக்கப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் பொலீஸ் உத்தியோகத்தரின்(களின்) நேரடி அல்லது மறைமுக நடவடிக்கை அல்லது கடமை தவறியமையின் காரணமாக பொலீஸ் காவலிலுள்ள ஒருவர் மரணித்தல் அல்லது சட்ட வரையறைக்குப் புறம்பாக பொலீஸ் உத்தியோகத்தரால்(களால்) ஒரு நபர் மரணித்தல் தொடர்பாக இலங்கை பொலீஸ் மற்றும் ஏனைய தொடர்புடைய அதிகாரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய வரைவு வழிகாட்டல்கள் ஆகியவை வெளியிடப்பட்ட முக்கிய வழிகாட்டல்களில் சிலவாகும்.

மனித உரிமைகளை மேம்படுத்துவதற்காக சிவில் சமூக அமைப்புகளின் முக்கிய பங்கை இனங்கண்டுகொண்டதன் பின்னர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அந்த அமைப்புகளுடன் செயலூக்கத்துடன் ஈடுபடுவதற்கான தனது அர்ப்பணிப்பை தொடர்ந்தும் மேற்கொண்டது. இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட ஒரு மிக முக்கியமான நடவடிக்கையாக ஆணைக்குழுவினால் நிறுவப்பட்ட கருப்பொருள் சார்ந்த உப குழுக்களில் பங்காளிகளாக இருப்பதற்காக அந்த சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளை அழைத்தமையைக் குறிப்பிடலாம். அனைத்து மட்டங்களிலும் மனித உரிமைகள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக சிவில் சமூக அமைப்புகளுடன் அர்த்தமுள்ளதாகவும் திறம்படவும் ஈடுபடுவதற்கு இத்தகைய பிரதிநிதித்துவம் ஊடாக ஆணைக்குழுவுக்கு முடியுமாக இருந்தது.

சர்வதேச ரீதியில் மனித உரிமைகளுக்கான அரசின் கடப்பாடுகளுக்கு இணங்க மற்றும் நாட்டில் மனித உரிமைகளின் முற்போக்கான வளர்ச்சியை உறுதி செய்வதற்காக சர்வதேச சமூகத்துடன் இணைந்து பணியாற்றுவதன் முக்கியத்துவத்தை இனங்கண்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் சாசனங்களுடன் தொடர்புடைய அமைப்புக்களுக்கு மற்றும் பிராந்திய மனித உரிமைகள் அமைப்புகளுக்கு தனது இணை அறிக்கைகள் மற்றும் வெளியீடுகள் சமர்ப்பிக்கப்படுகின்றது. வலிந்து காணாமலாக்கப்பட்டோர் பற்றிய குழுவின் 25 ஆவது அமர்வுக்காக சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை, சிறுவர் உரிமைகள் குழுவில் சமர்ப்பிக்கப்பட்ட இணையான அறிக்கை மற்றும் மனித உரிமைகள் குழுவின் 137 ஆவது அமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த 6 ஆவது கால அறிக்கை ஆகியவை இத்தகைய பங்களிப்புகளில் உள்ளடங்கும்.

இந்த ஆண்டறிக்கையில் விபரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம், ஆணைக்குழுவுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்ட பல சவால்களுக்கு மத்தியிலும் நிலவுகின்ற வளங்களின் அடிப்படையில் தன்னால் முடியுமான வரை நாட்டில் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆண்டு முழுவதும் பல பயனுள்ள மற்றும் நீடித்த தலையீடுகளை மேற்கொண்டுள்ளது. மிகவும் பாதகமான சூழ்நிலைகளைக் கொண்ட காலகட்டத்திலும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கின்ற மட்டம் வரை இலங்கையின் கலாச்சாரத்தில் மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பதனை மூலோபாய ரீதியிலான

தலையீட்டின் ஊடாக உறுதி செய்வதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்ந்து தனது உறுதியான அர்ப்பணிப்பைச் செய்து வருகின்றதென பொறுப்புடன் இங்கு குறிப்பிடுகின்றேன்.

**தவிசாளர்**
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

# உள்ளடக்கம்

**ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்**

**தவிசாளரின் ஆசிச் செய்தி**

**உள்ளடக்கம்**

**தலைப்பெழுத்துச் சொல் பெயர் பட்டியல்**

**அத்தியாயம் 1 : ஆணைக்குழுவைப் பற்றி...**

1.1. ஆணைக்குழு பற்றிய சுருக்கமான அறிமுகம்
- 1.1.1. தூர நோக்கு
- 1.1.2. செயற்பணி
- 1.1.3. அடிப்படைப் பெறுமதிகள்
- 1.1.4. மூலோபாய ரீதியில் கவனம் ஈர்க்கப்பட வேண்டிய பகுதிகள்
- 1.1.5. ஆணைக்குழுவின் இலச்சினை

1.2. ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் தன்மை மற்றும் விடயப் பரப்பு

1.3. நிறுவனக் கட்டமைப்பு மற்றும் சுயாதீனத் தன்மை

**அத்தியாயம் 2: ஆணைக்குழுவின் அமைப்பு மற்றும் நிருவாகம்**

2.1. நிறுவனக் கட்டமைப்பு
2.2. ஆணைக்குழுவின் அமைப்பு
2.3. ஆளணியின் அமைப்பு
2.4. வளாகம் (பிரவேசத்திற்கான வாய்ப்பு)
2.5. பணிகளை நிறைவேற்றும் முறைகள்
2.6. நிறுவனம் சார்ந்த அபிவிருத்தி
- 2.6.1. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இரண்டு உப அலுவலகங்களை அமைத்தல்
- 2.6.2. சர்வதேச உறவுகள் பிரிவை தாபித்தல்
- 2.6.3. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ஒரு துரித பதிலளிப்பு பிரிவொன்றை தாபித்தல்

**அத்தியாயம் 3: இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் புள்ளி விபரங்கள்**

3.1. கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் பற்றிய புள்ளிவிபரங்கள்
3.2. 2023 இல் விசாரணைகள் நிறைவு செய்யப்பட் வழக்குகள் பற்றிய விபரம்
3.3. பரிந்துரைகள்
3.4. கண்காணிப்பு விஜயங்கள்

**அத்தியாயம் 4: மனித உரிமைகளை விருத்தி செய்தல் மற்றும் பாதுகாப்பதற்காக ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரம்**

4.1. பிரச்சினைக்குரிய நிலைமைகளின்போது மனித உரிமைகளைப் பாதுகாத்தல்

4.2. துரித பதிலளிப்பு

*4.2.1.* துரித பதிலளிப்பு அலகு (சுசுரு)

*4.2.2.* தவிசாளரின் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படும் தலையீடுகள்

4.3. ஆலோசனைப் பணிகள்

*4.3.1.* தேசிய சட்டங்களுடன் தொடர்பாக அரசாங்கத்திற்கு பரிந்துரைகளை சமர்ப்பித்தல்

*4.3.2.* மறுசீரமைப்புக்களுக்கான ஏனைய உதவிகள்

*4.3.3.* சர்வதேச தரங்களை அங்கீகரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தலை ஊக்குவித்தல்

4.4. கண்காணிப்புப் பணிகள்

*4.4.1.* பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாமை தொடர்பான கண்காணிப்பு

*4.4.2.* தடுப்பு மற்றும் பராமரிப்பு இல்லங்களை மேற்பார்வை செய்தல்

*4.4.3.* ஐக்கிய நாடுகள் அமைப்பின் அமைதி காக்கும் படையில் பணியாற்றுவதற்காக இலங்கை இராணுவத்தினரை ஈடுபடுத்தல் தொடர்பாக கவனமாக பரிசீலித்தல்

*4.4.4.* ழூஊயுவு இன் கீழ் தேசிய தீர்வுப் பொறிமுறை

*4.4.5.* சிறைச்சாலைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தேசிய ஆய்வுப் பெறுபேறுகளின் முன்னேற்றம்

4.5. புலனாய்வுகள்

*4.5.1.* கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் பற்றியது

*4.5.2.* மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் சொந்தப் பிரேரணைகள் அடிப்படையிலான விசாரணைகள் *(ளுரழ ஆழவர* வைெநசளநவெழைளெ)

4.6. கல்விசார் மற்றும் ஆணைக்குழுவை பிரஜைகளுடன் தொடர்புபடுத்துவதற்கான பணிகள்

மனித உரிமைகள் தொடர்பான விதிமுறைகள் மற்றும் பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

**அ)** சர்வதேச ஞாபகார்த்த தின வைபவங்கள்

**ஆ)** பல்வேறு கவனயீர்ப்புக் குழுக்களுக்கான பயிற்சிகள் மற்றும் கலந்துரையாடல்கள்

**இ)** ஆலோசனை

*4.7.* ஊடகங்களுடனான தொடர்புகள்

பாரம்பரிய அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுடன் நடவடிக்கை மேற்கொள்ளல்

இணையவழி தளங்ளைப் பயன்படுத்தல்

*4.8.* சிவில் சமூக அமைப்புக்களுடனான தொடர்புகள்

பிராந்திய சிவில் சமூக அமைப்புக்கள் ஒருங்கிணைப்புக் குழுக்கள்

மனித உரிமைகளுக்கான பிரஜைகள் செயலணி (ஊவுகு4ர்சு)

கருப்பொருள் சார்ந்த உப குழு அங்கத்தவர்களாக சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள்

சிவில் சமூக அமைப்புக்களினால் ஏற்பாடு செய்யப்படும் பல்வேறு நிகழ்வுகளில் பங்குபற்றல்
சிவில் சமூக அமைப்புக்களுக்கான பயிற்சியளிப்புக்கள்

**அத்தியாயம் 5: கருப்பொருள் சார்ந்த தலையீடுகள்**

5.1. கருப்பொருள் சார்ந்த உப குழுக்கள்
5.2. தனிநபர் உரிமைகள் தொடர்பான தலையீடுகள்
5.2.1. கைது செய்யப்பட்டிருக்கையில் ஏற்படும் மரணங்கள் மற்றும் சட்ட விரோதக் கொலைகள்
*5.2.2.* சித்திரவதை செய்தல்
*5.2.3.* தனிநபர் சுதந்திரம் மற்றும் பாதுகாப்புக்கான உரிமை
*5.2.4.* அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமை
*5.2.5.* கருத்துச் சுதந்திரம்
*5.2.6.* நடமாடுவதற்கான சுதந்திரம்
*5.2.7.* சிறுபான்மையினரின் உரிமைகள்
*5.2.8.* டுபுடீவுஜஞ உரிமைகள்
*5.2.9.* சிறுவர் உரிமைகள் மற்றும் கல்வி பெறுவதற்கான உரிமை
*5.2.10* சுகாதார உரிமைகள்
*5.2.11* இயலாமையுடைய நபர்களின் உரிமைகள்
*5.2.12* முதியோரின் உரிமைகள்
*5.2.13* பழங்குடி மக்களின் உரிமைகள்
*5.2.14* சீவனோபாயத்திற்கான உரிமை

**அத்தியாயம் 6: சர்வதேச ஒத்துழைப்பு**

6.1. சர்வதேச கடப்பாடுகளுடன் இயைந்திருத்தலை விருத்தி செய்தல்
6.2. சர்வதேச அமைப்புக்களுக்கு அறிக்கைகள் மற்றும் வெளியீடுகளை சமர்ப்பித்தல்
6.3. பிராந்திய மனித உரிமைகள் அமைப்புக்களுடனான தொடர்புகளைப் பலப்படுத்தல்
6.4. சர்வதேச அமைப்புக்கள் மற்றும் நிபுணர்களுடனான ஏனைய ஒத்துழைப்புக்கள்
*6.4.1.* இருதரப்புக் கூட்டங்கள்
*6.4.2.* வெளிநாட்டு நிதி கிடைத்தல்

**அத்தியாயம் 7: மனித வளங்கள், நிருவாகம் மற்றும் நிதிசார் அலுவல்கள்**

7.1. ஆளணி மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள்
*7.1.1.* உள்நாட்டுப் பயிற்சி வாய்ப்புக்கள்
*7.1.2.* சர்வதேச நிகழ்ச்சித் திட்டங்கள்
7.2. ஆளணி மற்றும் வெற்றிடங்கள்
7.3. வருடாந்த நிதிக் கூற்றுக்கள்

**பின்னிணைப்புக்கள்**

பின்னிணைப்பு 1: இலங்கையில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகங்கள் அமைந்துள்ள இடங்கள் - வரைபடம்

பின்னிணைப்பு 2: பரிந்துரைகள் பட்டியல்

பின்னிணைப்பு 3: வழிநடாத்தப்பட்ட சொந்தப் பிரேரணை முறைப்பாடுகள் பட்டியல்

## அத்தியாயம் 1 : ஆணைக்குழுவைப் பற்றி...

- 1.1. ஆணைக்குழு பற்றிய சுருக்கமான அறிமுகம்
  - 1.1.1. தூர நோக்கு
  - 1.1.2. செயற்பணி
  - 1.1.3. அடிப்படைப் பெறுமதிகள்
  - 1.1.4. மூலோபாய ரீதியில் கவனம் ஈர்க்கப்பட வேண்டிய பகுதிகள்
  - 1.1.5. ஆணைக்குழுவின் இலச்சினை
- 1.2. ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் தன்மை மற்றும் விடயப் பரப்பு
- 1.3. நிறுவனக் கட்டமைப்பு மற்றும் சுயாதீனத் தன்மை

## 1.1. ஆணைக்குழு பற்றிய சுருக்கமான அறிமுகம்

### 1.1.1. தூர நோக்கு

பன்முகத்தன்மையை அங்கீகரிக்கும் மற்றும் அனைவரதும் மனித உரிமைகளை மதித்து நடக்கும் ஒரு சமூகம்.

### 1.1.2. செயற்பணி

இலங்கையில் மக்களின் இறைமையின் அடிப்படையிலமைந்த ஜனநாயகத்திற்குள் மனித உரிமைகள், மானிட மாண்புகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியை மேம்படுத்தல் மற்றும் அவற்றைப் பாதுகாப்பதில் தலைமையை வழங்குதல்"

### 1.1.3. அடிப்படைப் பெறுமதிகள்

- மானிட மாண்புகளை மதித்து நடத்தல்
- பன்முகத்தன்மையை மதித்து நடத்தல்
- சமத்துவம் மற்றும் பாகுபாடு காட்டாதிருத்தல்
- சமாதானம், உண்மை மற்றும் நீதி
- சுதந்திரம்
- பொறுப்புக்கூறல்
- சேவையாற்றுதல்
- பணிவு
- நேர்மை
- வெளிப்படைத்தன்மை

### 1.1.4. மூலோபாய ரீதியில் கவனம் ஈர்க்கப்பட வேண்டிய பகுதிகள்

ஆணைக்குழுவின் மூலோபாய கவனயீர்ப்புப் பகுதிகளாவன:

- அனைத்து மக்களுக்கும் விசேடமாக ஏழைகள் மற்றும் விளிம்பு நிலையில் வாழும் மக்களுக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் அதன் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை மேம்படுத்தல்.
- இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் போன்றே அதன் சேவைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாக பாலின சமத்துவத்தை ஒருங்கிணைத்தல்.
- இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் அதன் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் சேவைகள் மூலமாக பன்முகத் தன்மையை ஏற்றுக்கொள்ளல் மற்றும் அவற்றுக்கு மதிப்பளித்தல்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முக்கியமான மூலோபாய கவனயீர்ப்புத் துறைகளாவன:

- சித்திரவதை ∴தடுத்துவைத்தலின் போதான வன்முறை
- புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகள்
- கல்வி, சுகாதாரம் மற்றும் காணி உரிமைகள் உட்பட்ட பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள்
- பாலினம் சார்ந்த பிரச்சினைகள்
- சிறுபான்மையினரின் உரிமைகள்
- மலையகத் தமிழர்கள் மற்றும் தோட்டத் தொழிலாளர்கள்
- அனர்த்த முகாமைத்துவம் மற்றும் மீட்பு
- ஓரினச் சேர்க்கையாளர்கள், இரு பாலினத்தவர்கள், பாலினமாற்றத்திற்குட்படுபவர்களின் உரிமைகள்
- முதியவர்களின் உரிமைகள்
- சிறைக் கைதிகள் மற்றும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளோர்

### 1.1.5. ஆணைக்குழுவின் இலச்சினை

தேசிய மட்டத்தில் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் ஊக்குவிப்பதற்கான பொறுப்பு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இலச்சினையூடாக வெளிப்படுத்தப்படுகின்றது. இலச்சினையின் நீல நிறமானது மனிதர்களின் உயிரோட்டம் மற்றும் படைப்பாற்றலை வெளிப்படுத்துகின்றது. இரு கைககள் பாதுகாப்பை வெளிப்படுத்துவதுடன், உலகளாவிய மனித உரிமைகளின் மீதான நம்பகத்தன்மை மற்றும் சர்வதேச மட்டத்திலான பாதுகாப்பையும் வெளிப்படுத்துகின்றது. தேசிய மட்டத்திலான பாதுகாப்புக்கான நடவடிக்கை எடுப்பதற்கான தேவைப்பாட்டை இலங்கை வரைபடத்தினூடாக வெளிப்படுத்தப்படுகின்றது. ஒரு பெண், ஒரு ஆண் மற்றும் ஒரு பிள்ளை என்பவற்றிலிருந்து மனித உரிமைகள் பாதுகாப்பு அனைவருக்கும் சமமென்பதை எடுத்தியம்புகின்றது.

## 1.2. ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் தன்மை மற்றும் விடயப் பரப்பு

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு என்றால் நாட்டில் மனித உரிமைகளை விருத்தி செய்வதற்கும், பாதுகாப்பதற்கும் தாபிக்கப்பட்ட சுதந்திரமான ஆணைக்குழுவொன்றாகும். இலங்கையானது சர்வதேச மனித உரிமைகளின் கடப்பாடுகளுடன் இயைந்திருத்தலை உறுதிப்படுத்துவதற்கும் ஆணைக்குழு முயற்சி செய்கின்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அதன் அதிகார எல்லைக்கு அப்பாற்பட்ட பிரத்தியேக அதிகாரங்கள் எதுவும் இல்லை. அடிப்படை உரிமைகள் மற்றும் மனித உரிமைகளுக்கு இணங்க ஆணைக்குழுவின்

சட்டப்பூர்வ அதிகாரம் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. விசாரணைகள் மற்றும் சட்டம் மற்றும் நிர்வாக ரீதியிலான பணிப்புக்கள் மற்றும் நடைமுறைகள் தொடர்பாக அரசாங்கத்திற்கு அறிவுறுத்தல்களை வழங்கும்போது அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரம் இலங்கை அரசியலமைப்பினூடாக அங்கீகரிக்கப்பட்டுள்ள சிவில் மற்றும் அரசியல் உரிமைகளாக கருத்திற்கொள்ளப்படுகின்ற அடிப்படை உரிமைகளுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. இருப்பினும், தேசிய சட்டங்கள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரசாங்கத்திற்கு பரிந்துரைகளை வழங்குதல் என்ற ரீதியில் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள முக்கிய அதிகாரம் மனித உரிமைகள் தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதாகுமென்பதோடு, இது அனைத்து சர்வதேச மனித உரிமைகள் விதிமுறைகள் மற்றும் தரநிலைகள் வரை விரிவடைந்துள்ளது.

ஆணைக்குழுவின் சட்ட ரீதியான அலுவல்கள் (சட்டத்தின் 10 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்) :

- அடிப்படை உரிமைகள் சம்பந்தமாக அரசியலமைப்புச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய செயற்படுவதனை உறுதிப்படுத்தல் மற்றும் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளித்தல் மற்றும் அவற்றைப் பின்பற்றுதல் மற்றும் மேம்படுத்தும் நோக்கில் நடைமுறைகள் தொடர்பான முறைப்பாடுகளை புலனாய்வு செய்தல் மற்றும் விசாரணைகளை நடாத்துதல்
- அடிப்படை உரிமைகள் மீறல் அல்லது மீறப்படவுள்ள உரிமைகள் சம்பந்தமான முறைப்பாடுகளை விசாரித்தல் மற்றும் புலனாய்வு செய்தல் மற்றும் தலையீடு செய்து அல்லது இணக்கப்படுத்தல் ஊடாக தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தல்
- அடிப்படை உரிமைகளை மேம்படுத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக சட்டரீதியிலான மற்றும் நிர்வாகம் சார்ந்த கட்டளைகள் மற்றும் நடைமுறைகளை தயாரிப்பதில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் உதவுதல்
- தேசிய சட்டங்கள் மற்றும் நிர்வாக நடைமுறைகள், சர்வதேச மனித உரிமைகள் இணக்கப்பாடுகள் மற்றும் தரங்களுடன் இயைந்திருப்பதனை உறுதிப்படுத்துவதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாக அரசாங்கத்திற்குப் பரிந்துரைகளை முன்வைத்தல்.
- மனித உரிமைகள் துறையின் உடன்படிக்கைகள் மற்றும் வேறு சர்வதேச ஒப்பந்தப் பத்திரங்களில் கைச்சாத்திடல் மற்றும் இணக்கப்பாட்டை தெரிவிப்பதன் தேவைப்பாடு சம்பந்தமாக அரசாங்கத்திற்கு பரிந்துரைகளை முன்வைத்தல் மற்றும்
- மனித உரிமைகள் சம்பந்தமாக அறிவுறுத்துவதனை ஊக்குவித்தல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான கல்வியை பெற்றுக்கொடுத்தல்.

இந்த சட்ட ரீதியான அலுவல்களை நிறைவேற்றுவதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் (சட்டத்தின் 11 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்) ;

- அடிப்படை உரிமைகள் மீறல்கள் அல்லது அதனுடன் தொடர்புடைய மீறல்கள் சம்பந்தமான விசாரணைகளை மேற்கொள்ளல்.
- ஆணைக்குழுவினால் அதற்குரிய அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையென ஆணைக்குழு கருதும் மாகாண மட்டத்திலான சில உப குழுக்களை நியமித்தல்.
- அடிப்படை உரிமைகள் மீறலொன்று அல்லது தொடர்புடைய மீறலொன்று தொடர்பான நீதிமன்றமொன்றில் விசாரிக்கப்பட்டுவரும் வழக்குடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு அந்த நீதிமன்றத்தின் அனுமதியுடன் தலையீட்டை மேற்கொள்ளல்.
- நீதிமன்ற ஆணையொன்றின் ஊடாக அல்லது வேறு விதத்தில் தடுத்துவைத்திருக்கும் நபர்களின் நலனோம்புகை தொடர்பாக கண்காணித்தல், அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடங்களை நிதமும் பரிசீலித்தல் மற்றும் அவர்களுடைய நிலைமைகளை மேம்படுத்துவதற்கு தேவையான பரிந்துரைகளை முன்வைத்தல்.
- உயர் நீதிமன்றத்தினால் ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும் ஏதேனுமொரு விடயம் சம்பந்தமாகவும் ஆணைக்குவினால் மேற்கொள்ளப்பட வேண்டுமென உயர் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்படும் கட்டளை தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளல்.
- நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளை நடாத்துவதனூடாக மனித உரிமைகள் சம்பந்தமான ஆராய்ச்சிகளில் ஈடுபடல், மற்றும் மனித உரிமைகள் பற்றிய அறிவை விருத்திசெய்தல் மற்றும் அவ்வாறான ஆராய்ச்சிப் பெறுபேறுகளை சமூகத்தில் பிரசித்தப்படுத்தல் மற்றும் பகிர்தல்.
- ஆணைக்குழுவுக்கு முறைப்பாட்டை மேற்கொள்ளும் அதிருப்திக்கு ஆளாகிய ஒருவருக்கு அல்லது அதிருப்திக்கு ஆளாகியுள்ள ஒருவர் சார்பாக நடவடிக்கை மேற்கொள்ளும் ஒருவருக்கு அவரால் நியாயமான வகையில் மேற்கொள்ளப்பட்ட செலவை ஈடு செய்யுமுகமாக தேவையான தொகையொன்றை ஆணைக்குழுவின் தற்துணிபின் பிரகாரம் வழங்குதல்.
- ஆணைக்குழு தனது அலுவல்களை மேற்கொள்வதற்குத் தேவையான அல்லது பொருத்தமான அல்லது அனைத்து விடயங்களையும் மேற்கொள்ளல்.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சாசனம் மற்றும் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் சம்பந்தமான சர்வதேச சாசனத்தின் ஊடாக பிரகடனப்படுத்தப்பட்டு உரிமையொன்றாக ‘மனித உரிமை’ இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 33 ஆவது பிரிவின் கீழ் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, சர்வதேச மனித

உரிமைகள் பற்றிய சட்டமூலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள சிவில், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் உள்ளடக்கப்படுகின்றது.

## 1.3. நிறுவனக் கட்டமைப்பு மற்றும் சுயாதீனத் தன்மை

1996 இன் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் ஊடாக இந்த ஆணைக்குழு தாபிக்கப்பட்டது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்ட ரீதியான அமைப்பு மற்றும் செயற்பாட்டுக் கோட்பாடுகள் இந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை அரசியலமைப்பின் 41 ஆ உறுப்புரையின் கீழான அட்டவணையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சுயாதீன ஆணைக்குழுவொன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே இந்த ஆணைக்குழு சட்டத்தினூடாக நிறுவப்பட்டு இலங்கையின் அரசியலமைப்பினூடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆணைக்குழு பாராளுமன்றத்திற்கு மாத்திரமே பொறுப்புக் கூற வேண்டும்.

இலங்கை அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய அரசியலமைப்பு பேரவையின் பரிந்துரையின் பேரில், ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் ஜனாதிபதியவர்களினால் நியமிக்கப்படுகின்றனர். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அனைத்து உறுப்பினர்களும் அவர்களுடைய தனிப்பட்ட மட்டத்தில் நியமிக்கப்படுகிறார்களே தவிர எந்தவொரு குறிப்பிட்ட நிறுவனத்தின் உறுப்பினராகவோ அல்லது பிரதிநிதியாகவோ நியமிக்கப்படுவதில்லை. அரசியலமைப்பு பேரவை என்பது 2022 ஆம் ஆண்டில் அரசியலமைப்புக்கான 21 ஆவது திருத்தம் வலுப்பெறச் செய்யப்பட்டதுடன் மீண்டும் நிறுவப்பட்ட பிரதான நியமனங்கள் வழங்குவதனை பரிந்துரைப்பதற்கு அதிகாரம் பெற்ற பல கட்சி அமைப்பாகும், இது மீண்டும் நிறுவப்பட்டது. சுயாதீன ஆணைக்குழுக்களுக்காக மேற்கொள்ளப்படும் நியமனங்களுடன் தொடர்பாக நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியின் மையப்படுத்தப்பட்ட அதிகாரத்தினைக் குறைப்பதற்கான தீர்வு இந்தத் திருத்தத்தினூடாக எதிர்பார்க்கப்பட்டது. எனவே, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சுயாதீனத் தன்மையானது அதன் நியமன செயல்முறை மூலம், முதன்மையாகவும் மற்ற அனைத்து செயல்பாடுகளுக்கும் முன்னதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தின் பிரகாரம் ஆணையாளர்கள் மூன்று ஆண்டுகள் பதவி வகித்தல் வேண்டுமென்பதோடு, இலங்கை மனித உரிமைகள் ஆணையக்குழு சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஆணைக்குழுவின் உறுப்பினர்களை தன்னிச்சையாக நீக்குவதைத் தடுப்பதற்கான ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றம் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளை நீக்குவதற்கு சமமான நடைமுறையின் மூலம் மாத்திரமே ஆணையாளர்களை நீக்குவதற்கான ஏற்பாடுகளை ஏற்பாடு செய்திருப்பதன் மூலம் அவர்களின் பதவிக்காலம் பற்றிய பாதுகாப்புக் கிடைக்கின்றது. தேவையற்ற அழுத்தங்கள் அல்லது அரசியல் சார்பு அல்லது தன்னிச்சையான முறையில் நீக்குதல் குறித்த அச்சமின்றி தங்கள்

கடமைகளைச் செய்ய முடியும் என்பதை இந்தப் பாதுகாப்பு ஊடாக உறுதி செய்யப்படுகின்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 4(1)(அ)(iii) ஆம் பிரிவின் கீழ் உறவுகள் காரணமாக ஏற்படும் மோதல்களைத் தடுப்பதற்கான ஏற்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் தனது பதவிக்குரிய கடமைகளுக்குப் புறம்பாக ஏதேனும் ஊதியம் பெறும் பணியில் ஈடுபட்டால், சபாநாயகர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவருடன் கலந்தாலோசித்ததன் பின்னர் பிரதமரின் பரிந்துரையின் அடிப்படையில் ஜனாதிபதியின் கருத்திற்கிணங்க ஆணைக்குழுவின் உறுப்பினராக தனது கடமைகளை நிறைவேற்றுவதில் உறவுகள் காரணமாக மோதல்கள் ஏற்பட்டால் அந்த உறுப்பினரை ஆணைக்குழுவிலிருந்து நீக்கலாம் என்ற ஏற்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், அரசியலமைப்பின் 41 ஆ உறுப்புரையின் கீழ் அரசியலமைப்பு பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட நியமன செயல்பாட்டில், ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிகளுக்கு பெயர் குறிப்பிடுபவர்களுக்கு மற்றும் விண்ணப்பதாரிகளுக்கிடையே உறவுகளுக்கிடையிலான மோதல் நிலவுமாயின் அவற்றை வெளிப்படுத்த வேண்டும் என்று அரசியலமைப்பு பேரவையினால் எதிர்பார்க்கப்படுகிறது. அரசியலமைப்பின் பிரிவு 41 ஆ உறுப்புரையின் பிரகாரம், ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்பட்ட ஒரு சுயாதீன உறுப்பினராக அவர்களின் கடமைகளின்போது மோதல்கள் அல்லது மோதல்கள் ஏற்படலாமென நியாயமான வகையில் உணர்ந்துகொள்ள முடியுமான முதலீடுகள், ஒப்பந்தங்கள், கடப்பாடுகள், பொறுப்புக்கள், வாக்குறுதிகள், பணிகள் அல்லது தங்களுடனோ அல்லது தங்கள் வாழ்க்கைத் துணைகளுடனோ அல்லது குழந்தைகளுடனோ உள்ள உறவுகள் ஆகியவை அடங்கும்.

ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மற்றும் ஏனைய அதிகாரிகள் தங்கள் உத்தியோகபூர்வ தன்மையின் அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கான சட்ட ரீதியிலான பொறுப்பு தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் பாதுகாக்கப்படுகிறார்கள். ‘ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர் அல்லது ஆணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரி அல்லது ஊழியர் ஒருவர் இந்த சட்டத்தின் கீழ் நல்லெண்ணத்துடன் மேற்கொண்ட அல்லது செய்யப்படுவதாகக் கூறப்படும் எந்தவொரு செயல் தொடர்பிலும் அந்த அதிகாரி அல்லது ஊழியருக்கு எதிராக அவமதிப்பு குற்றத்தைத் தவிர, ஆணைக்குழுவுக்கு வேறு எந்த வகையிலும் உதவி செய்யும் எந்தவொரு நபருக்கும் எதிராக எந்தவொரு சிவில் அல்லது குற்றவியல் வழக்கும் தொடரப்படக் கூடாது’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அத்தியாயம் 2: ஆணைக்குழுவின் அமைப்பு மற்றும் நிருவாகம்

- 2.1. நிறுவனக் கட்டமைப்பு
- 2.2. ஆணைக்குழுவின் அமைப்பு
- 2.3. ஆளணியின் அமைப்பு
- 2.4. வளாகம் (பிரவேசத்திற்கான வாய்ப்பு)
- 2.5. பணிகளை நிறைவேற்றும் முறைகள்
- 2.6. நிறுவனம் சார்ந்த அபிவிருத்தி
  - **2.6.1.** இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இரண்டு உப அலுவலகங்களை அமைத்தல்
  - **2.6.2.** சர்வதேச உறவுகள் பிரிவை தாபித்தல்
  - **2.6.3.** இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ஒரு துரித பதிலளிப்பு பிரிவொன்றை தாபித்தல்

## 2.1. நிறுவனக் கட்டமைப்பு


ஆணைக்குழுவின் மையமாக தவிசாளர் மற்றும் ஆணையாளர்களை உள்ளடக்கிய ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் சபை காணப்படுகின்றது. ஆணைக்குழுவின் சட்ட ரீதியான அதிகாரத்தை அமுல்படுத்துவதற்காக அது கொள்கை ரீதியிலான தீர்மானங்களை எடுப்பதற்கு இந்த சபை பொறுப்புக் கூறும். சபைக் கூட்டம் மாதாந்தம் நடைபெறும்.


தற்போது ஆணைக்குழு 148 பேர்களைக் கொண்ட ஆளணியுடன் ஆணைக்குழு தனது பணிகளை நிறைவேற்றுகின்றது. விசாரணை மற்றும் புலனாய்வு (I&I), கல்வி மற்றும் விசேட திட்டங்கள் (ED&SP), ஆராய்ச்சி மற்றும் மேற்பார்வை (R&M), நிர்வாகம் மற்றும் நிதி (யுருகு) சர்வதேச விவகாரங்கள்தொடர்புகள் (IA) என ஆணைக்குழுவில் 05 பிரிவுகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு பிரிவுக்கும் பணிப்பாளரொருவர் தலைமை வகிப்பதுடன் தவிசாளர் மற்றும் / அல்லது ஆணையாளரொருவர் / ஆணையாளர்களால் கண்காணிக்கப்படுகின்றது.

இது தவிர, ஆணைக்குழு 11 பிராந்திய அலுவலகங்கள் (அம்பாறை, அனுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கல்முனை, கண்டி, மாத்தறை, திருகோணமலை, மற்றும் வவுனியா) மற்றும் ஆறு (06) உப அலுவலகங்கள் (கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, நுவரெலியா, பொலன்னறுவை மற்றும் புத்தளம்) ஊடாக தனது சேவைகளை வழங்குகின்றது. (பின்னணைப்பு 1 இனைப் பார்க்கவும்.) அனைத்து பிராந்திய அலுவலகங்களும் பிராந்திய ஒருங்கிணைப்பாளரொருவரின் தலைமையில் மற்றும் தவிசாளர் மற்றும் / ஆணையாளரொருவர் / ஆணையாளர்களின் மேற்பார்வையின் கீழ் செயற்படுகின்றன. 2023 இல் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சப்ரகமுவ மாகாணத்திற்கும் தனது வலையமைப்பை விரிவுபடுத்தி இரத்தினபுரியில் புதிய உப அலுவலகமொன்றை அமைத்து தனது பணிகளை ஆரம்பித்துள்ளது. ஆணைக்குழுவினால் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் பணிகளை அதிகரிப்பதற்கு மற்றும் ஆணைக்குழுவின் அலுவல்களை மக்களிடம் கொண்டு செல்வதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழு பிரதேச மட்டத்தில் செயற்படுகின்றது. மக்களில் அநேகமானோர் பிராந்திய மற்றும் உப அலுவலகங்களினூடாக ஆணைக்குழுவை நாடுகின்றனர். எனவே ஆணைக்குழுவின் பணிப்புக்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்தும்போது தலைமை அலுவலகம் மற்றும் பிரதேச ரீதியாக வாழும் மக்களிடையே சாதாரண இணைப்பையும் தாண்டி பிராந்திய மற்றும் உப அலுவலகங்களினால் முக்கியமான அலுவல்கள் நிறைவேற்றப்படுகின்றன. முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளல் மனித உரிமைகள் மீறப்படல் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளல், மனித உரிமைகள் சட்ட விரோதமான முறையில் மீறப்படலுக்கு எதிராக அறிவுறுத்தல்களை வழங்குதல், பிணக்குகளைத் தீர்ப்பதற்கான தலையீட்டை

மேற்கொள்ளல், மனித உரிமை மீறல்கள் தொடர்பான பரிந்துரைகளை தலைமை அலுவலகத்திற்கு வழங்குதல், மேற்பார்வை அலுவல்களை மேற்கொள்ளல், பிரதேச மட்டத்தில் வழிப்புணர்வூட்டலை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல், சிவில் அமைப்புக்களுடன் ஒத்துழைப்புடன் நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளல் உள்ளிட்ட விரிவான வகையில் நடவடிக்கைகளை இந்த அலுவலகங்கள் மேற்கொள்கின்றன.

## மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நிறுவனக் கட்டமைப்பு






இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகங்களின் நிறுவனக் கட்டமைப்பு

## 2.2. ஆணைக்குழுவின் அமைப்பு

இலங்கை ஒரு பன்முக கலாச்சார, பல்லின மற்றும் பல மதங்களைக் கொண்ட ஒரு நாடாகும். இலங்கை சமூகத்தில் உள்ள பல்வேறு சமூகங்களுக்கான பிரதிநிதித்துவ அமைப்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு செயற்படுவதற்குப் பாடுபடுகிறது. அரசியலமைப்பின் 41 ஆ (3) உறுப்புரை ஊடாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அமைப்பில் பன்முகத் தன்மை உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், அதில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது: *'இந்த உறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்படும் ஆணைக்குழுக்களின் தவிசாளர்களாக அல்லது உறுப்பினர்களாக நியமனம் செய்வதற்கான தகுதியான மற்றும் உகந்த ஆட்களை அத்தகைய நியமனத்துக்கான சந்தர்ப்பம் எழுகின்ற போதெல்லாம் சனாதிபதிக்கு விதந்துரைத்தல் பேரவையின் கடமையாதல் வேண்டுமென்பதோடு, அத்தகைய விதப்புரைகள்* ***பால் சமத்துவம் உட்பட இலங்கை சமூகத்தின் பல்லின சமுதாயங்களைப் பிரதிபலிக்கின்றது*** *என்பதனை உறுதிப்படுத்துவதற்கு முயற்சித்தலும் வேண்டும். அத்தகைய ஆணைக்குழுக்களின் தவிசாளர்களின் விடயத்தில் பேரவையானது (அரசியலமைப்பு பேரவை) நியமனம் செய்வதற்காக மூன்று ஆட்களின் பெயர்களை விதந்துரைத்தல் வேண்டுமென்பதோடு, சனாதிபதி விதந்துரைக்கப்பட்ட ஆட்களில் ஒருவரைத் தவிசாளராக நியமித்தலும் வேண்டும்.* (அவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது).

இது தவிர, ஆணைக்குழு, *'மனித உரிமைகளுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பில் அறிவு அல்லது நடைமுறை அனுபவம் உள்ளவர்களிடையே தெரிவு செய்யப்படும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும்'* என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 3(1) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், "....... இன் கீழ் பரிந்துரைக்கும்போது அரசியலமைப்பு பேரவை ஆணைக்குழுவில் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்தின் தேவையை கருத்தில் கொள்ள வேண்டும்" என அந்த சட்டத்தில் 3 (3) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தற்போதைய அமைப்பு ஊடாக பன்மைத்துவம் மற்றும் பன்முகத்தன்மை மற்றும் அனைவரும் உள்ளடக்கப்படல் ஆகிய கோட்பாடுகள் பிரதிபலிக்கப்படுகின்றது. அதன் தற்போதைய தவிசாளரான நீதிபதி திரு. லக்ஃமன் தெஹிதெனிய அவர்கள் பல தசாப்த கால தொழில்முறை வாழ்க்கையில் விரிவான அனுபவமுள்ள ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசராவார். ஆணைக்குழு தற்போது நீதியரசர் திரு. லக்ஷ்மன் தெஹிதெனிய அவர்களின் தலைமையில் செயல்படுகிறது. பேராசிரியர் திருமதி பர்சானா ஹனிபா அவர்கள் பாலின சமூக நிலை மற்றும் மதம் உள்ளிட்ட மனித உரிமைகள் பற்றிய கருப்பொருள்கள் மற்றும் விடயப் பிரிவுகளில் நிபுணத்துவம் மற்றும் அனுபவமுள்ள ஒரு அறிஞர் ஆவார். அவர் ஆணைக்குழுவின் ஆராய்ச்சி மற்றும் மேற்பார்வை பிரிவின் பணிகளை மேற்பார்வையிடுகிறார். கல்வி மற்றும் கல்வி சீர்திருத்தங்களில் சிறப்பான பின்னணியைக் கொண்ட பேராசிரியர் திரு. தையமுத்து தனராஜ் அவர்கள் கல்வி மற்றும் விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் பிரிவை மேற்பார்வையிடுகிறார். சட்டத்தரணியான திரு.

நிமல் புஞ்சிஹேவா இலங்கை தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளரும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் மேலதிக செயலாளருமாவார். எனவே, சுயாதீன நிறுவனங்களில் கடமைகளைச் செய்வதில் அவருக்கு பரந்த அனுபவம் உண்டு. அவர் விசாரணை மற்றும் புலனாய்வுப் பிரிவை மேற்பார்வையிடுகிறார். கலாநிதி திரு. கெஹான் குணதிலக்க அவர்கள் ஆராய்ச்சி, வழக்கு நடவடிக்கைகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளுடன் ஒத்துழைப்புடன் பணியாற்றுவதில் பல வருட அனுபவமும் கொண்ட சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் அரசியலமைப்புச் சட்டத்தில் நிபுணத்துவம் பெற்ற சட்டத்தரணி ஆவார். அவர் சர்வதேச விவகாரங்கள் பிரிவின் பணிகளை மேற்பார்வையிடுகிறார். அதன்படி, ஒவ்வொரு உறுப்பினரும் தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் மனித உரிமைகள் துறையில் விரிவான அறிவுசார் மற்றும் நடைமுறை அனுபவத்தைக் கொண்டுள்ளனர்.

இந்த அமைப்பு ஊடாக பாலினம், இனம் மற்றும் மத பன்முகத்தன்மையை பின்வருமாறு பிரதிபலிக்கிறது:

| பெயர் | பாலினம் | இனம் | மதம் |
|---|---|---|---|
| 1. நீதிபதி திரு. லக்‘மன் தெஹிதெனிய | ஆண் | சிங்களம் | பௌத்தம் |
| 2. பேராசிரியர் திருமதி பர்சானா ஹனிபா | பெண் | முஸ்லிம் | இஸ்லாம் |
| 3. பேராசிரியர் திரு. தையமுத்து தனராஜ் | ஆண் | தமிழ் | இந்து |
| 4. திரு. நிமல் புஞ்சிஹேவா | ஆண் | சிங்களம் | பௌத்தம் |
| 5. கலாநிதி திரு. கெஹான் குணதிலக்க | ஆண் | சிங்களம் | கத்தோலிக்கம் |

## 2.3. *ஆளணியின் அமைப்பு*

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு குறிப்பிட்ட சட்டரீதியான கட்டுப்பாடுகள் எதுவும் விதிக்கப்படவில்லை. நிதி அமைச்சு, முகாமைத்துவ சேவைகள் மேலாண்மை சேவைகள் திணைக்களத்துடன் கலந்தாலோசித்து ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின்படி ஆளணிக்கான பதவிகள் உருவாக்கப்படுகின்றன மற்றும் வெற்றிடங்கள் நிரப்பப்படுகின்றன. அனைத்து நேர்முகப் பரீட்சைகள், தேர்வுகள் மற்றும் ஆட்சேர்ப்புகளும் ஆணைக்குழுவினால் நேரடியாக மேற்கொள்ளப்படுகின்றன. பொதுவாக அனைத்து ஆட்சேர்ப்புகளையும் நிறுத்துமாறு அரசாங்கத்தினால் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தபோதிலும், சட்ட அலுவலர்கள் மற்றும் மனித உரிமைகள் அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு ஆணைக்குழுவுக்கு சிறப்பு அங்கீகாரத்தை வழங்குவதற்கு அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டது.

அதனூடாக ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தடையற்ற விதத்தில் மேற்கொள்ளப்படுதல் உறுதிப்படுத்தப்படுவதுடன், சேவைகளின் அவசரத் தேவைப்பாடும் கவனத்திற்கொள்ளப்படும்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 25 ஆம் பிரிவிற்கமைய தற்காலிகமாக ஒரு குறிப்பிட்ட காலப் பகுதிக்காக அரச அலுவலர்களை இரண்டாம் நிலை அடிப்படையில் பணியமர்த்துவதற்காக கோருவதற்கும், விசேட சூழ்நிலைகளின் கீழ் அவர்களை நிரந்தர அடிப்படையில் நியமித்துக்கொள்வதற்கும் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் கிடைக்கின்றது. தற்போது, பதினைந்து அரச அதிகாரிகள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இரண்டாம் நிலை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளதுடன், இது மொத்த ஆளணியில் 10.1 சதவீதம் ஆகும். இரண்டாம் நிலை அடிப்படையில் பணியமர்த்துவதற்காக விடுவிக்கப்படும் ஒருவரால் நிரப்பப்படும் ஒரே சிரேஷ்ட மட்டப் பதவி பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) மாத்திரமாகும்.

தனது ஆளணியில் பன்மைத்துவம், பன்முகத்தன்மை மற்றும் அனைவரும் உள்ளடக்கப்படுதல் ஆகிய கோட்பாடுகளை மேம்படுத்துவதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. அனைத்து சமூகங்களிலும் பிரதேச மற்றும் தேசிய பிரதிநிதித்துவத்தை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 2023 ஜூன் மாதம் திறந்த அடிப்படையில் சட்ட அலுவலர்கள் மற்றும் மனித உரிமைகள் அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்களைக் கோரியது. ஆட்சேர்ப்பு செயற்பாட்டில், பாலினம், இனம் மற்றும் மதம் தொடர்பான பன்முகத்தன்மை மற்றும் இயலாமையுடையோரின் பிரதிநிதித்துவம் தொடர்பாக சிறப்புக் கவனம் செலுத்தப்படும். ஆணைக்குழுவின் நிரந்தர ஆளணியில் பாலினம் மற்றும் இனப் பகிர்வு பின்வருமாறு காணப்படுகின்றது:

| பிரிவுகள் | மொத்த ஆளணி அங்கத்தவர்கள் (தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்கள்) | சதவீதம் |
|---|---|---|
| ஆண் | 82 | 55% |
| பெண் | 67 | 45% |

பாலின அடிப்படையிலான நிரந்தர ஆளணி

| பிரிவுகள் | மொத்த ஆளணி அங்கத்தவர்கள் (தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்கள்) | சதவீதம் |
|---|---|---|
| சிங்களம் | 116 | 77.9% |
| தமிழ் | 24 | 16.1% |
| முஸ்லிம் | 09 | 6.0% |

இன அடிப்படையிலான நிரந்தர ஆளணி

## 2.4. வளாகம் (பிரவேசத்திற்கான வாய்ப்பு)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதான வளாகம், இல 14, ஆர்.ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 04 இல் அமைந்துள்ள 7 மாடிகளைக் கொண்டுள்ள தலைமை அலுவலகம் ஆகும்.

ஆணைக்குழுவை பொதுமக்களுடன் நெருங்கிய வகையில் செயற்படச் செய்வதற்காக இலங்கை பூராவும் பரந்த அளவிலான உள்ளடக்கத்தை உறுதி செய்வதற்கான இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அர்ப்பணிப்பின் ஒரு பகுதியாக முக்கியமாக 2009 இல் முடிவடைந்த இலங்கையில் மோதல்களால் பாதிக்கப்பட்ட பகுதிகள் உள்ளடங்கலாக முக்கிய பகுதிகளில் பிராந்திய அலுவலகங்கள் மற்றும் துணை அலுவலகங்களின் வலையமைப்பு நிறுவப்பட்டுள்ளது (மேலே 2.1 ஐப் பார்க்கவும்). இந்த நடவடிக்கைகள் மூலம், மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும், அதன் பணிகளை அனைத்து சமூகங்களுக்கும், குறிப்பாக இன சிறுபான்மையினருக்கும் அணுகக்கூடியதாக ஆக்குவதற்குமான அதன் அர்ப்பணிப்பை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

தலைமை அலுவலகம் அல்லது பிராந்திய அல்லது உப அலுவலகங்களுக்கு நேரில் வருகை தந்து முறைப்பாடுகளை முன்வைத்தல், ஆணைக்குழுவின் 24 மணி நேரமும் செயற்படுகின்ற 1996 ஆம் இலக்க தொலைபேசி இலக்கத்தினூடாக முறைப்பாடுகளை முன்வைத்தல் (https://www.hrcsl.lk/make-a-complaint/complaint-form) அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைபேசி மூலம் ஒரு அதிகாரியையோ தொடர்புகொள்வதன் மூலமோ பொதுமக்களுக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகங்களுடன் தொடர்பு கொள்வதற்கு முடியும். மின் தூக்கி (லி∴ப்ட்) மற்றும் சக்கர நாற்காலிகளை பராமரித்துப் பேணி வருவதன் மூலம் இயலாமையுடைய நபர்களுக்கும் இலகுவான மற்றும் வசதியான அணுகலுக்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்களிடையே எந்த ஒருவருக்கும் தங்கள் முறைப்பாடுகளை அரச கரும மொழிகளில் (சிங்களம் அல்லது தமிழ்) ஒன்றில் அல்லது ஆங்கிலத்தில் சமர்ப்பிப்பதற்கு முடியும். பின்னர் முறைப்பாட்டாளர் விரும்பும் மொழியிலேயே முறைப்பாடு தொடர்பான விடயங்கள் நடாத்தப்படுவதுடன், பொருத்தமான சந்தர்ப்பங்களில் முறைப்பாட்டை விசாரிக்கும்போது சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு மிகவும் வசதியான மொழியில் முறைப்பாடுகள் விசாரிக்கப்படும்.

## 2.5. பணிகளை நிறைவேற்றும் முறைகள்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் 2017 - 2019 மற்றும் 2020 - 2022 காலப் பகுதிக்கான மூலோபாயத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டதுடன், மேலும் 2024 - 2026 காலப் பகுதிக்கான புதிய திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. ஆணைக்குழுவினால் தற்போது இந்தத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக ஐக்கிய நாடுகள் அமைப்பின் அபிவிருத்தித்

திட்டத்தின் (UNDP) ஊடாக வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான கலந்துரையாடல்களிலும் ஆணைக்குழு ஈடுபட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் பிரதான பகுதிகளாக இற்றைப்படுத்தப்பட்ட தூர நோக்கு மற்றும் பணிக் கூற்று, ஒரு ஞுறுழுவு பகுப்பாய்வு, ஆபத்துக்கள் குறைப்பு உத்திகள், ஆணைக்குழுவின் மூலோபாய முன்னுரிமைகள், இலக்குகள், மூலோபாயங்கள், செயல்பாடுகள் மற்றும் முக்கிய செயலாற்றுகை குறிகாட்டிகள் தொடர்பான பகுதி மற்றும் வருடாந்த செயல்பாட்டுத் திட்டங்களை எவ்வாறு தயாரிப்பது என்பது குறித்த ஒரு பகுதி ஆகியவை உள்ளடங்கும்.

- **உரிய காலப் பகுதிகளில் நடாத்தப்படும் கூட்டங்கள்**

திட்டமிடல் மற்றும் மூலோபாயக் கூட்டத்திற்காக ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் தற்போது மாதத்திற்கு ஒரு முறை கூடுவதுடன், அதற்குப் புறம்பாக ஆணைக்குழுவின் சபையும் மாதத்திற்கு ஒரு முறை கூடுகிறது. திட்டமிடல் மற்றும் மூலோபாயக் கூட்டத்தில் ஆணைக்குழு உறுப்பினர்கள் மாத்திரம் ஒன்றுகூடுவதுடன், முக்கியமான, குறிப்பிடத்தக்க மற்றும் செயல்முறை தொடர்பான விடயங்கள் மாத்திரமே இங்கு பொதுவாக கலந்துரையாடப்படுகின்றன. ஆணைக்குழுவின் சபைக் கூட்டத்தின்போது நிர்வாகம் மற்றும் நிதி சார்ந்த விடயங்களுடன் தொடர்புடையதைப் போன்றே முக்கியமான நிகழ்ச்சித் திட்டங்களுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பிலும் முறையான தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்து ஆணைக்குழுவின் செயலாளர் சபைக் குறிப்புக்களைத் தயாரிக்கின்றார். செயலாளர் எப்போதும் இதில் கலந்துகொள்வதுடன் பணிப்பாளர்கள் (தேவைக்கேற்ப) இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வார்கள்.

- **செயற்பாட்டுக் குழுக்கள்**

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வரலாற்று ரீதியாகவும் ஒட்டுமொத்தமாகவும் பாகுபாடு மற்றும் ஓரங்கட்டப்படுதலால் பாதிக்கப்பட்ட சமூகங்கள் தொடர்பான பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதற்காக கருப்பொருள் சார்ந்த உப குழுக்களை அமைத்துக்கொண்டுள்ளது. இந்த உப குழுக்களுக்கு ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் தலைமை வகிப்பதுடன், சிவில் சமூக அமைப்புக்கள், செயற்பாட்டாளர்கள், நிபுணர்கள் மற்றும் கல்வியாளர்கள் அதன் அங்கத்தவர்களாவர். உப குழுக்களின் பணி விதிமுறைகள் பின்வருமாறு: ‘1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 10 இன் கீழ் வழங்கப்பட்டுள்ள தத்துவத்திற்கமைய, இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட வேண்டிய கொள்கை சார்ந்த தலையீடுகள் குறித்த பரிந்துரைகளை வழங்குவதற்காக, ஒவ்வொரு கருப்பொருளுடனும் தொடர்புடைய சட்ட ரீதியிலான சட்டங்கள், கொள்கைகள் மற்றும் அதிகாரப்பூர்வ நடைமுறைகளை மதிப்பாய்வு செய்தல். மேலும், சர்வதேச மனித உரிமைகள் பொறிமுறைகளுக்குத் தேவையான பிரதிநிதித்துவங்களை வழங்குதல் தொடர்பான கருப்பொருள்கள் குறித்து உப குழுக்கள் ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.’

கொவிட் -19 தொற்று நோய் நிலைமை மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக, இந்த உப குழுக்கள் தமது தொடர்ச்சியான

செயற்பாடுகளில் ஈடுபடுவதனை சவாலுக்கு உள்ளாக்கியதுடன், இந்த உப குழு முறை தற்போது செயற்பாட்டில் இல்லை. இருப்பினும், ஆணைக்குழுவின் தற்போதைய உறுப்பினர்கள் இந்த உப குழு முறையை துரிதமாக செயற்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதுடன் புதிதாக நியமிக்கப்பட்ட உப குழுக்கள் உரிய காலப் பகுதிகளில் கூட்டங்களைக் கூடி அவற்றின் கருப்பொருள் சார்ந்த துறைகளுக்குப் பொருத்தமான தற்போதைய தேசிய சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் கட்டளைகள் குறித்த தங்கள் கருத்துகள், பரிந்துரைகள் மற்றும் தொலைநோக்குப் பார்வைகளைப் பகிர்ந்து கொள்வதனை உறுதி செய்யும்.

## 2.6. *நிறுவனம் சார்ந்த அபிவிருத்தி*

### *2.6.1. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இரண்டு உப அலுவலகங்களை அமைத்தல்*

தோட்டத் தொழிலாளிகளாக இருக்கும் மக்களுக்கு நியாயத்திற்கான அணுகல் மற்றும் ஆணைக்குழுவுக்கான அணுகலை மேம்படுத்துவதற்காக துருசுநு திட்டத்தினூடாக வழங்கப்பட்ட நிதியுதவியின் அடிப்படையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் இரத்தினபுரி மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் உப அலுவலகங்கள் அமைக்கப்பட்டதனூடாக அதன் பிராந்திய அலுவலக வலையமைப்பு விரிவுபடுத்தப்பட்டது. நுவரெலியா மாவட்டத்திற்கான உப அலுவலகம் ஹட்டனில் அமைக்கப்பட்டுள்ளதுடன், அது *2023.09.26* ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இரத்தினபுரி மாவட்டத்திற்கான உப அலுவலகம் *2023.12.01* ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. தற்போது செயற்பாட்டு நிலைமையிலுள்ள இந்த உப அலுவலகங்களுக்காக 02 கருத்திட்ட உதவியாளர்கள் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

### *2.6.2. சர்வதேச விவகாரங்கள் பிரிவை தாபித்தல்*

தேசிய சட்டங்களை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்தல் சர்வதேச மனித உரிமைகள் தரநிலைகளுடன் இயைந்திருப்பதனை உறுதி செய்வதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 10 (ஈ) (உ) பிரிவுகளுக்கமைய ஆணைக்குழுவினால் அரசாங்கத்திற்கு ஆலோசனை மற்றும் பரிந்துரைகளை வழங்குவதற்கு முடியும். இந்த நோக்கத்தை அடைந்துகொள்வதற்காக 2023 ஜூன் மாதத்தில் சர்வதேச விவகாரங்கள் பிரிவு நிறுவப்பட்டு அதன் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. சர்வதேச மனித உரிமைகள் பொறிமுறைகளுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்; பிராந்திய மற்றும் சர்வதேச அமைப்புகளுக்கு அறிக்கைகளை சமர்ப்பித்தல் இந்தப் பொறிமுறைகளுடன் ஆக்கபூர்வமான உறவுகளை கட்டியெழுப்புதல் மற்றும் இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் தொழில்நுட்ப உதவியைப் பயன்படுத்துவதற்கு இந்தப் பிரிவுக்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சர்வதேச விவகாரங்கள் பிரிவின் முக்கிய அலுவல்களாவன:

(அ) சர்வதேச சாசன அமைப்புகளுக்கு தேவையான அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பித்தல்.

(ஆ) உள்நாட்டில் சர்வதேச பொறுப்புக்களை செயல்படுத்துவதற்கான சட்ட நடவடிக்கைகளுக்கான பரிந்துரைகளை வழங்குதல்.

(இ) பிராந்திய மற்றும் சர்வதேச மனித உரிமைகள் பொறிமுறைகளுடன் ஒருங்கிணைத்தல்

### *2.6.3.இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ஒரு துரித பதிலளிப்பு பிரிவொன்றை தாபித்தல்*

நாட்டில் மனித உரிமைகள் மீறப்படுகின்ற பாரிய நிகழ்வுகள் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் சுய வழிநடாத்தலின் கீழ் (சொந்தப் பிரேரணை) ஆரம்பிக்கப்படும் விசாரணைகளுடன் (*ளரழ அழவர* உயளநள) தொடர்புடைய தீர்வுகள் மற்றும் பரிந்துரைகளை வழங்கும் நோக்குடன் விசாரணைகள் மற்றும் புலனாய்வுப் பிரிவின் கீழ் 2023 ஆம் ஆண்டில் துரித பதிலளிப்புப் பிரிவு (சுசுரு) தாபிக்கப்பட்டது. விசாரணைகள் மற்றும் புலனாய்வுப் பிரிவுக்குப் பொறுப்பான ஆணையாளரின் நேரடி மேற்பார்வை மற்றும் அதன் பணிப்பாளரின் பணிப்பின் கீழ் துரித பதிலளிப்புப் பிரிவு செயற்படுகின்றது. (மேலதிக விபரங்களுக்கு 4.3 ஐப் பார்க்கவும்.)

## *அத்தியாயம் 3: இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் புள்ளி விபரங்கள்*

*3.1. கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் பற்றிய புள்ளிவிபரங்கள்*
*3.2. 2023 இல் விசாரணைகள் நிறைவு செய்யப்பட் வழக்குகள் பற்றிய விபரம்*
*3.3. பரிந்துரைகள்*
*3.4. கண்காணிப்பு விஜயங்கள்*


## 3.1. கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் பற்றிய புள்ளிவிபரங்கள்

மொத்தமாக 2023 ஆம் ஆண்டில் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு மொத்தம் 9,714 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இது 2022 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற 9,219 முறைப்பாடுகளுடன் ஒப்பிடும்போது முன்னைய ஆண்டைப் பார்க்கிலும் 5மூ அதிகரிப்பை காட்டுகின்றது. இந்த முறைப்பாடுகள் தலைமை அலுவலகத்திற்கும் பிராந்திய அலுவலகங்களுக்கும் கிடைக்கப்பெற்றவையாகும். முன்னைய ஆண்டுகளைப் போன்றே எந்தவொரு தனியான முறைப்பாடுகள் பிரிவுடன் தொடர்புடையதாக கிடைக்கப்பெற்றுள்ள அதிக எண்ணிக்கை முறைப்பாடுகள் (2253), அதாவது கிடைக்கப்பெற்ற மொத்த முறைப்பாடுகளில் 23மூ தனிப்பட்ட சுதந்திரம் மீறப்படுதலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளாகும். தன்னிச்சைக் கைதுகள் மற்றும் தடுத்து வைப்புக்கள் தொடர்பான (முறைப்பாடுகள் - 987), துன்புறுத்தல்கள் (முறைப்பாடுகள் - 560), கைதின்போதான சித்திரவதை உள்ளிட்ட சித்திரவதைகள் (முறைப்பாடுகள் - 546) தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. ஒட்டுமொத்தமாக தனிப்பட்ட சுதந்திரம் மீறப்படுதல் சம்பந்தமான முறைப்பாடுகள் முன்னைய ஆண்டினைப் போன்றே சமமான அளவில் (2,228) இந்த ஆண்டிலும் அறிக்கைப்படுத்தப்பட்டன.

முந்தைய ஆண்டைப் பார்க்கிலும் 2023 ஆம் ஆண்டில் இரண்டாவதாக அதிகபட்ச முறைப்பாடுகள் வேலைவாய்ப்புடன் தொடர்பானவையாகுமென்பதோடு, முந்தைய ஆண்டுகளில், அரச நிறுவனங்கள் தங்கள் கடமைகளைச் செய்யும்போது மந்த கதியில் செயற்படல் தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. 2023 ஆம் ஆண்டில், வேலைவாய்ப்பு தொடர்பான பிரச்சினைகள் தொடர்பாக ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்றிருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 1,774 ஆகுமென்பதோடு, அரச நிறுவனங்கள் தங்கள் கடமைகளைச் செய்யும்போது மந்த கதியில் செயற்படல் குறித்து பெறப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 1,686 ஆகும். இவற்றில், பொலீஸுக்கு எதிராக 904 முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டிருந்ததுடன், 2022 ஆம் ஆண்டில் அவ்வாறு பொலீஸுக்கு எதிராக 1,267 முறைப்பாடுகள் கிடைத்திருந்தன. மேலும், ஏனைய அரச நிறுவனங்கள் தங்கள் கடமைகளைச் செய்யும்போது மந்த கதியில் செயற்படல் குறித்து பெறப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 782 ஆகும்.

மொத்த முறைப்பாடுகளில் 45மூஇ அதாவது 4,429 முறைப்பாடுகள், பிராந்திய அலுவலகங்களுக்கு கிடைத்துள்ளதுடன் மீதி 55மூ - அதாவது 5,285 முறைப்பாடுகள் நேரடியாக தலைமை அலுவலகத்திற்கு கிடைத்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் தலைமை அலுவலகத்திற்கு கிடைத்துள்ள

முறைப்பாடுகளின் எண்ணிக்கை 3,813 ஆகுமென்பதோடு, அதனுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு பெறப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கையில் சிறிது அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.




**2023 இல் ஒவ்வொரு பிரிவுக்கும் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கையை 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்தல்**


**இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு**
**தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் பற்றிய விபரம் - 2023**

| முறைப்பாட்டின் வகை | பிராந்தியம் | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அம்பாறை | அனுராதபுரம் | பதுளை | மட்டக்களப்பு | யாழ்ப்பாணம்∴ கிளிநொச்சி | கல்முனை | கண்டி | மாத்தறை | திருகோணமலை | வவுனியா / மன்னார் | புத்தளம் | பிராந்திய அலுவலகம் | தலைமை அலுவலகம் | மொத்தம் |
| **தனிப்பட்ட சுதந்திரம்** | 31 | 181 | 34 | 43 | 143 | 28 | 93 | 220 | 36 | 56 | 92 | 957 | 1296 | 2253 |
| (அ) துன்புறுத்தல் ( உடல் மற்றும் உள ரீதியிலான) | 10 | 54 | 1 | | 27 | 1 | 34 | 44 | 2 | 18 | 10 | 201 | 345 | 546 |
| (ஆ)கீழ்த்தரமாக கவனித்தல் | | | | | 16 | 1 | | 4 | 1 | | | 22 | | 22 |
| (இ) துன்புறுத்தல்கள் | 4 | 13 | 10 | 28 | 38 | 9 | 42 | | 18 | 24 | 28 | 214 | 346 | 560 |
| (ஈ) அச்சுறுத்தல்கள் | | 4 | | | 31 | 2 | 6 | 30 | | | | 73 | | 73 |
| (உ) பாலியல் துன்புறுத்தல்கள் | | | | | | | | | | | 1 | 1 | 3 | 4 |
| (ஊ) தன்னிச்சையான கைது ∴ தடுத்துவைத்தல் | 17 | 110 | 22 | 14 | 30 | 15 | 8 | 135 | 14 | 13 | 53 | 431 | 556 | 987 |
| (எ) கைதியாக இருக்கையில் மரணித்தல்ழூ | | | 1 | | | | 3 | 2 | 1 | 1 | | 8 | 16 | 24 |
| (ஏ) நீதிக்குப் புறம்பான கொலைகள்ழூ | | | | 1 | 1 | | | 1 | | | | 3 | 12 | 15 |
| (ஐ) கைதிகளின் உரிமைகள் | | | | | | | | 4 | | | | 4 | 18 | 22 |
| **ஏனைய சிவில் மற்றும் அரசியல் உரிமைகள்** | 1 | 2 | | 6 | 9 | | | | 1 | 1 | | 20 | 8 | 28 |

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **தொழில் சார்ந்த** | 62 | 97 | 80 | 66 | 50 | 41 | 147 | 117 | 22 | 38 | 74 | 794 | 980 | 1774 |
| **கல்வி சார்ந்த** | 3 | 12 | 11 | 27 | 13 | 17 | 48 | 32 | 5 | | 14 | 182 | 182 | 364 |
| **அரச நலனோம்புகை சேவைகள்** | 5 | 5 | 5 | | 11 | 4 | | 13 | 2 | 2 | | 47 | 16 | 63 |
| **உட்கட்டமைப்பு மற்றும் பயன்பாடுகள்** | 1 | | 7 | | 6 | | 8 | 12 | | 2 | | 36 | 50 | 86 |
| **வாக்காளர் பதிவு தொடர்பான முறைப்பாடுகள்** | 50 | | | | | | 1 | | | 2 | | 53 | 20 | 73 |
| **அரச நிறுவனங்களின் செயற்பாடின்மை பற்றிய முறைப்பாடுகள்** | 50 | 232 | 45 | 223 | 106 | 62 | 222 | 61 | 39 | 74 | 73 | 1187 | 499 | 1686 |
| (அ) பொலீஸ் | 16 | 70 | 39 | 139 | 71 | 43 | 73 | 30 | 30 | 45 | 51 | 607 | 297 | 904 |
| (ஆ) ஏனைய அரசாங்க நிறுவனங்கள் | 34 | 162 | 6 | 84 | 35 | 19 | 149 | 31 | 9 | 29 | 22 | 580 | 202 | 782 |
| சிறுவர் உரிமைகள் | | | | | 14 | 14 | 1 | | | | 1 | 30 | 4 | 34 |
| **இயலாமையுடையோரின் உரிமைகள்** | | | 1 | | 1 | 2 | | | | | | 4 | 1 | 5 |
| **மொழி சார்ந்த உரிமைகள்** | | | | | | 3 | | | 2 | | 2 | 7 | | 7 |
| **புலம் பெயர்ந்துள்ள ஊழியர்களின் உரிமைகள்** | | 6 | 1 | 2 | | 2 | | | 2 | 1 | | 14 | 14 | 28 |
| **டுபுடீவு உரிமைகள்** | | | 1 | | 9 | 1 | 2 | 18 | | | | 31 | 71 | 102 |
| **சுகாதாரம் சார்ந்த உரிமைகள்** | | 3 | 1 | | 4 | 2 | | 1 | | | | 11 | 19 | 30 |
| **காணிகள் மற்றும் சொத்துரிமைகள்** | 17 | 47 | 59 | 2 | 40 | 11 | 14 | 28 | 11 | 28 | 66 | 323 | 255 | 578 |
| **சூழல் சார்ந்த உரிமைகள்** | | 3 | | 2 | 2 | 6 | 2 | 11 | | | 3 | 29 | 17 | 46 |
| **நிர்வாகம் சார்ந்த விடயங்கள்** | 2 | | 20 | | 6 | | 211 | 80 | 22 | 20 | 53 | 414 | 99 | 513 |
| **பெண்கள் உரிமைகள்** | | | | | | 2 | | 1 | | | | 3 | | 3 |

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **ஏனையவை (ஆணைக்குழுவின் அதிகார வரம்பிற்குள் உள்ளடக்கப்படாத முறைப்பாடுகள் உள்ளிட்ட)** | | 78 | 32 | 4 | 18 | 6 | 1 | 133 | 5 | 2 | | 279 | 1749 | 2028 |
| (அ) ஏனைய நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தல் | | | | | 8 | | | | | | | 8 | | 8 |
| வயதுவந்தோர் உரிமைகள் | | | | | | | | | | | | | 1 | 1 |
| மத உரிமைகள் | | | | | | | | | | | | | 4 | 4 |
| **மொத்தம்** | 222 | 666 | 297 | 375 | 432 | 201 | 750 | 727 | 147 | 226 | 378 | 4429 | 5285 | **9714** |

**ஏழு - தடுத்துவைத்திருக்கும் போது மரணித்த 14 நிகழ்வுகள் தொடர்பாக ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்திற்கு 16 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.**
**ஏழு - நீதிமன்ற செயற்பாடுகளுக்குப் புறம்பான வகையில் கொலை செய்யப்பட்ட 09 நிகழ்வுகள் தொடர்பாக ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்திற்கு 12 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.**


2023 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகள்
2500
2000
1500
1000
500
0
தனிப்பட்ட சுதந்திரம்
றும் அரசியல் உரிமைகள்
தொழில் சார்ந்த
கல்வி சார்ந்த
அரச நலனோம்புகை சேவைகள்
உட்கட்டமைப்பு மற்றும் பயன்பாடுகள்
வாக்காளர் பதிவு
அரச நிறுவனங்களின் செயற்பாடின்மை
சிறுவர் உரிமைகள்
வயதுவந்தோர் உரிமைகள்
இயலாமையுடையோரின் உரிமைகள்
மொழி சார்ந்த உரிமைகள்
புலம் பெயர்ந்துள்ள ஊழியர்களின் உரிமைகள்
பாலின மாற்றத்திற்குட்படுபவர்களின் உரிமைகள்
சுகாதாரம் சார்ந்த உரிமைகள்
காணிகள் மற்றும் சொத்துரிமைகள்
கலாசார உரிமைகள்
சூழல் சார்ந்த உரிமைகள்
நிர்வாகம் சார்ந்த விடயங்கள்
பெண்கள் உரிமைகள்

## 3.2. *2023 இல் விசாரணைகள் நிறைவு செய்யப்பட்ட முறைப்பாடுகள் பற்றிய விபரம்*

| வகைப்படுத்தல் | அம்பாறை | அனுராதபுரம் | பதுளை | மட்டக்களப்பு | யாழ்ப்பாணம், கிளிநொச்சி | கண்டி | கல்முனை | மாத்தறை | திருகோணமலை | வவுனியா | மன்னார் | புத்தளம் | பிராந்திய அலுவலகங்கள் | தலைமை அலுவலகம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இணக்கம் ஏற்படுத்தப்படல் | 12 | 77 | 48 | 17 | 183 | 39 | 10 | 18 | 14 | 37 | 5 | 35 | 495 | 63 | 558 |
| அடிப்படை உரிமை மீறல்கள் ஏற்படாமை | 74 | 199 | 105 | 133 | 93 | 278 | 19 | 191 | 64 | 57 | 6 | 25 | 1244 | 337 | 1581 |
| வாபஸ் பெறல் | 6 | 11 | 6 | 7 | 5 | 18 | -- | 27 | 4 | 17 | | 51 | 152 | 216 | 368 |
| ஆர்வம் காட்டாமை | 60 | 129 | 16 | 71 | 34 | 175 | 26 | 186 | 49 | 49 | 11 | 57 | 863 | 1441 | 2304 |
| விடயப் பரப்புக்குள் உள்ளடக்கப்படாமை | 65 | | 56 | | 20 | 4 | 2 | 164 | 5 | 3 | | 05 | 324 | 437 | 761 |
| நிவாரணம் வழங்கப்பட்ட | 50 | 128 | 23 | 266 | 39 | 102 | 47 | 79 | 28 | 27 | | 41 | 830 | 257 | 1087 |
| நிறைவடையாத நீதிமன்ற செயற்பாடுகள் | 21 | 56 | 18 | 66 | 20 | 71 | 14 | 62 | 9 | 33 | 5 | 13 | 388 | 454 | 842 |
| கட்டளைகள் பிறப்பிக்கப்படல் | 548 | | -- | | | 48 | -- | | -- | | | 03 | 599 | 7 | 606 |
| காலப் பகுதி செல்லுபடியாகாமை | 4 | 2 | 22 | | | 8 | 1 | 43 | -- | 1 | | -- | 81 | 3 | 84 |
| பரிந்துரைகள் வழங்கப்படல் | | | | | | | | | | | | | | 72 | 72 |
| ஏனைய நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தல் | | 22 | 62 | 32 | 28 | 133 | 2 | 34 | 10 | 25 | | 20 | 368 | 61 | 429 |
| மொத்தம் | **840** | **624** | **356** | **592** | **422** | **876** | **121** | **804** | **183** | **249** | **27** | **250** | **5344** | **3348** | **8692** |

## 3.3. பரிந்துரைகள்

2023 ஆம் ஆண்டில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் 72 பரிந்துரைகள் வழங்கப்பட்டதுடன், அவற்றில் 24 பரிந்துரைகள் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளுடன் தொடர்புடையவைகளாக இருந்ததோடு 25 பரிந்துரைகள் தனிப்பட்ட சுதந்திரத்துடன் தொடர்புடைய உரிமைகள் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ளன.

2023 ஆம் ஆண்டில், தனிப்பட்ட சுதந்திரம் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பாக வழங்கப்பட்ட பரிந்துரைகள் அந்த ஆண்டிற்காக வழங்கப்பட்ட மொத்த பரிந்துரைகளின் எண்ணிக்கையில் 31ழூ ஆகும். தனிப்பட்ட சுதந்திரம் தொடர்பாக வழங்கப்பட்ட 23 பரிந்துரைகளில் 16 சித்திரவதை தொடர்பானவையாகுமென்பதோடு 04 தன்னிச்சையான கைது அல்லது தடுப்புக்காவல் தொடர்பானவையாகும். (2023 இல் வழங்கப்பட்ட பரிந்துரைகளின் முழுமையான பட்டியலுக்கு பின் இணைப்பு 2 ஐப் பார்க்கவும்). அனைத்து பரிந்துரைகளும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் பொதுமக்களின் பரிசீலணைக்காக வெளியிடப்பட்டுள்ளன.


| விடயம்.ஃ.துறை | பரிந்துரைகளின் எண்ணிக்கை |
|---|---|
| **பொருளாதார சமூக மற்றும் கலாசார உரிமைகள்** | **47** |
| • கல்வி சம்பந்தப்பட்ட உரிமைகள்ழூ | 23 |
| • ஏனைய பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியான உரிமைகள் ழூழூ | 24 |
| **தனிப்பட்ட சுதந்திரத்துடன் தொடர்புடைய உரிமைகள் ழூழூழூ** | **25** |
| **மொத்தம்** | **72** |

மூலம் : இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தரவுத் தொகுதி

ழூ இந்தப் பரிந்துரைகள் பாடசாலைகளுக்கு பிள்ளைகளை சேர்த்தல், மாணவர் ஒழுக்காற்று நடவடிக்கைகள், பல்கலைக்கழக அனுமதி, கல்வி நிறுவகங்களில் துன்புறுத்தல் மற்றும் கல்வி நிறுவகங்களில் தொழில் பதவி உயர்வு உரிமைகள் மீறப்படுதலுடன் தொடர்புடையவைகளாகும்.

ழூழூ ஏனைய பரிந்துரைகளில் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளுடன் தொடர்புடைய ஓய்வூதியம், சம்பளவேற்றம், இடமாற்றல், சீவனோபாயம், ஆட்சேர்ப்புக்கள், தொழில் சேவை நிலைமைகள், பணி இடைநிறுத்தம், பணி நீக்கம், இழப்பீடு செலுத்தல் மற்றும் அதிகார து'பிரயோகம் என்பவற்றுடன் தொடர்பான உரிமை மீறல்கள் அடங்கும்.

ழூழூழூ சட்ட விரோத கைதுகள் மற்றும் தடுத்து வைப்புக்கள், சித்திரவதைக்குட்படுத்தல் மற்றும் கைது செய்யப்பட்டிருக்கும்போது மரணித்தல் போன்ற மீறல்கள் உட்பட்ட தனிப்பட்ட சுதந்திரத்துடன் தொடர்பான உரிமைகளுக்குள் அடங்கும்




### 3.4. கண்காணிப்பு விஜயங்கள்

2023 ஆம் ஆண்டில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, அதன் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்கள் ஊடாக 739 கண்காணிப்பு விஜயங்களை மேற்கொண்டுள்ளதுடன், அவற்றில் 653 விஜயங்கள் பொலீஸ் நிலையங்களுக்கும், 69 விஜயங்கள் சிறைச்சாலைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு இல்லங்களுக்கும் மேற்கொள்ளப்பட்டன. (மேலதிக விபங்களுக்கு 4.4.2 இணைப் பார்க்கவும்).

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற திட்டமிடப்பட்ட விஜயங்களாக பொலீஸ் நிலையங்களை கண்காணித்தலைக் குறிப்பிடல் வேண்டும். விஜயத்தை திட்டமிட்டுக்கொள்வதற்காக ஆணைக்குழுவினால் பொலீஸ் நிலையங்கள் அமைந்துள்ள இடங்களுக்குச் செல்வதற்கான பாதைகளுக்கமைய திட்டமொன்று தயாரித்துக்கொள்ளப்படுவதுடன், நாடு பூராவும் அமைந்துள்ள 491 பொலீஸ் நிலையங்கள் உள்ளடக்கப்படுகின்றன. பொலீஸ் நிலையங்களுக்கு மேலதிகமாக சிறைச்சாலைகள் போன்ற ஏனைய தடுப்பு நிலையங்களுக்கும் விஜயங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | தலைமை அலுவலகம் | அம்பாறை | அநுராதபுரம் | மட்டக்களப்பு | பதுளை | யாழ்ப்பாணம், கிளிநொச்சி | கண்டி | கல்முனை | மாத்தறை | திருகோணமலை | வவுனியா மற்றும் மன்னார் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொலீஸ் நிலையங்கள் | 103 | 40 | 42 | 101 | 20 | 120 | 27 | 67 | 71 | 43 | 19 | **653** |
| சிறைச்சாலைகள் | 5 | 1 | | 7 | 4 | 7 | 2 | 3 | 6 | 2 | 1 | **38** |
| சிறுவர் பாதுகாப்பு/ சிறுவர் இல்லங்கள் | | | | 1 | | 10 | | 13 | 7 | | | **31** |
| புனர்வாழ்வு நிலையங்கள் | | | 1 | | | | | | | 1 | 1 | **3** |
| பெண்கள் இல்லங்கள் | | | | | | 1 | | | | | | **1** |
| இயலாமையுடையோர் இல்லங்கள் | | | | | | | | 3 | | | | **3** |
| பயங்கரவாத விசாரணைப் பிரிவு ∴ குற்றப் புலனாய்வுப் பிரிவு | 5 | | | 5 | | | | | | | | **10** |
| மொத்தம் | | | | | | | | | | | | **739** |

அத்தியாயம் 4: மனித உரிமைகளை விருத்தி செய்தல் மற்றும் பாதுகாப்பதற்காக ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரம்

4.1. பிரச்சினைக்குரிய நிலைமைகளின்போது மனித உரிமைகளைப் பாதுகாத்தல்
4.2. துரித பதிலளிப்பு
4.2.1. துரித பதிலளிப்பு அலகு (சுசுரு)
4.2.2. தவிசாளரின் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படும் தலையீடுகள்
4.3. ஆலோசனைப் பணிகள்
4.3.1. தேசிய சட்டங்களுடன் தொடர்பாக அரசாங்கத்திற்கு பரிந்துரைகளை சமர்ப்பித்தல்
4.3.2. மறுசீரமைப்புக்களுக்கான ஏனைய உதவிகள்
4.3.3. சர்வதேச தரங்களை அங்கீகரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தலை ஊக்குவித்தல்

4.4. கண்காணிப்புப் பணிகள்
4.4.1. பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாமை தொடர்பான கண்காணிப்பு
4.4.2. தடுப்பு மற்றும் பராமரிப்பு இல்லங்களை மேற்பார்வை செய்தல்
4.4.3. ஐக்கிய நாடுகள் அமைப்பின் அமைதி காக்கும் படையில் பணியாற்றுவதற்காக இலங்கை இராணுவத்தினரை ஈடுபடுத்தல் தொடர்பாக கவனமாக பரிசீலித்தல்
4.4.4. ழுீஊயுவு இன் கீழ் தேசிய தீர்வுப் பொறிமுறை
4.4.5. சிறைச்சாலைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தேசிய ஆய்வுப் பெறுபேறுகளின் முன்னேற்றம்
4.5. புலனாய்வுகள்
4.5.1. கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் பற்றியது
4.5.2. மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் சொந்தப் பிரேரணைகள் அடிப்படையிலான விசாரணைகள் (ளுரழ ஆழவர வைெநசளநவெழைளெ)
4.6. கல்விசார் மற்றும் ஆணைக்குழுவை பிரஜைகளுடன் தொடர்புபடுத்துவதற்கான பணிகள்

4.6.1. மனித உரிமைகள் தொடர்பான விதிமுறைகள் மற்றும் பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
அ) சர்வதேச ஞாபகார்த்த தின வைபவங்கள்
ஆ) பல்வேறு கவனயீர்ப்புக் குழுக்களுக்கான பயிற்சிகள் மற்றும் கலந்துரையாடல்கள்
இ) ஆலோசனை

4.6.2. ஊடகங்களுடனான தொடர்புகள்
- பாரம்பரிய அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுடன் நடவடிக்கை மேற்கொள்ளல்
- இணையவழி தளங்ளைப் பயன்படுத்தல்

4.6.3. சிவில் சமூக அமைப்புக்களுடனான தொடர்புகள்
- பிராந்திய சிவில் சமூக அமைப்புக்கள் ஒருங்கிணைப்புக் குழுக்கள்

- *மனித உரிமைகளுக்கான பிரஜைகள் செயலணி (ஊவுகு4ர்சு)*
- *கருப்பொருள் சார்ந்த உப குழு அங்கத்தவர்களாக சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள்*
- *சிவில் சமூக அமைப்புக்களினால் ஏற்பாடு செய்யப்படும் பல்வேறு நிகழ்வுகளில் பங்குபற்றல்*
- *சிவில் சமூக அமைப்பக்களுடனான கலந்துரையாடல்கள்*
- *சிவில் சமூக அமைப்புக்களுக்கான பயிற்சியளிப்புக்கள்*

## 4.1. பிரச்சினைக்குரிய நிலைமைகளின்போது மனித உரிமைகளைப் பாதுகாத்தல்

2019 இல் மேற்கொள்ளப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் சமீபத்திய பொருளாதார நெருக்கடி ஆகியவை உள்ளிட்ட வெளிவாரியான அதிர்ச்சிகளுக்கு இலங்கை சமீபத்தில் முகங்கொடுத்ததுடன், அவற்றில் பொருளாதார நெருக்கடியின் விளைவுகள் இன்னும் உணரப்படுகின்றன. இந்த தீர்க்கமான காலப் பகுதியில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கை மக்களுக்கு உதவுவதற்காக முன்வந்ததுடன் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொண்டது. உதாரணமாக, பொருளாதார நெருக்கடியின்போது நடந்த பொது மக்கள் போராட்டங்களை ஆணைக்குழு உன்னிப்பாகக் கண்காணித்ததுடன், மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணைகளை நடாத்தியது. பல்வேறு மனித உரிமை மீறல்களைக் கண்டித்து ஊடக வெளியீடுகள் மூலம் பொதுமக்களுக்கு சார்பாக செயற்பட்டதுடன், எதிர்ப்புப் போராட்டங்களின் போது பொதுமக்களுக்கு அவர்களின் உரிமைகள் குறித்து விழிப்புணர்வூட்டுவதனை உறுதி செய்தது. மேலும், இந்தக் காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களின் வடிவங்களை கவனத்தில் கொண்டு, முக்கிய அரசாங்க அதிகார நிறுவனங்களுக்கு பரிந்துரைகளை வழங்கியது. மேற்கொள்ளப்பட்ட அத்தகைய தலையீடுகளுக்கான உதாரணங்கள் சில:

- மாணவர்கள் எதிர்கொள்ளும் சிரமத்தைக் குறைப்பதற்காக, க.பொ.த உயர்தரப் பரீட்சை நடாத்தப்படும் காலப் பகுதியில், அதாவது 2023 ஜனவரி 23 முதல் 2023 பெப்ரவரி 17 வரை மின்வெட்டு இல்லாமல் தடையற்ற மின்சாரம் வழங்குவதை உறுதி செய்வதற்காக ஆணைக்குழு ஒரு கட்டளையை (ர்சுஊ.ஃ.சுஆ.ஃ.ஆ.ஃ.02.ஃ.2022) வெளியிட்டது. அந்தத் தலையீட்டின் பின்னர் சம்பந்தப்பட்ட தரப்பு ஒரு சுமுகமான இணக்கப்பாட்டுக்கு வந்ததுடன், இலங்கை மின்சார சபையினால் க.பொ.த உயர்தரப் பரீட்சைக் காலத்தில் தடையற்ற மின்சாரம் வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது.
- 

  இலங்கை மின்சார சபையினால் இவ்வாறான தெளிவான வாக்குறுதி அளிக்கப்பட்ட போதிலும், அவ்வாறு ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் நிபந்தனைகள் செயல்படுத்தப்படவில்லை. எனவே, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலாளர், இலங்கை மின்சார சபையின் தலைவர் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஃ தலைவர் ஆகியோர் வேண்டுமென்றே மேற்கண்ட உத்தரவை மீறும் வகையில் செயல்பட்டதாகவும், குறிப்பாக இலங்கை மின்சார சபையின் தலைவர் 1996 ஆம் ஆண்டின் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ்

அவமதிக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் ஆணைக்குழு 2023.01.30 தேதியிடப்பட்ட ஊடக அறிவித்தலில் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது. பரீட்சைக் காலப் பகுதியில் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கு தொடர்ச்சியான மின்சாரம் வழங்குவதற்காக மேற்கூறிய தரப்பினரிடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டை மீறும் வகையில் இலங்கை மின்சார சபை வேண்டுமென்றே மற்றும் தீங்கிழைக்கும் வகையில் அந்த இணக்கப்பாட்டை புறக்கணித்து மின்சாரத் துண்டிப்பை தொடர்ந்து மேற்கொண்டது. பரீட்சைக் காலப் பகுதியில் தடையற்ற மின்சாரம் வழங்குதல் தொடர்பான இலங்கை மின்சார சபையின் இந்த வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட புறக்கணிப்பானது ஒரு பிள்ளையின் கல்விக்கான உரிமையை கடுமையாக மீறுவதாக ஆணைக்குழு கருதியது. அதன்படி, ஆணைக்குழுவினால் முறையாக ஒரு அவமதிப்புச் சான்றிதழ் கையொப்பமிடப்பட்டு உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதன்படி, இலங்கை மின்சார சபைக்கு எதிராக SC/Contempt/01/2023 ஆம் இலக்க வழக்குத் தொடரப்பட்டது. இருப்பினும், தொழில்நுட்ப காரணங்களுக்காக உயர் நீதிமன்றம் அந்த வழக்கை தள்ளுபடி செய்தது.

## *4.2. துரித பதிலளிப்பு*

### *4.2.1. துரித பதிலளிப்பு அலகு (சுசுரு)*

மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் சுய வழிநடாத்தலின் கீழ் அரம்பிக்கப்பட வேண்டிய சொந்தப் பிரேரணை விசாரணைகளுக்கு (*ளரழ அழவர* உயளநள) போன்றே நேரடியாக முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக கவனத்திற்கொள்வதற்காக துரித பதிலளிப்பு பிரிவு 2023 ஆம் தாபிக்கப்பட்டது. மனித உரிமை மீறல்களுக்கு துரித பதிலை வழங்குதல், சரியான நேரத்தில் தீர்வுகள் மற்றும் பரிந்துரைகளை உறுதி செய்தல், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலையீட்டுத் திறனை வலுப்படுத்துதல் மற்றும் ஆணைக்குழுவினால் சுய வழிநடாத்தலின் கீழ் அரம்பிக்கப்பட வேண்டிய சொந்தப் பிரேரணை விசாரணைகளுக்கு (*ளரழ அழவர* உயளநள) மற்றும் அறிக்கைப்படுத்தப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் சாட்சியங்களை சேகரித்தல் ஆகியவை இந்த துரித பதிலளிப்பு பிரிவை நிறுவுவதன் முக்கிய நோக்கங்களாகும். ஒவ்வொரு துரித பதிலளிப்பு பிரிவும் குறைந்தபட்சம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இரண்டு அதிகாரிகளைக் கொண்டிருந்தாலும், ஒவ்வொரு குறிப்பிட்ட நிகழ்வின் தேவைப்பாட்டின் அடிப்படையில் இந்த எண்ணிக்கையானது வேறுபடும். தடுப்புக்காவல் இடங்களுக்கு மேற்கொள்ளப்படும் விஜயங்களுடன் தொடர்புடைய நிகழ்வுகளின்போது குறித்த அந்த நிறுவனத்தின் பாலின (ஆண், பெண்) அமைப்பைப் பொறுத்து பிரிவில் இருக்க வேண்டிய ஆணைக்குழு அலுவலர்களின் எண்ணிக்கை பிரிவிதீர்மானிக்கப்படும். உதாரணமாக, பெண்கள் தடுப்பு நிலையமொன்றுக்குச் செல்லும் குழுவில் குறைந்தது இரண்டு பெண் அதிகாரிகள் மற்றும் ஒரு ஆண் அதிகாரி இருப்பார்கள். சகல

சந்தர்ப்பங்களிலும் குறைந்தது ஒரு உறுப்பினர் ஒரு பெண் அதிகாரியாக இருப்பதுடன், குழுவில் ஒரு சட்ட அதிகாரி மற்றும் ஒரு மனித உரிமை அதிகாரி ஆகிய இருவரும் இருப்பார்கள். இது தவிர துரித பதிலளிப்புப் பிரிவில் குறைந்தபட்சம் ஒரு பின்தொடர்தல் அதிகாரி இருத்தல் வேண்டுமென்பதோடு, அவருக்கு துரித பதிலளிப்பு நடவடிக்கைப் பணிகளைப் பேணிவரல் மற்றும் கண்காணித்தல் ஆகிய பணிகள் ஒப்படைக்கப்படும். துரித பதிலளிப்பு பிரிவிலுள்ளவர்கள் மூன்று அரச கரும மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். உரிமை மீறல்கள் நிகழ்கின்ற இடம் கொழும்பு நகரில் அமைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், துரித பதிலளிப்பு பிரிவுக் குழு சம்பந்தப்பட்ட முறைப்பாடு கிடைக்கப்பெற்ற ஒரு மணி நேரத்திற்குள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்திலிருந்து புறப்படும். பிராந்திய அலுவலகங்களுக்கு அருகில் சம்பவங்கள் ஏற்பட்டால், தொடர்புடைய துரித பதிலளிப்பு பிரிவுக் குழு குறித்த முறைப்பாடு அல்லது கட்டளையைப் பெற்ற ஒரு மணி நேரத்திற்குள் அந்த இடத்திற்குச் செல்லும். துரித பதிலளிப்பு பிரிவினால் 2023 ஆம் ஆண்டில் 06 விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், இங்கு முக்கியமாக உள்நாட்டு அமைதியின்மை, சித்திரவதை, சட்டவிரோத தடுப்புக்காவல் மற்றும் சட்டவிரோத கைது என்பன தீர்க்கப்பட வேண்டிய நிகழ்வுகளாக இருந்தன.

| விஜயத்தை மேற்கொண்ட திகதி | குறித்த நிகழ்வு சுருக்கமாக | விஜயம் மேற்கொள்ளப்பட்ட இடம் / தடவைகள் | வழக்கு இலக்கம் |
|---|---|---|---|
| **2023.10.17** | தடுத்து வைத்திருக்கும்போது ஏற்பட்ட மரணம் - அவிசாவளை பொலீஸ் நிலையம் | அவிசாவளை பொலீஸ் நிலையம் | ஸுருமூ.ஃ.ஆமுவுரு.ஃ.17.ஃ.23 |
| **2023.11.02** | களுத்துறை சிறைச்சாலையில் பாதிக்கப்பட்ட தரப்பிடமிருந்து வாக்குமூலம் பெற்றுக்கொள்ளல் | களுத்துறை சிறைச்சாலை | ர்சுஊ.ஃ.ர்மூ.ஃ.4175.ஃ.23இ ர்சுஊ.ஃ.ர்மூ.ஃ.3857.ஃ.23இ ர்சுஊ.ஃ.ர்மூ.ஃ.4மூ32.ஃ.23 |
| **2023.12.01** | பொலீஸாரால் சித்திரவதைக்கு ஆளாகியமை மற்றும் கைது செய்யப்பட்ட நபர் காணாமற் போதல் | குற்றப் புலனாய்வுப் பிரிவு - பேலியகொட பொலீஸ் நிலையம் குற்றப் புலனாய்வுப் பிரிவு - நுகேகொட | ர்சுஊ.ஃ.ர்மூ.ஃ.4687.ஃ.23 |
| **2023.12.04** | கிறிஸ்தவ மத பிரச்சாரகர் ஒருவரை சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச சாசன சட்டத்தின் (ஐ.சீ.சீ.பீ.ஆர்) கைது செய்தல். | புதிய மெகசின் சிறைச்சாலை | ஸுருமூ.ஃ.ஆமுவுரு.ஃ.21.ஃ.23 |
| **2023.12.21** | பொலீஸாரால் சித்திரவதை செய்யப்படல் | பு;மென்டல் பொலீஸ் நிலையம் | வழக்கொன்று இல்லை |
| **27. 12. 2023.12.2** | சிறைக் கைதியாக இருக்கும்போது ஏற்பட்ட மரணம் - களுத்துறை சிறைச்சாலை | களுத்துறை சிறைச்சாலை | ஸுருமூ.ஃ.ஆமுவுரு.ஃ.23.ஃ.23 |

### *4.2.2. தவிசாளரின் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படும் தலையீடுகள்*

மேலே குறிப்பிடப்பட்ட விதம் தவிர விசாரணைகள் மற்றும் முறைப்பாடுகள் விசாரணை செயற்பாடுகளுடன் தொடர்புடைய தாமதங்கள் மற்றும் ஏனைய சிக்கல்கள் காரணமாக பாதிக்கப்பட்ட முறைப்பாட்டாளர்களுக்கு உதவி புரிவதற்கு தவிசாளர் தலையீட்டை மேற்கொள்ளும் வழக்கம் காணப்படுகின்றது.

## *4.3. ஆலோசனைப் பணிகள்*

### *4.3.1. தேசிய சட்டங்களுடன் தொடர்பாக அரசாங்கத்திற்கு பரிந்துரைகளை சமர்ப்பித்தல்*

சட்டங்கள் மற்றும் நிர்வாக ரீதியிலான பணிப்புக்கள் அடிப்படை உரிமைகள் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் விதிமுறைகள் மற்றும் தரநிலைகளுடன் இயைந்திருப்பதனை உறுதி செய்வதற்கு முறையே இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 10 (இ) மற்றும் (ஈ) பிரிவுகளின் கீழ், ஆலோசனைகளை வழங்குவதற்கு ஆணைக்குழுவுக்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனை நடைமுறையில் அமுல்படுத்தும்போது ஆணைக்குழு சம்பந்தப்பட்ட நிரல் அமைச்சிடமிருந்து சட்டமூலத்தின் பிரதியொன்றைக் கோருவதுடன், அந்த சட்டமூலத்தை பரீட்சித்தல் மற்றும் கவனமாக விபரித்து தனது அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளை தயாரிப்பதற்கு முன்னர் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட தொடர்புடைய தரப்புக்களுடன் கலந்துரையாடப்படுகின்றது. அதன் பின்னர், ஆணைக்குழு விடயத்திற்கேற்ப தனது அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளை தொடர்புடைய நிரல் அமைச்சிடம்டம் அல்லது ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கும்.

அடிப்படை உரிமைகள் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் விதிமுறைகள் மற்றும் தரநிலைகளுடன் சட்டமூலத்தின் இணக்கப்பாட்டை மேம்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு உதவுவதற்கு இந்த அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் முக்கியமானவையாகும். ஆணைக்குழு தனது அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளை ஆணைக்குழுவின் சமூக ஊடகங்களிலும் அதன் வலைத்தளத்திலும் வெளியிடுவதுடன், தொடர்புடைய ஆவணத்தை அதன் ஊடக வலையமைப்பில் வெளியிடுகின்றது. 2023 ஆம் ஆண்டில், சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பாக ஆணைக்குழு அரசாங்கத்திற்கு பின்வரும் பரிந்துரைகளை வழங்கியுள்ளது:

- **பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தில் பயங்கரவாதம் எனும் வசனம் பொருள்கோடப்பட்டுள்ள விதமானது அதன் விரிவான விடயப் பரப்பானது அடிப்படை உரிமைகளுடன் முரண்படுவதனால் அந்தப் பொருள்கோடலை திருத்தியமைப்பதற்கான பரிந்துரை.**

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் 3(1) ஆம் பிரிவில் பயங்கரவாதம் எனும் வசனம் பொருள் கோடப்பட்டுள்ள விதத்தை மீள் பரிசீலனை செய்யுமாறு மற்றும் அதில் உள்ளார்ந்த தெளிவற்ற தன்மையை நீக்குவதற்காக அந்த பொருள்கோடலில் உள்ளடக்கப்பட்டுள்ள செயல்களை தெளிவுபடுத்தவும் சுருக்குவதற்கும் குறிப்பிட்ட திருத்தங்களை பரிந்துரைக்கவும் 2023 ஏப்ரல் 06 ஆம் திகதி வெளியிடப்பட்ட செய்தி அறிவித்தல் மூலம் ஆணைக்குழு அரசாங்கத்திற்கு பரிந்துரைத்துள்ளது. எந்தவொரு சமூகத்திலும் அமைதி, நீதி மற்றும் நல்லாட்சிக்கு அவசியமான சட்டத்தின் ஆதிக்கம் எண்ணக்கருக்கள் மற்றும் கோட்பாடுகளை பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

அந்த முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, அமைதியான முறையில் செயல்படும் ஒரு சமூகத்திற்காக இலங்கையின் அரசியலமைப்பு மற்றும் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டம் ஆகிய இரண்டையும் மதித்து பயங்கரவாதத்தைத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் சட்டத்துடன் இயைந்திருத்தல் வேண்டுமென்பதனை அந்தப் பரிந்துரைகள் மூலம் மேலும் வலியுறுத்தியுள்ளது. பாதுகாப்பு தொடர்பாக கவனத்திற்கொள்ளும்போது அதுவும் ஒரு மனித உரிமையாகுமென்பதோடு, சிந்தனை சுதந்திரம், கருத்து வெளியிடும் சுதந்திரம், பழகுவதற்கான உரிமை, வாழ்வதற்கான உரிமை, சுதந்திரம் மற்றும் தனிநபர் பாதுகாப்பு போன்ற பிரஜைகளின் அடிப்படை உரிமைகளின் அடிப்படையில் பயங்கரவாதத்தினால் நேரடி அச்சுறுத்தல் ஏற்படுத்தப்படுகின்றது.இருப்பினும், பயங்கரவாதம் தொடர்பான தவறான நடவடிக்கைகளை கட்டுப்படுத்தல் மற்றும் தண்டிக்கும் இந்த சட்டமூலத்தில் பயங்கரவாதம் தொடர்பான பொருள்கோடல் சர்ச்சைக்குரிய மற்றும் பரந்த அளவில் பொருள்கோடப்படுவதுடன், அதனூடாக அநேகமாக அதன் பயன்பாட்டை சிக்கலாக்கும். ஒரு கொள்கை நோக்கத்திற்காக பலாத்காரமாக இணைத்துக்கொள்ளல் அல்லது அழுத்தம் கொடுப்பதற்காக வன்முறை செயற்பாடுகளை உள்ளடக்கிய பயங்கரவாதம் சில சமயங்களில் அதன் விரிவான பொருள்கோடலுக்குட்பட்டிருப்பின் அரசாங்கத்தினால் எதிரான கருத்துக்களைக் கொண்டுள்ளவர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களை குறிவைத்து மௌனமாக்குவதற்காக தவறாகப் பயன்படுத்திக்கொள்ளப்பட முடியுமாகையினால் அதனூடாக இறுதியில் பேச்சு மற்றும் கருத்து சுதந்திரம் போன்ற குடிமக்களின் அரசியலமைப்பு ரீதியாக பாதுகாக்கப்பட்ட உரிமைகள் மீறப்படலாம்.

இந்த சட்டமூலத்தின் 3 (2) (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் அத்தியாவசிய சேவைகள் அல்லது வழங்கல்களுக்கு ஏற்படுகின்ற ஏதேனும் தடை பயங்கரவாதச் செயலாகக் கருதப்படுவதுடன், எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றுக்கு அல்லது பேரணியில் பங்கேற்கும் எவரையும் ‘‘பயங்கரவாதி’’ என்று கருதப்படுவதற்கான சாத்தியக்கூறு உள்ளது. ஒரு தேசமாக நாம் அடைய முயற்சிக்கும் சிறந்த ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்ற பேச்சு மற்றும் நடமாட்டத்திற்கான சுதந்திரம் போன்ற அரசியலமைப்பால் பாதுகாக்கப்பட்ட உரிமைகள் மீது இந்த சட்டமூலத்தினால் இயக்க சுதந்திரம் போன்றவற்றுக்கு ஏற்படும் மறைந்திருக்கும் அச்சுறுத்தல் குறித்து ஆணைக்குழு அரசாங்கத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது.

- **குற்றவியல் விடயங்களுடன் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் மேன்முறையீட்டு நீதிமன்ற அதிகாரம் குறித்த பரிந்துரைகள்**

மரண தண்டனை விதிக்கும்போது நிலவுகின்ற மாற்றியமைக்க முடியாத தன்மையைக் கருத்தில் கொண்டு, குற்றவியல் விவகாரங்கள் தொடர்பில் இலங்கை உயர் நீதிமன்றத்தின் மேன்முறையீட்டு நீதிமன்ற அதிகாரம், குறிப்பாக மேன்முறையீட்டு நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவரை குற்றவாளியாக அறிவித்து மரண தண்டனை விதிக்கும் வழக்கு

நடவடிக்கைகளுடன் தொடர்புடைய சட்டத்தை திருத்துவதற்கான செயல்முறையைத் ஆரம்பிக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நீதி மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சருக்கு பரிந்துரைகளை வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பரிந்துரை 2023 மே 04 தேதியிட்ட ஊடக அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளது.

- **அடிப்படை உரிமைகளுடன் தொடர்புடைய விடயமொன்றாக சூழல் கவனத்திற்கொள்ளப்படுவதனை உறுதிசெய்யும் வகையில் அரசியலமைப்பைத் திருத்துவதற்கான பரிந்துரை**

இலங்கையின் 1978 அரசியலமைப்பில் சுற்றுச்சூழலை அடிப்படை உரிமைகளின் எல்லைக்குள் சேர்க்கவில்லை என்றாலும், அது சுற்றுச்சூழல் தொடர்பான பல ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது.இந்த விடயத்தின் அடிப்படையில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 2023 மே 08 தேதியிட்ட ஊடக அறிவித்தல் ஊடாக எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் பேரழிவு தொடர்பாக ஆணைக்குழுவுக்கு கிடைத்துள்ள முறையான முறைப்பாடு தொடர்பாக மீளாய்வொன்றை மேற்கொண்டது. இந்தப் பேரழிவு காரணமாக இலங்கையின் சுற்றுச்சூழல் (நிலம் மற்றும் பிராந்திய நீர்நிலைகள் இரண்டின் மீதும்), பொருளாதாரம் மற்றும் பிரஜைகளின் ஆரோக்கியத்தின் மீதும் ஏற்படுத்திய தாக்கத்தின் அடிப்படையில், எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் பேரழிவின் அளவு மற்றும் அதன் தீவிரத் தன்மையை ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. நச்சுத் தன்மையைக் கொண்ட பிளாஸ்டிக் துகள்கள் மற்றும் கடலிலும் கடற்கரையிலும் பரவியுள்ள நைட்ரிக் அமிலத்தின் அதிகளவிலான அளவைக் கருத்திற்கொள்ளும்போது இது சர்வதேச அளவில் மனிதனால் உருவாக்கப்பட்ட மிகப்பெரிய கடல் சுற்றுச்சூழல் பேரழிவாகுமென விவாதத்திற்கிடமின்றி கருதுவதற்கு முடியும். அனைவருக்கும் ஆரம்ப சுகாதார வசதிகளை வழங்குதல் அரசியலமைப்பால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட அடிப்படை உரிமையாகும் என்பதைக் குறிப்பிட்டு, இந்தப் பேரழிவுக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள கடுமையான எதிர்பாராத பொருளாதார விளைவுகள் மற்றும் சுகாதாரம் சார்ந்த பிரச்சினைகளையும் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. அடிப்படை உரிமையொன்றாக சுற்றுச்சூழல் கருதப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக அரசியலமைப்பைத் திருத்தும் சாத்தியமான இலக்கு மற்றும் அரசியலமைப்பினூடாக பாதுகாக்கப்பட்ட ஏனைய அடிப்படை உரிமைகளுக்காக உறுதிப்படுத்தப்பட்ட நேரடியான தொடர்புடன் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உறுதியளித்துள்ளது.

- **தேசிய மகளிர் ஆணைக்குழு பற்றிய சட்டமூலம் தொடர்பான பரிந்துரைகள்**

அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயம் மற்றும் இலங்கையின் சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளுக்காக தேசிய மகளிர் ஆணைக்குழு பற்றிய சட்டமூலத்தின் இயைந்திருத்தலை உறுதி செய்யும் நோக்கில், தேசிய மகளிர் ஆணைக்குழு பற்றிய சட்டமூலத்திற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அதன் பொதுவான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளைச் சமர்ப்பிக்கப்பட்டது. அவ்வாறு

சமர்ப்பிக்கப்பட்ட பொதுவான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளில் பின்வரும் விடயங்கள் உள்ளடங்கியுள்ளது:

i. சொற் பதங்களை தெளிவுபடுத்திக்கொள்வதற்கு மற்றும் பெண்களை எந்த வகை வன்முறையிலிருந்து பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பதை தெளிவாகக் குறிப்பிடுவதை உறுதி செய்வதற்காக 2 (ஈ) பிரிவைத் திருத்தியமைத்தல்.
ii. தேசிய மகளிர் ஆணைக்குழுவின் அனைத்து உறுப்பினர்களும் அரசியலமைப்பு சபையின் பரிந்துரையின் பேரில் நியமிக்கப்படுவதை உறுதிசெய்வதற்காக பிரிவு 4 ஐ வலுப்படுத்துதல்.
iii. தேசிய மகளிர் ஆணைக்குழுவுக்கு அறிக்கைப்படுத்தல் அரசாங்கத்தின் முகவர் நிறுவனம் என்பதை தெளிவாகக் குறிப்பிடுவதற்காக (ஊ) மற்றும் (ஏ) பிரிவுகளைத் திருத்தியமைத்தல். சிவில் சமூக செயற்பாட்டாளர்களுடன் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக ஆணைக்குழுவுக்கு விசேட அதிகாரம் அளிக்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்படுகிறது.
iv. சட்டமூலத்தின் பிரிவு 17 இன் கீழ் விதிக்கப்பட்ட கால எல்லை தொடர்பாக மறுபரிசீலனை செய்தல்.

- **இணையவழி முறைகளின் பாதுகாப்பு குறித்த சட்டமூலம் மீதான பரிந்துரைகள் மற்றும் ஆரம்ப அவதானிப்புகள்**

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, 2023 செப்டம்பர் 18 ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இணையவழி முறைகளின் பாதுகாப்பு குறித்த சட்டமூலம் மீதான அதன் ஆரம்ப அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் உள்ளடங்கிய 2023 ஒக்டோபர் 02 திகதிய கடிதத்தை பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் சமர்ப்பித்தது. இலங்கையில் இணையத்தளத்தை பொதுமக்களுக்காக பாதுகாப்பான முறையில் கையாள்வதற்கான சட்டமொன்றை இயற்றுதல் பெறுமதிமிக்க நோக்கம்என்பதை ஆணைக்குழு ஒப்புக்கொள்கிறது. இணைய (ஆன்லைன்) செயற்பாடுகள் தொடர்பான புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு முன்னர் சட்டத்தை அமுல்படுத்துகின்ற அதிகார நிறுவனங்களின் நிறுவனம்சார் இயலளவை வலுப்படுத்துவதற்கு நல்லெண்ணத்துடன் தற்போது நடைமுறையிலுள்ள குற்றவியல் சட்டத்தை பொருள்கோடல் மற்றும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று ஆணைக்குழு கருதுகிறது. அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் பற்றிய அத்தியாயத்துடன் சட்டமூலத்தின் இயைந்திருத்தலை உறுதி செய்வதும் இந்த அவதானிப்புகள் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்றன. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முக்கிய பரிந்துரைகள் பின்வருமாறு:
எந்தவொரு முன்மொழிவுகளுக்கும் முன், சட்ட அமலாக்க அதிகாரிகளின்

i. சட்டமூலத்தின் ஊடாக நபர்களை வெறுமனே "துன்பத்துக்குள்ளாக்குதல்" எனக் கருதப்படுகின்ற கூற்றுக்களை

குற்றங்களாக்குகின்ற பிரிவுகளை நீக்குதல் வேண்டும். ஏனெனில், "துன்பத்துக்குள்ளாக்குதல்" என்ற உணர்வானது ஒவ்வொரு மட்டத்திலும் வேறுபட்டதாக இருக்கும். இத்தகைய பாதிப்புக்களுக்கு சிவில் வழக்கு விசாரணைகள் மூலம் சிறப்பாகக் கையாள வேண்டுமென்பதோடு, பாதிப்புக்குட்பட்ட தரப்பினரால் இழப்பீடு கோர முடியும்.

ii. முன்மொழியப்பட்ட இணையவழி அமைப்புகளின் பாதுகாப்பு பற்றிய ஆணைக்குழுவானது நியமன பொறிமுறையொன்றின் மூலம் நியமிக்கப்பட வேண்டுமென்பதோடு, அதனூடாக அது அரசியல்மயமாக்கலில் இருந்து விடுபட்டிருப்பதை உறுதி செய்யப்படுகின்றது. ஒரு ஆணைக்குழுவுக்கு காதி நீதிமன்ற அதிகாரம் அல்லது "வெளியிடப்பட்ட இணையத்தள இடங்கள்" என்று இணையத்தள இடங்களை பெயரிடும் அதிகாரத்தை ஒப்படைத்தல் கூடாது.

iii. தனிநபர்களுக்கு எதிராக பாதகமான முடிவுகளை எடுப்பதற்கான நடைமுறைகள் குறித்த சட்டத்தின் விதிகள் ஒத்திசைவான முறையில் திருத்தப்படல் வேண்டும். இயற்கை நீதி விதிகளின்படி அத்தகைய நபர்களிடமிருந்து விடயங்களை வினவுவதற்கு வாய்ப்பு வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக இது செய்யப்பட வேண்டும்.

iv. மற்றவர்களை தவறு செய்வதற்குத் தூண்டுகின்ற விதத்திலான "தடைசெய்யப்பட்ட கூற்றுக்கள்" தொடர்பாக சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு குற்றங்கள் ஏற்கனவே தண்டனைச் சட்டக் கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ளமையினால், அவை சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள புதிய குற்றங்களுக்கு மேலதிகமானதாக இருப்பதனால் நீக்கப்படல் வேண்டும் அல்லது அவற்றின் சரியான தன்மை உறுதி செய்யப்படும் பிரகாரம் மற்றும் தர்க்க ரீதியானவை, நியாயமானவை மற்றும் விதிக்கப்பட்ட தண்டனைகளுக்கு சமமானதாகஇருப்பதை உறுதி செய்வதற்கும் கணிசமாளவில் திருத்தப்பட வேண்டும்.

v. அநாமதேயமாக இருப்பதற்கு மற்றும் நகைச்சுவையான மற்றும் நையாண்டி புனைகதைகளில் ஈடுபடுவதற்காக இணையப் பயனர்களின் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் வகையில் "போலி இணையக் கணக்குகள்" வகைப்படுத்தலுக்கான தெளிவான அளவுகோல்களை சட்டமூலத்தில் உள்ளடக்குதல் வேண்டும்.

vi. பொலீஸ் விசாரணைகளுக்கு உதவுவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர்களுக்கு பொலீஸ் அதிகாரங்கள் வழங்கப்படக்கூடாது. ஏனெனில் அவர்கள் பொதுவாக பொறுப்புக்கூறாத தனியார் செயற்பாட்டாளர்களாக இருப்பதனாலாகும்.

vii. இணையவழி முறையில் சிறுவர் துஷ்பிரயோகத்தை மேற்கொள்ளல் தொடர்பான புதிய குற்றத்தை அறிமுகப்படுத்துவதை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மகிழ்ச்சியுடன் வரவேற்பதுடன், தனியான சட்டமொன்றின் மூலம் அத்தகைய குற்றத்தை அறிமுகப்படுத்துவதற்கு அமைச்சினால் நீதி மற்றும் சிறுவர் விவகாரங்களுடன் நடவடிக்கை மேற்கொள்ளுகின்ற அமைச்சுக்களுடன் நெருங்கிய வகையில் நடவடிக்கை மேற்கொள்வதனை ஊக்குவிக்கிறது.

- **தேசிய மகளிர் ஆணைக்குழு தொடர்பான சட்டமூலம், பாலின சமூக நிலை சமத்துவம் தொடர்பான சட்டமூலம், மற்றும் பெண்களை வலுவூட்டல் தொடர்பான சட்டமூலம் மீதான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் தொடர்பாக கௌரவ ஜனாதிபதிக்கு வழங்கும் பரிந்துரைகள்**

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் 2023 நவம்பர் 17 ஆம் திகதி கௌரவ ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில், தேசிய மகளிர் ஆணைக்குழு பற்றிய சட்டமூலம், பாலின சமூக நிலை சமத்துவம் தொடர்பான சட்டமூலம், மற்றும் பெண்களை வலுவூட்டல் தொடர்பான பின்வரும் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் கௌரவ ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது:

ை. பாலின சமூக நிலை சமத்துவம் தொடர்பான சட்டமூலம், மற்றும் பெண்களை வலுவூட்டல் தொடர்பான சட்டமூலம் தனிச் சட்டமாக இருத்தல் வேண்டும்.

ைை. பாலின சமூக நிலை சமத்துவம் தொடர்பான சபையை புதிய திணைக்களமொன்றில் நிறுவ வேண்டுமென்பதோடு, அதனுடன் இணையான வகையில் மகளிர் பணியகத்தை மேம்படுத்துதுல் வேண்டும்.

ைைை. வேலையின் தன்மை மற்றும் வளங்களை வீணாக்குவதைக் குறைக்கும் நோக்கத்துடன் இந்த இணைப்பு பரிசீலிக்கப்படல் வேண்டும்.

ைஎ. அத்தகைய மாற்றத்தைச் செய்வதற்காக ‘பாலின சமூக நிலை சமத்துவம் தொடர்பான திணைக்களம்’ என இந்தத் திணைக்களத்திற்குப் பெயரிடல் வேண்டும்.

எ. தேசிய மகளிர் ஆணைக்குழுவுக்கான நியமன செயல்முறை வலுப்படுத்தப்படல் வேண்டுமென்பதோடு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படுவதனைப் போன்றே அரசியலமைப்பு சபையின் பரிந்துரையின் பேரில் உறுப்பினர்கள் நியமிக்கப்படல் வேண்டும்.

எ. இந்த சட்ட மூலங்களின் முக்கிய பொருள் குறித்து பொது மக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்கு முடியுமான வகையில் கூடியவிரைவில் இந்த 03 சட்டமூலங்களையும் வெளியிடுதல் தொடர்பாக கவனத்திற்கொள்ளல்

### *4.3.2. சீர்திருத்தங்களக்கான ஏனைய உதவிகள்*

ஆணைக்குழு தலையீட்டை மேற்கொள்ளுதல் பொருத்தமெனக் கருதப்படுகின்ற முக்கியமான மனித உரிமைகள் பிரச்சினைகளுக்காக 2023 ஆம் ஆண்டில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் தலையீடு மேற்கொள்ளப்பட்டு உதவி வழங்கப்பட்டது. அத்தகைய தலையீட்டிற்கான உதாரணம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:

- **எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலின் பேரழிவு தொடர்பான விசாரணையின் அடிப்படையில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து ஜனாதிபதிக்கு பரிந்துரைகளுடன் சமர்ப்பிக்கப்படும் இடைக்கால அறிக்கை**

எக்ஸ்பிரஸ் பேர்ல் கடல்சார் பேரழிவு தொடர்பான தற்போதைய விசாரணையின் ஒரு பகுதியாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 2023 மே 18 ஆம் திகதி கௌரவ ஜனாதிபதியிடம் ஒரு இடைக்கால அறிக்கையை சமர்ப்பித்தது. ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆதாரங்களை கவனமாக மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் இந்த இடைக்கால அறிக்கை வெளியிடப்பட்டது. வழக்குகளைத் தாக்கல் செய்வதற்குப் போதுமானளவிலான நடவடிக்கை மேற்கொள்ளல், சிவில் நடவடிக்கைகளை ஆரம்பித்தல் மற்றும் சுற்றுச்சூழல், தேசிய பொருளாதாரம் மற்றும் பாதிக்கப்பட்ட சமூகங்களின் வாழ்வாதாரங்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு இழப்பீடு கோருவதற்கு சட்ட நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கும், வழக்குகளைத் தாக்கல் செய்வதற்கும் இலங்கை அரசு போதுமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியதன் விளைவாக அரசியலமைப்பின் 12(1) உறுப்புரைக்கமைய சமத்துவம் மற்றும் சட்டத்தின் பாதுகாப்பு நியாயயத் தன்மை மற்றும் 14(1)(எ) இற்கமைய எந்தவொரு சட்டப்பூர்வமான தொழிலிலும் ஈடுபடுவதற்கான சுதந்திரம் எனும் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் குற்றம் சாட்டுகின்றனர். மேலும், அரசியலமைப்பினால் பாதுகாக்கப்பட்ட அடிப்படை உரிமைகள், அதன் அரச கொள்கையை செயற்படுத்துகின்ற கோட்பாடுகள் மற்றும் அடிப்படைக் கடப்பாடுகளின் கீழ் குறிப்பாக 27(14) உறுப்புரை - ”மக்களின் நலனுக்காக அரசாங்கத்தினால் சுற்றுச்சூழல் பேணிப் பாதுகாக்கப்பட்டு மேம்படுத்தப்படல் வேண்டும்” 27(2) (இ) உறுப்புரை - அனைத்துப் பிரஜைகளும் போதமானளவிலான வாழ்க்கைத் தரத்தை பெற்றுக்கொள்வதனூடாக மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, ஆணைக்குழுவினால் பின்வரும் பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது:

(அ) கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபையுடன் தெளிவான ஒருங்கிணைப்புடன் 2023 மே 19 ஆம் திகதி எனக் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய நடவடிக்கைகளை முடிப்பதற்கு குறிப்பிடப்பட்ட தேதிக்கு முன்னர் உடனடியாக கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபை சட்டத்தின் பிரிவு 34 இன் கீழ், பொருத்தமான சிவில் வழக்கு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதி சட்டமா அதிபருக்கு கட்டளை பிறப்பித்தல்.

(ஆ) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட இரண்டு நிறுவனங்கள் மற்றும் சிங்கப்பூரில் பதிவுசெய்யப்பட்ட குறைந்தபட்சம் ஒரு நிறுவனம் உட்பட பல கூட்டிணைக்கப்பட்ட சில நிறுவன அமைப்புகளுக்கு எதிராக சிவில் வழக்கு நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.

(இ) ஏனைய விடயங்கள் உட்பட இலங்கை நீதிமன்றங்களில் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் சிவில் வழக்குத் தொடரக்கூடாது என்ற முடிவு மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ல் கடல் பேரழிவு தொடர்பான விசாரணை செயல்முறை தொடர்பான அனைத்து ஏனைய முடிவுகளும் உட்பட, அனைத்து அரச அதிகார நிறுவனங்களும் விரிவான வகையில் பொதுமக்களுக்கான பொறுப்புக்கூறலைத் தீர்மானிக்கின்ற மற்றும் உறுதி செய்யும் நோக்கத்தில் ஒரு சுயாதீன விசாரணைக் குழுவை அமைத்தல்.

### 4.3.3. சர்வதேச தரநிலைகளை அங்கீகரித்தல் மற்றும் செயற்படுத்துவதனை ஊக்குவித்தல்

சர்வதேச மனித உரிமைகள் சாசனங்களை அங்கீகரிப்பதனைப் பரிந்துரைப்பதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 10 (உ) இன் கீழ் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த சாசனங்களுக்கு மேலதிகமாக, மேலதிக சான்று ஆவணங்களை அங்கீகரிப்பதற்கு அல்லது அவற்றை அணுகுவதற்கு இலங்கைக்கிருக்கும் சாத்தியத்தை மதிப்பீடு செய்வதற்காக சர்வதேச மனித உரிமைகள் சாசனங்கள் குறித்த சட்டத்தை ஆணைக்குழு தற்போது மீளாய்வு செய்து வருகிறது. அத்தகைய சான்று ஆவணங்களில் ஒன்று பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கைக்கான மேலதிக சான்று ஆவணமாகும். (அதாவது, தனிநபர் முறைப்பாடுகள் நடைமுறையுடன் தொடர்புடையதாகும்). வலிந்து காணாமற்போகச் செய்வதிலிருந்து அனைத்து நபர்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச சாசனத்தின் பிரிவு 31 இன் கீழ் தனிநபர் முறைப்பாட்டு நடைமுறையை ஏற்றுக்கொள்வதற்கான இலங்கையின் சாத்தியத்தையும் ஆணைக்குழு மதிப்பீடு செய்து வருகின்றது. சர்வதேச தரநிலைகளை செயல்படுத்துவதுடன் தொடர்பாக ஆணைக்குழு அதிகார நிறுவனங்களுக்கு பின்வரும் பரிந்துரைகளை வழங்கியுள்ளது:

- **மனித உரிமைகள் பாதுகாவலர்களின் பாதுகாப்பு குறித்த பொதுவான வழிகாட்டல்கள் மற்றும் பரிந்துரைகளை வெளியிடல்**

1998 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை அமர்வின்போது மனித உரிமைகள் பாதுகாவலர்களைப் பாதுகாப்பதற்கான பிரகடனம் அங்கீகரிக்கப்பட்டது. இருப்பினும், குறிப்பாக கைதுகள், தடுத்து வைப்புக்கள் மற்றும் அவர்களின் சட்டபூர்வமான செயல்பாடுகளுக்காக வழக்குத் தாக்கல்கள் என்ற ரீதியில் இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாவலர்கள் தனித்துவமான மற்றும் சில நேரங்களில் தீர்க்க முடியாத சவால்களை எதிர்கொள்கின்றனர் என்பதனை ஆணைக்குழுவுக்கு கிடைக்கின்ற முறைப்பாடுகள் ஊடாக தெளிவாகின்றது. அவர்களிடம் காணப்படும் நல்லெண்ணத்துடனான நோக்கங்களின் முன்னேயும் மனித உரிமைகள் பாதுகாவலர்கள் வன்முறை, அச்சுறுத்தல்கள், பழிவாங்கல்கள், மிரட்டல், யதார்த்தத்திலேயே அல்லது சட்டப்படி பாதகமான பாகுபாடு காட்டுதல், துன்புறுத்தல் மற்றும் ஏனைய தன்னிச்சையான செயல்களை எதிர்கொள்வதுடன், பெரும்பாலும் ஊடகங்களில் இழிவுபடுத்தப்படுகிறார்கள்.

மனித உரிமைகள் பாதுகாவலர்களின் உரிமைகளுடன் தொடர்பாக அரசுக்கு சிறப்புக் கடப்பாடுகள் ∴ பொறுப்புகள் உள்ளன. முதலாவதாக, அவர்கள் மனித உரிமைகள் பாதுகாவலர்களின் உரிமைகளை மதிக்க வேண்டுமென்பதோடு அந்த உரிமைகளை மீறுவதையோ அல்லது தன்னிச்சையாக கட்டுப்படுத்துவதையோ தவிர்க்க வேண்டும். தனியார் துறையினரால் மனித உரிமைகள் பாதுகாவலர்களின் உரிமைகள் மீறப்படுவதிலிருந்து பாதுகாக்கப்படுவதையும் அரசுகள் உறுதி செய்ய வேண்டும். இது போன்ற மீறல்கள் நடந்தால், மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கு பயனுள்ள தீர்வுகளை வழங்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது.

இந்த சூழலில், இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாவலர்களின் உரிமைகள் மதிக்கப்படுவதையும் அர்த்தமுள்ள முறையில் பாதுகாக்கப்படுவதையும் உறுதிசெய்ய பொதுவான வழிகாட்டுதல்கள் மற்றும் பரிந்துரைகளை உருவாக்க வேண்டிய அவசரத் தேவையை ஆணைக்குழு அங்கீகரிக்கிறது.

அதன்படி, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் 2023 ஆம் ஆண்டு சர்வதேச மனித உரிமைகள் தினத்தை நினைவுகூரும் வகையில், 2023 டிசம்பர் 11 ஆம் திகதி இலங்கை மன்றக் கல்லூரியில் மனித உரிமைகள் பாதுகாவலர்களைப் பாதுகாப்பதற்கான பொதுவான வழிகாட்டல்கள் மற்றும் பரிந்துரைகளை வெளியிடப்பட்டது.

- **ஐக்கிய நாடுகள் பொதுச் சபை அமர்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட 2023 தீர்மானத்திற்கு அங்கீகாரம் அளித்தல் மற்றும் அனுசரணை வழங்குவதற்காக அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்தல்**

2023 நவம்பர் 08 ஆம் திகதி வெளியுறவு அமைச்சு ஊடாக முன்வைக்கப்பட்ட முறையான கோரிக்கையின் மூலம் தேசிய மனித உரிமைகள் நிறுவனம் தொடர்பான 2023 பிரேரணையை ஐ.நா. பொதுச் சபையில் அங்கீகரித்துக்கொள்வதற்கு சமர்ப்பிப்பதற்கு இலங்கை அரசாங்கத்தின் வலுவான அங்கீகாரத்தை மற்றும் அனுசரணையை வெளிப்படுத்துமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கை அரசாங்கத்திடம் கோரியது. மேற்கூறிய பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்குமாறும் ஆணையம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தது (மேலதிக விபரங்களுக்கு கீழே 6.1 ஐப் பார்க்கவும்).

## *4.4. கண்காணிப்புப் பணிகள்*

### *4.4.1. பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாமை தொடர்பான கண்காணிப்பு*

ஆணைக்குழுவின் முந்தைய மூலோபாயத் திட்டத்தில் அடையாளம் காணப்பட்ட இலக்குகளில் ஒன்றான ”இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை மற்றும் கண்காணிப்புப் பொறிமுறையை வலுப்படுத்துவதன் மூலம் உடனடி மற்றும் பயனுள்ள தீர்வுகளை வழங்குதல்” எனும் இலக்கிற்கிணங்க, ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட பரிந்துரைகளை செயல்படுத்துவதைக் கண்காணிப்பதற்காக நிறுவப்பட்ட விசாரணை மற்றும் புலனாய்வுப் பிரிவின் பரிந்துரைகளை செயற்படுத்தப்படாமையை கண்காணிக்கும் பிரிவு 2023 முதல் செயற்பட்டு வருகிறது. பரிந்துரைகளை செயல்படுத்தாமை தொடர்பாக விசாரணை செய்வதற்காக பல நிறுவனங்கள் ஆணைக்குழுவினால் வரவழைக்கப்பட்டன. இது தவிர ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளை செயல்படுத்தாத அனைத்து தொடர்புடைய நிறுவனங்களுக்கும் பொதுவான பின்தொடர்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

பரிந்துரைகளை செயற்படுத்தப்படாமையை கண்காணிக்கும் பிரிவின் இத்தகைய முயற்சிகளின் விளைவாக, பல நிறுவனங்கள் குறித்த கட்டளைகள் தொடர்பாக கவனத்தை ஈர்த்து, அந்தப் பரிந்துரைகளை செயல்படுத்த எடுத்த நடவடிக்கைகள் குறித்து ஆணைக்குழுவுக்கு பதில்களை சமர்ப்பித்துள்ளன.

மேலும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளை மறுபரிசீலனை செய்யுமாறு மேன்முறையீடுகள் கோரிக்கைகள் வடிவத்திலும் பெறப்படுகின்றன. அவ்வாறான மேன்முறையீடுகள் ஆணைக்குழுவின் தவிசாளரின் முன்னிலையில் முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்தகைய விசாரணைகளுக்குப் பிறகு, அந்தப் பரிந்துரைகள் திரும்பப் பெறப்படுமா இல்லையா என்பது குறித்து முடிவுகள் எடுக்கப்படும்.

### 4.4.2. தடுப்பு மற்றும் பராமரிப்பு இல்லங்களை மேற்பார்வை செய்தல்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 11(ஈ) இன் கீழ், “நீதித்துறை கட்டளை அல்லது வேறுவிதமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்களின் நலனோம்புகை, அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்களை தொடர்ந்து சோதனையிடல் மூலம் கண்காணித்தல் மற்றும் அவர்களின் தடுப்பு நிலைமைகளை மேம்படுத்துவதற்குத் தேவையான பரிந்துரைகளை வழங்குவதற்கு“ இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய பொலீஸ் நிலையங்கள் மற்றும் சிறைச்சாலைகள் உள்ளிட்ட தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்களை கண்காணிப்பதற்கு ஆணைக்குழு விஜயங்களை மேற்கொள்ளும்.

மேலும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 10 மற்றும் 11 ஆம் பிரிவுகளின் கீழ் ஒரு நபரின் தனிப்பட்ட சுதந்திரம் பறிக்கப்படும் இடங்கள் தொடர்பாக விசாரணை மற்றும் கண்காணிப்புக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு வரையறுக்கப்படாத உரிமை உண்டு. அத்தகைய விஜயங்கள் தொடர்பாக முன்கூட்டியே பகிரங்கப்படுத்தப்படுவதில்லை. உடல் ரீதியான சித்திரவதை செய்யும் சம்பவங்களைத் தடுப்பதற்கு ஏனைய தொடர்புடைய அரச நிறுவனங்கள் மற்றும் அரச சாரா அமைப்புகளுடன் ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பு முயற்சிகளுக்கு மேலதிகமாக வினைத்திறன்மிக்க முன்னெச்சரிக்கை மற்றும் பதிலளிக்கக்கூடிய நடவடிக்கைகள் மூலம் உடல் ரீதியான சித்திரவதை மற்றும் சிறையில் இருக்கும்போது மேற்கொள்ளப்படும் ஏனைய விதத்திலான உரிமை மீறல் சம்பவங்களைத் தடுத்தல், அத்தகைய மீறல்களைச் செய்யும் அதிகாரிகளை அடையாளம் காண்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்தல் மற்றும் தீர்வு நடவடிக்கைகளை பரிந்துரைத்தல் இந்த விஜயங்களின் நோக்கமாகும்.

ஒரு நாளின் 24 மணி நேரமும் செயற்படுகின்ற தொலைபேசி வசதிகளுடனான கருமபீடமொன்று செயற்படுவதுடன், சித்திரவதை, சட்டவிரோத கைதுகள் மற்றும் தடுத்து வைப்புக்கள் தொடர்பான ஏராளமான முறைப்பாடுகள் அதற்கு கிடைக்கின்றது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தொடர்புகொள்வதன் மூலம் உடனடி நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், உடனடி விஜயங்கள் மூலம் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பொலீஸ் நிலையங்களுக்கு மேற்கொள்ளப்படும் விஜயங்களுக்கு மேலதிகமாக, இலங்கை பொலீஸின் கீழ் உள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவு (வுஐனு) மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவு (ஊஐனு) ஆகியவற்றிற்கும் ஆணைக்குழுவினால் சிறப்பு விஜயங்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

பொலீஸ் நிலையங்களுக்கு மேற்கொள்ளப்படும் விஜயங்களின்போது இனங்காணப்பட்ட பொதுவான சிக்கல்களாவன:

- தடுப்புக்கள் தொடர்பான பதிவேட்டை சமர்ப்பிக்கத் தவறியமை.
- கைது செய்யும்போது உரிய செயல்முறையைப் பின்பற்றுவதற்கு தவறியமை

- கைது செய்யப்பட்டிருக்கும்போது தீமை பயக்கும் வகையிலான கவனிப்பு மற்றும் சித்திரவதை செய்தல்.
- சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதனை தாமதப்படுத்தல்
- சிறைக்கூடங்களுக்குள் அதிக நெரிசல் மற்றும் அடிப்படை வசதிகள் இல்லாமை.

பொலீஸ் நிலையங்களை உரிய காலப் பகுதிகளில் கண்காணிப்பதோடு மட்டுமல்லாமல், சிறைச்சாலைகள், தடுப்புக்காவல் இல்லங்கள், தற்காலிக தடுப்பு நிலையங்கள், புனர்வாழ்வு நிலையங்கள் மற்றும் சிறுவர் இல்லங்கள், இயலாமையுடையோர் இல்லங்கள் மற்றும் புலம் பெயர்ந்தோர் தடுப்பு நிலையங்கள் போன்ற ஏனைய தடுப்பு இடங்களுக்கும் ஆணைக்குழு விஜயம் மேற்கொள்கின்றது. வார இறுதி நாட்கள் உட்பட வாரம் முழுவதும் முன்னறிவிப்பின்றி ஆணைக்குழு இந்த இடங்களுக்கு விஜயம் மேற்கொள்வதுடன், சித்திரவதை மற்றும் மோசமான முறையில் கவனித்தல் தொடர்பாக கைதிகளால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை விசாரிக்கிறது. குறிப்பாக, மாதத்திற்கு ஒரு முறை சிறைச்சாலைகளுக்கு விஜயம் மேற்கொள்ளப்படுகின்றது. கோரிக்கையின் பேரில், வருடத்தில் அதனிலும் அதிகமான விஜயங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. சுகாதார உரிமை மீறல்கள், குடும்பங்கள் உட்பட வெளியாட்களுடனான தொடர்புகள் மற்றும் உள்ளக பாதுகாப்பு வசதிகள் இல்லாமை போன்ற பிரச்சினைகளை ஆணைக்குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடிய பின்னர் சில சிக்கல்கள் உடனடியாக தீர்க்கப்பட்டுள்ளன.

பொதுவாக, இத்தகைய விஜயங்கள் பிராந்திய அலுவலகங்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. தடுப்புக்காவல் நிலையங்களைக் கண்காணிப்பதில் இருந்து கைதிகளின் உரிமைகளை உறுதி செய்வது வரை ஆணைக்குழுவின் அதிகாரத்தின் பிரகாரம் அந்த நடவடிக்கைகளின் நோக்கத்தை விரிவுபடுத்துவதில் பிராந்திய மற்றும் உப அலுவலகங்களின் கண்காணிப்பு நடவடிக்கைகள் மிகவும் முக்கியமானவையாகும்.

### 4.4.3. ஐக்கிய நாடுகள் அமைப்பின் அமைதி காக்கும் படையில் பணியாற்றுவதற்காக இலங்கை இராணுவத்தினரை ஈடுபடுத்தல் தொடர்பாக கவனமாக பரிசீலித்தல்

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில், 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம், ஐ.நா அமைதி காக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவுள்ள இராணுவ வீரர்களின் மனித உரிமைகள் தொடர்பான ஆய்வுகள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் ஆரம்பிக்கப்பட்டது. இந்த செயல்முறை ஊடாக பணியமர்த்தப்படும் நபர்கள் மனித உரிமைகளை மதித்தல் மற்றும்

அர்ப்பணிப்பு உட்பட நேர்மையின் மிக உயர்ந்த தரங்களை பூர்த்தி செய்வதனை உறுதி செய்கிறது. 2023 ஆம் ஆண்டில், ஆணைக்குழு அறிக்கைப்படுத்தும் ஆண்டில் ஈடுபடுத்துவதற்காக 410 படை வீரர்களை அதாவது 291 இலங்கை இராணுவத்தினர், 118 இலங்கை விமானப்படை வீரர்கள் மற்றும் 01 இலங்கை கடற்படை வீரர் என ஆணைக்குழு சோதனை செய்து உறுதிப்படுத்தியுள்ளது.

### 4.4.4. சித்திரவதைக்கு எதிரான சாசனம் (ழுீஊயுவு) இன் கீழான தேசிய தடுப்பு பொறிமுறை

“பாதுகாப்பு“ விடயத்துடன் தொடர்புடைய தடுப்புக்காவல் இடங்களுக்கு மேற்கொள்ளப்படும் விஜயங்களுக்கு மேலதிகமாக, சித்திரவதைக்கு எதிரான விருப்பத்தின் பேரில் பின்னேடு (OPCAT) கீழ் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தேசிய தடுப்பு பொறிமுறையாக (ீஆ) செயற்படுகிறது. இலங்கை, சித்திரவதைக்கு எதிரான சாசன விருப்ப விருப்பத்தின் பேரில் பின்னேட்டை (OPCAT) அங்கீகரித்ததைத் தொடர்ந்து, அமைச்சரவையினால் 2017 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட தீர்மானத்துடன்இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவை தேசிய தடுப்பு பொறிமுறையாக (ீஆ) இலங்கை அரசு நியமித்தது. 2022 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவினால் தேசிய தடுப்பு பொறிமுறையை முறையாக நிறுவப்பட்டது.

தேசிய தடுப்பு பொறிமுறை ஒரு குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் நிறுவப்படவில்லை என்றாலும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 11(ஈ) இன் ஏற்பாடுகளின்படி ஆணைக்குழுவுக்கு தேசிய தடுப்பு பொறிமுறையாக செயல்பட முடியும். கைதிகளின் நலனோம்புகை தொடர்பாக கண்காணிக்கும் அதிகாரம் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இருப்பதாக மேற்கூறிய பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், சட்டத்தின் பிரிவு 14 இன் படி, ‘ஆணைக்குழுவினால் அதன் சொந்தப் பிரேரணை அல்லது முறைப்பாடொன்றின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு முடியும்’ எனவும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், சட்டத்தின் பிரிவு 28(2) இன் படி, எந்தவொரு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கும் முன்னறிவிப்பு இல்லாமல் எந்த நேரத்திலும் நுழைவதற்கு ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உண்டு. தேசிய தடுப்பு பொறிமுறை நிறுவப்படுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே, 1997 முதல் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் இந்த அதிகாரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

தடுப்புக்காவல் நிலையங்களில் மேற்கொள்ளப்படும் சித்திரவதை தொடர்பான சவால்களை அடையாளம் காணவும் அவற்றைத் தடுப்பதற்கான பொருத்தமான பரிந்துரைகளை வழங்கவும் 2023 ஆம் ஆண்டில் தேசிய தடுப்பு பொறிமுறையால் பின்வரும் விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டன.

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் தேசிய தடுப்பு பொறிமுறையின் கீழ் விசாரணை மேற்கொள்ளப்பட்ட சில தடுப்பு இடங்களாவன, பயங்கரவாத விசாரணைப் பிரிவு (வுஐனு) தலைமையகம், பயங்கரவாத விசாரணைப் பிரிவு - தடுப்பு நிலையம் - பொல்ஹெங்கொட, பயங்கரவாத விசாரணைப் பிரிவு

தடுப்பு நிலையம் - சைத்திய வீதி, பயங்கரவாத விசாரணைப் பிரிவு - தடுப்பு நிலையம் - தங்காலை, கொழும்பு குற்றப் பிரிவு (ஊஊஊனு) தலைமையகம் மற்றும் குற்றப் புலனாய்வுத் பிரிவு (ஊஜஐனு) தலைமையகம் ஆகியவையாகும்.

**2023 ஆம் ஆண்டில் தேசிய தடுப்பு பொறிமுறையினால் மேற்கொள்ளப்பட்ட விஜயங்கள்**

| இடம் / நிறுவனம் | விஜயங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பயங்கரவாத எதிர்ப்பு விசாரணைப் பிரிவு (ஊவுஜனு) | 01 |
| குற்றப் புலனாய்வுத் பிரிவு (ஊஜஐனு) | 01 |
| சிறைச்சாலைகள் | 10 |
| சிறுவர் இல்லங்கள் | 12 |
| பெண்கள் தடுப்பு இல்லங்கள் | 05 |
| சிறுவர் குற்றவாளிகள் இல்லங்கள் | 01 |
| போதைப்பொருளுக்கு அடிமையானோர் புனர்வாழ்வு நிலையங்கள் | 01 |
| வீடில்லாதவர்கள் தங்கியிருக்கும் இடங்கள் | 01 |
| பொலீஸ் நிலையங்கள் | 02 |

**மூலம் : ஆணைக்குழுவின் தேசிய தடுப்பு பொறிமுறை பற்றிய அறிக்கை**

### 4.4.5. சிறைச்சாலைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தேசிய ஆய்வுப் பெறுபேறுகளின் முன்னேற்றம்

தடுப்புக்காவலில் உள்ள எந்தவொரு இடத்திற்கும் சென்று தடுப்புக்காவல் நிலைமைகளை அவதானித்து அந்த நிலைமைகளை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமைய ஐ(சட்டத்தின் பிரிவு 28(2))ஸ இலங்கையில் சிறைச்சாலைகள் பற்றிய முதலாவது தேசிய ஆய்வு 2018 இல் ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஆய்வு 2020 இல் வெளியிடப்பட்டது. இந்த ஆய்வின் கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகள் இலங்கையின் சிறைச்சாலைகள், தண்டனை மற்றும் சீர்திருத்த முறைமை, அத்துடன் பரந்த குற்றவியல் நீதி நியாய அமைப்பு ஆகியவற்றைப் புரிந்துகொள்வதில் இருக்கும் இடைவெளிகளை நிவர்த்தி செய்து பொதுவான புரிதலை அதிகரிக்கின்றன. சிறைச்சாலைகள் அமைப்பு, கட்டமைப்பின் குறைபாடுகளையும் இது எடுத்துக்காட்டுகிறது.

சிறைவாசம் என்பது முற்றிலும் தண்டனைக்குரிய நடவடிக்கை என்ற கருத்தை மாற்றவும், கைதிகளை சமூகத்துடன் மீண்டும் ஒருங்கிணைப்பதை உறுதி செய்யவும் சிறை அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்க வேண்டியதன் அவசியத்தை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அடையாளம்

கண்டுள்ளது. இது தவிர, புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு சாதகமான மோதல் தீர்வு, வன்முறையற்ற தொடர்பாடல் மற்றும் கைதிகளுடன் உறவுகளை எவ்வாறு கட்டியெழுப்புதல் என்பது குறித்த அறிவு சிறை அதிகாரிகளுக்கு இல்லை என்ற விடயத்தின் மீதும் கவனம் செலுத்தப்பட்டது. ஐக்கிய நாடுகள் அமைப்பின் அபிவிருத்தித் திட்டத்தின் துருசுநு கருத்திட்டத்தின் மூலம் நிதியளிக்கப்பட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட சிறைச்சாலைகள் பற்றிய ஆய்வின் பரிந்துரைகளுக்கு இணங்க, எட்டு வலயங்களில் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு எட்டு இயலளவு மேம்பாட்டுப் பயிற்சிகள் நடாத்தப்பட்டன. இந்தப் பயிற்சி 2023 நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கண்டி, பதுளை, மாத்தறை, அம்பாறை, வவுனியா மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் உள்ள ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகங்களில் நடாத்தப்பட்டது.

அறிக்கையிடப்பட்ட ஆண்டில், மேற்கூறிய ஆய்வின் பரிந்துரைகளுக்கு இணங்க, சிறுவர் குற்றவாளிகளின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதி செய்வதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்ச்சியான பயிற்சித் திட்டங்களை நடாத்தியது. ஆணைக்குழுவின் பயிற்சித் தொடரின் முதலாவது கட்டமாக, ஒன்பது சிறுவர் குற்றவாளிகளின் பங்கேற்புடன், வட்டரெக்கவில் அமைந்துள்ள சிறுவர் குற்றவாளிகள் பயிற்சி நிறுவனத்தில் ஒரு பயிற்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டது. இந்தப் பயிற்சியானது நேர்மறை சிந்தனை போன்ற கருவிகள் ஊடாக சிறுவர் குற்றவாளிகள் சமூகத்துடன் மீண்டும் ஒன்றிணையும்போது அவர்களிடத்தில் தன்னம்பிக்கையை வளர்ப்பதையும், அவர்களின் உள ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டது.

பயிற்சித் தொடரின் இரண்டாவது கட்டமாக, குறிப்பாக சிறுவர் குற்றவாளிகளுக்கான பயிற்சி நிறுவனம் மற்றும் பயிற்சிப் பாடசாலைகளுக்கு விஜயங்கள் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மனித உரிமை அதிகாரிகள் மற்றும் சட்ட அலுவலர்களுக்காக சிறுவர் குற்றவாளிகள் தொடர்பான சர்வதேச சட்டம் மற்றும் நடைமுறைகள், உள்நாட்டு சட்டங்கள் மற்றும் நீதித்துறை கட்டமைப்பு பற்றிய அறிவு, இலங்கையில் சிறுவர் குற்றவாளிகளின் நிலைமை மற்றும் கடமையாற்றுபவர்களின் பங்கு உட்பட அவர்களின் இயலளவை வளர்த்துக் கொள்வதற்காக பயிற்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டது.

அதன் பின்னர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பயிற்சித் தொடரின் மூன்றாவது மற்றும் இறுதிக் கட்டமாக, வட்டரெக்கவில் உள்ள சிறார் குற்றவாளிகள் பயிற்சி நிறுவனத்தில் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு ஒரு பயிற்சித் திட்டத்தை நடாத்தியது. சிறைச்சாலைகள் பற்றிய தேசிய ஆய்வின்போது அடையாளம் காணப்பட்ட சிறுவர் குற்றவாளிகளின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்ற, மனித உரிமைகள்,

சிறுவர் குற்றவாளிகளின் உரிமைகள், சிறைச்சாலை அமைப்புகளில் சர்வதேச தரநிலைகள் மற்றும் நடைமுறைகள் மற்றும் சிறார் குற்றவாளிகள் தொடர்பான உள்நாட்டு சட்டங்கள் குறித்த அறிவு சிறை அதிகாரிகளுக்கு இல்லாமை, போன்ற சில பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதே பயிற்சியின் நோக்கமாகும். சிறுவர் குற்றவாளிகளின் பொறுப்பை சிறைச்சாலைகள் திணைக்களத்திலிருந்து நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்திற்கு மாற்றப்படல் வேண்டுமென்பது சிறைச்சாலைகள் அதிகாரிகளின் கருத்தாகும். இந்த விடயம் தொடர்பான அவர்களின் கருத்தை மாற்றுவதற்கு மற்றும் கூட்டுப் பொறுப்பு மற்றும் தொடர்புடைய தரப்புக்களின் ஒருங்கிணைந்த நிறுவனம்சார் வலையமைப்பிற்கான தேவைப்பாடு பற்றி அறிந்துகொள்வதன் மூலம் அவர்களின் ஒத்துழைப்பை மேம்படுத்தவும் இந்த பயிற்சி பயன்பட்டது.

## *4.5. புலனாய்வுகள்*

### *4.5.1. கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் பற்றியது*

வழக்கின் தன்மை, மனுதாரர்கள் மற்றும் பிரதிவாதிகள் பற்றிய விவரங்கள், பொறுப்புக்கூற வேண்டிய விசாரணை அலுவலர்கள், வழக்கின் நிலைமை போன்ற ஒவ்வொரு வழக்கின் முக்கிய விவரங்களையும் அடையாளம் காண்பதற்காக விசாரணை மற்றும் புலனாய்வுப் பிரிவு ஒரு தரவுத்தளத்தைப் பேணி வருகின்றது. முறைப்பாடானது ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்குட்பட்டதாயின் மற்றும் அதனை நோக்கும்போது உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தெரிய வருமாயின், பிரதிவாதிகளிடமிருந்து அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளல், மனுதாரர்களிடமிருந்து சாட்சியங்களைச் சேகரித்துக்கொள்ளல், அறிக்கைகளுக்கான அவதானிப்புகளைப் பெற்றுக்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு ஆரம்ப விசாரணை நடாத்தப்படுகிறது. உரிமை மீறலின் தீவிரத்தை மதிப்பீடு செய்வதற்காக ஒவ்வொரு அறிக்கை தொடர்பிலும் முழுமையான பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. ஓனீ அதன் பின்னர், இந்த விடயத்தை விசாரணை செய்வதற்காக தொடர்புடைய தரப்பினர் கூட்டாகவோ அல்லது தனித்தனியாகவோ அழைக்கப்படுகிறார்கள். விடயங்களை ஆய்வு செய்ததன் பின்னர், அடிப்படை உரிமைகள் மீறல் தொடர்பான பரிந்துரைகளை வெளியிடல், மேலும் உரிமை மீறல்களை சரிசெய்வதற்காக செயற்படுத்தப்பட வேண்டிய கட்டளைகள் தொடர்புடைய அதிகாரிகளுக்கு பிறப்பிக்கப்படுகின்றன. (பரிந்துரைகள் பற்றிய மேலதிக விவரங்களுக்கு மேலே 3.3 மற்றும் பின்னிணைப்பு 2 ஐப் பார்க்கவும்).

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால், ஆணைக்குழுவின் விடயப் பரப்புக்குள் உள்ளடக்கப்படாத முறைப்பாடுகளை ஏனைய தொடர்புடைய அரச நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றது. அரசாங்க சேவை ஆணைக்குழு, தேசிய பொலீஸ் ஆணைக்குழு, தேசிய குழந்தைகள் பாதுகாப்பு அதிகார சபை, அரச கரும மொழிகள் ஆணைக்குழு, தொழில்

ஆணையாளர், சட்ட உதவி ஆணைக்குழு ஆகியவை இவ்வாறு முறைப்பாடுகளை அனுப்பும் ஏனைய தரப்புக்களுக்கு கீழ் உள்ளடக்கப்படும். பொருத்தமான சூழ்நிலைகளில் தரப்பினரிடையே சமரசம் மற்றும் தீர்வை எளிதாக்குவதற்கு வசதிகளை ஏற்படுத்துவதற்கு ஆணைக்குழுவுக்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகங்களினால் தலைமை அலுவலகத்திலிருந்து அனுப்பப்படும் மற்றும் நேரடியாக பிராந்திய அலுவலகங்களில் தாக்கல் செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பான ஆரம்ப விசாரணைகள் நடாத்தப்பட்டு ஆரம்ப விசாரணைகள் நிறைவடைந்ததன் பின்னர், தொடர்புடைய சம்பவம் பற்றிய அறிக்கையைக் கொண்ட கோப்பு அதன் விசாரணை அறிக்கையுடன் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்படும்.

நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட்டுவரும் வழக்குகள் தொடர்பிலான தலையீட்டை (அது பற்றிக் கவனத்திற்கொள்ளல் ∴ நடவடிக்கை மேற்கொள்ளல்). இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்கொள்வதில்லை.

### 4.5.2. மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் சொந்தப் பிரேரணைகள் அடிப்படையிலான விசாரணைகள் (ளுரழ ஆழவர ஐைெநளவபைவழைளெ)

இலங்கை மனித உரிமைகள் சட்டத்தின் 14 ஆவது பிரிவின் கீழ் தனது சொந்தப் பிரேரணைகளுக்கமைய (சுய வழிநடாத்தலின் கீழ்) (*ளரழ அழவர்*) சில சிக்கல்கள் தொடர்பாக தலையீடுகளை மேற்கொள்வதற்கு முடியும். அநேகமாக முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய சிக்கல்கள், ஊடக அவதானிப்புக்கள் ஊடாக இனங்கண்டு கொள்ளப்பட்ட தலையீட்டிற்கான தேவைப்பாடு மற்றும் ஆணைக்குழுவின் கவனத்திற்கு தனி நபர்கள் அல்லது அமைப்புக்கள் ஊடாக முன்வைக்கப்படும் பிரச்சனைகள் இதில் உள்ளடங்கும். விசாரணைகள் மற்றும் புலனாய்வுகள் பிரிவு, ஆராய்ச்சி மற்றும் மேற்பார்வை ஆகிய பிரிவுகள் நெருங்கிய ஒத்துழைப்புடன் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2023 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவினால் பல்வேறு நிகழ்வுகளுடன் தொடர்பாக 23 சொந்தப் பிரேரணை விசாரணைகள் (*ளரழ அழவர்*) மேற்கொள்ளப்பட்டன. (தனி நபர்களுடன் தொடர்புடைய சொந்தப் பிரேரணை விசாரணைகளுக்கு கீழே 5.2 மற்றும் *ளரழ அழவர* முழுமையான பட்டியலுக்கு கீழே அட்டவணை 3 இனைப் பார்க்கவும்.)

## 4.6. கல்விசார் மற்றும் ஆணைக்குழுவை பிரஜைகளுடன் தொடர்புபடுத்துவதற்கான பணிகள்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவு ஊடாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, மனித உரிமைகள் பிரச்சினைகள் குறித்து பொதுமக்களின் விழிப்புணர்வையும் உணர்திறனையும் உயர்த்துவதில் ஆணைக்குழு தீவிரமாக ஈடுபட முயற்சிக்கிறது. குடிமக்களின் மனித உரிமைகளை மேம்படுத்துவதும் பாதுகாப்பதும் ஆணைக்குழுவின் இருப்பின் முதன்மையான நோக்கம் என்பதனால்இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாக பொது மக்கள் கருதப்படுகிறார்கள். கூட்டாக வாழுகின்ற பிரஜைகளிடையே மனித உரிமைகளை எடுத்தியம்புவதற்கு ஆணைக்குழு முயற்சி செய்வதுடன், மனித உரிமைகள் மேம்படுத்தப்படுகின்ற ஒரு சமூகம் மற்றும் கலாச்சாரத்தை உருவாக்குவதனை ஊக்குவிக்கின்றது. எனவே, இந்த நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு உதவிய இது போன்ற பல நிகழ்வுகளை ஆணைக்குழு 2023 ஆம் ஆண்டில் ஆரம்பித்தது.

### 4.5.3. மனித உரிமைகள் தொடர்பான விதிமுறைகள் மற்றும் பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

### அ) சர்வதேச ஞாபகார்த்த தின வைபவங்கள்

- **சர்வதேச மனித உரிமைகள் தினம் - 2023**

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, 2023 டிசம்பர் 11 ஆம் திகதி இலங்கை மன்றக் கல்லூரியில் மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவை நினைவுகூர்ந்தது. “அனைவருக்கும் மதிப்பளித்தல், சுதந்திரம் மற்றும் நீதி” என்பது இதன் கருப்பொருளாக இருந்தது. இந்த ஞாபகார்த்த வைபவம் தவிசாளரால் வழிநடாத்தப்பட்டதுடன், ஏனைய ஆணையாளர்களும் பங்கேற்றனர். அரச அதிகாரிகள், அமைச்சு அதிகாரிகள் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகள் மனித உரிமைகள் கோட்பாடுகளை மேம்படுத்துவதற்கான கூட்டு அர்ப்பணிப்பின் அவசியத்தை வலியுறுத்தினர். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான கலாநிதி ராதிகா குமாரசுவாமி இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.





இந்த நிகழ்வில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் *"மனித உரிமைகள் பாதுகாவலர்களைப் பாதுகாப்பதற்கான பொதுவான வழிகாட்டல்கள் மற்றும் பரிந்துரைகள்", "தேசிய உளநல சுகாதார நிறுவனத்தில் நோயாளிகளின் ஆரோக்கியம் மற்றும் சுதந்திரத்திற்கான உரிமை பற்றிய தகவல்களைக் கண்டறியும் பணி"* குறித்த அறிக்கை மற்றும் *"கைதியாக இருக்கும்போது மற்றும் எதிராளிகளாக சந்திக்கும்போது ஏற்படும் மரணங்களைத் தடுப்பது குறித்து இலங்கை பொலீஸ் மற்றும் ஏனைய அதிகார நிறுவனங்களுக்கான வழிகாட்டல்கள்"* ஆகியன வெளியிடப்பட்டன. இந்த வழிகாட்டல்கள் ∴ அறிக்கைகள் வெளியிடுதல் பல்வேறு துறைகளில் கடுமையான மனித உரிமைகள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்கும் ஆணைக்குழுவின் உறுதிப்பாட்டை வலியுறுத்துகின்றது.



இலங்கையில் மனித உரிமைகளை ஏற்றுக்கொள்வதற்காக அர்ப்பணிப்புடன் நடவடிக்கை மேற்கொள்ளுகின்ற தரப்புக்களிடையே உரையாடல் மற்றும் ஒத்துழைப்பை விருத்தி செய்வதற்கான தளமாக இந்த நிகழ்வு காணப்பட்டது. மிகவும் நியாயமான மற்றும் பக்கச்சார்பின்றிய சமூகமொன்றை தோற்றுவிப்பதற்கு மிகவும் பாடுபடும் ஒரு தேசமாக, தேசிய மனித உரிமைகள் தினக் கொண்டாட்டம் எதிர்கால சந்ததியினருக்கு மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான கூட்டு முயற்சிகளில் ஈடுபடுவதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டியவாறு அனைவருக்கும் கண்ணியம், சுதந்திரம் மற்றும் நீதி ஆகிய பெறுமதிகளை தொடர்ந்து பராமரிப்பதை வலியுறுத்துகிறது.

- **சித்திரவதைக்கு ஆளானவர்களுக்கு ஆதரவளிக்கும் சர்வதேச தினம் - 2023**

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நாடு பூராவும் உள்ள பொலீஸ் நிலையங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 170 உப பொலீஸ் பரிசோதகர்களுக்கான நிகழ்ச்சித் திட்டமொன்று 2023 ஜூன் 26 ஆம் திகதி களுத்துறை பொலீஸ் பயிற்சி நிறுவனத்தில் நடாத்தப்பட்டது. குற்றவியல், போக்குவரத்து, சிறு குற்றங்கள் போன்றவற்றுக்குப் பொறுப்பான பொறுப்பதிகாரிகள் இதில் பங்குபற்றினர்.




சர்வதேச மனித உரிமைகளுடன் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் அவற்றின் பயன்பாடுகள், தொடர்புடைய உள்நாட்டு சட்டங்கள் மற்றும் அரசியலமைப்பு ஏற்பாடுகள், சித்திரவதையிலிருந்து விடுதலையுடன் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் அரசியலமைப்பு ஏற்பாடுகளின் சட்ட ரீதியிலான பொருள்கோடல், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு போன்ற நிவாரணம் வழங்கும் நிறுவனங்களால் வழங்கப்படும் சேவைகள் மற்றும் அவ்வாறான சந்தர்ப்பங்கள் தொடர்பாக நிறுவனத்தின் பங்கு போன்ற தலைப்புகளில் பங்கேற்பாளர்களுக்கு விடயங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டன.

## *ஆ) பல்வேறு கவனயீர்ப்புக் குழுக்களுக்கான பயிற்சிகள் மற்றும் கலந்துரையாடல்கள்*

- இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, அதன் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்கள் ஊடாக ஏனைய அரச நிறுவனங்களால் செயற்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு வளவாளர்களை வழங்குவதன் மூலமும், ஆணைக்குழுவுடன் தொடர்புடைய தலைப்புகளிலான கலந்துரையாடல்களுக்கு முனைப்புடன் பங்களிப்பதன் மூலமும் ஒத்துழைப்பை வழங்குகின்றது. 2023 ஆம் ஆண்டில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் பல்வேறு வகையான ஆர்வமுள்ள பாடத் துறைகளில் விரிவுரைகளை நடாத்தியதுடன், கலந்துரையாடல்களிலும் பங்கேற்றது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பின்வரும் தேர்ந்தெடுக்கப்பட்ட வாய்ப்புகளுக்கு பங்களிப்பை வழங்கியது:

    - இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் தோட்டத் துறை ஊழியர்களின் சுகாதார உரிமைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு மற்றும் தோட்டத் துறை ஊழியர்களுக்கு சம வாய்ப்புடனான சுகாதார வலையமைப்பை நிறுவுதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இரத்தினபுரி மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் அரசாங்க குடும்ப சுகாதார சேவை அதிகாரிகள் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்களுக்கு 05 பயிற்சித் திட்டங்களை நடாத்தியது. இவை 2023 ஜூலை முதல் நவம்பர் வரை நடத்தப்பட்டன.
    - ஒழுக்கம் ∴ சமூக ஆய்வுகள் விடயத்திற்குப் பொறுப்பான ஆசிரியர்களுக்கான இரண்டு நாள் பயிற்சித் திட்டம் மாத்தறை, பதுளை மற்றும் அனுராதபுரத்தில் நடைபெற்றது.
    - சித்திரவதை தொடர்பான தேசிய தடுப்பு பொறிமுறை குறித்த தேசிய ஆலோசனை 2023 நவம்பர் 30 ஆம் திகதி நடைபெற்றது.
    - பொலீஸ் திணைக்களத்தின் தலைமை தலைமை பரிசோதகர்கள் மற்றும் ஏனைய பொலீஸ் அதிகாரிகள் குழுவை இலக்காகக் கொண்டு, நீர்கொழும்பில் உள்ள தேசிய பொலீஸ் கற்கை நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள், இலங்கை மனித உரிமைகள்

ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மற்றும் அலுவல்கள், பாலின அடிப்படையிலான வன்முறை, சர்வதேச சட்டம், பெண்கள் உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள் போன்ற பல்வேறு கருப்பொருள்கள் தொடர்பாக அவ்வப்போது நடைபெறும் செயலமர்வுகுளின் ஒரு பகுதியாக அது தொடர்பான அறிவை விருத்தி செய்வதற்கான விரிவுரைகள் ஞுழழஅ தொழில்நுட்பம் மற்றும் ஆழைஉசழளழகவ வுநயஅள தொழில்நுட்பம் மூலம் ஆண்டு முழுவதும் முறையாக நடத்தப்பட்டன.

- இயலாமையுடைய நபர்களில் 3% ஆனோருக்காக அரச சேவையில் தொழில் வாய்ப்பை வழங்குவதற்கான 1988 ஆம் ஆண்டின் 27/28 ஆம் இலக்க சுற்றறிக்கையை மீளாய்வுக்குட்படுத்தல் மற்றும் திருத்தியமைப்பதற்காக துருசுநு கருத்திட்டத்தின் கீழ், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் 2023 யூலை 19 ஆம் திகதி வட்டமேசை கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டது. இந்தக் கலந்துரையாடலில் அரச நிறுவனங்கள் மற்றும் இயலாமையுடையோர் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் பங்கேற்றனர். இந்த சுற்றறிக்கையை திருத்துவதற்கான வழிகாட்டகள் தற்போது ஆணைக்குழுவினால் வரைவு செய்யப்பட்டு வருகின்றது. இந்த முயற்சியானது இயலாமையுடையோர்களின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சாசனத்திற்கு இணங்க, ஆலோசனை மற்றும் கொள்கை ரீதியிலான தலையீடு மூலம் இயலாமையுடையோர்களுக்கான வேலை வாய்ப்புகளுக்கு சமமான வாய்ப்பை உறுதி செய்வதாகும்.
- தேசிய உளநல நிறுவனத்தினால் (ஜேஆர்) அதன் தாதியர் ஆளணி மற்றும் மருத்துவர்களின் அறிவை அதிகரிக்கும் நோக்கில், 2023 செப்டம்பரில் அதன் வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட பணியிடங்களில் மேற்கொள்ளப்படும் பாலியல் துன்புறுத்தல் குறித்த செயலமர்வுக்கு விரிவுரை உதவியை வழங்கியது.

- 2023 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவினால் தனிநபர்களுக்கு மனித உரிமைகள் கல்வியை வழங்குவதற்கு ஒரு ஆன்லைன் தொலைதூரக் கற்றல் பொறிமுறையை முறையாக உருவாக்கப்பட்டது. இந்த எண்ணக்கரு ஊடாக முக்கியமாக ஒரு விரிவான தொலைதூரக் கல்வி பொறிமுறைக்கான பரிந்துரை மற்றும் உள்ளடக்கத்தை உருவாக்குவதில் கவனம் செலுத்தப்பட்டது. மனித உரிமைகள் குறித்த இந்தப் பாடநெறிகள் அடிப்படை, அறிமுகநிலை, இடைநிலை மற்றும் உயர் மட்டங்கள் உட்பட பல்வேறு தேர்ச்சி மட்டங்களை உள்ளடக்கிய வகையில் எந்தவொரு தனிநபர் ∴ நபர்களும் அணுகக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. அடிப்படை மற்றும் உயர் மட்டங்களில் கற்பவர்களுக்கு கல்வியை வழங்குவதன் மூலம் மனித உரிமைகள் குறித்த பொதுமக்களின் புரிதலையும் விழிப்புணர்வையும் மேம்படுத்துவதே முக்கிய இலக்காகும்.


2023 ஆம் ஆண்டின் இறுதிக்குள் கல்வி ஆலோசகர் அனைத்து மட்டங்களிலும் உள்ள பாடநெறிகளுக்கான மொடியூல்களை தயாரித்துள்ளார். இந்த மொடியூல்களை 2024 ஆம் ஆண்டில் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

- இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் மேற்கு, வடக்கு, ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களில் வாழுகின்ற இயலாமையுடைய நபர்களுக்கு அணுகலை மேம்படுத்துவதற்காக அணுகல் கணக்காய்வுக் குழுக்களை நிறுவுவதற்காக, இயலாமையுடையோர் மற்றும் அரச அதிகாரிகளுக்கு அணுகல் கணக்காய்வுப் பயிற்சியை நடாத்தியது. 2023 ஆம் ஆண்டின் இறுதியாகும்போது பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் இந்தப் பயிற்சி நிறைவடைந்தது. இந்தப் பயிற்சித் திட்டங்களில் பங்கேற்றவர்களும் இயலாமையுடையோரின் உரிமைகள் குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்தினர். அரச நிறுவனங்களில் இயலாமையுடையோர் அணுகல் கணக்காய்வுகளை நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அது இயலாமையுடைய நபர்களின் உட்கட்டமைப்புத் தேவைகளை மேம்படுத்துவதிலும், தனிப்பட்ட உரிமைகளுக்கு ஒத்துழைப்பை வழங்குவதற்கான முதல் படியாக இருக்கும்.

## *இ) ஆலோசனை வழங்குதல்*

நாட்டின் இளம் பிரஜைகள் ஊடாக முதலீடு செய்தல், குறிப்பாக மனித உரிமைகளை மேம்படுத்துவதிலும் பாதுகாப்பதிலும் தீர்க்கமான மற்றும் முற்போக்கான கட்டமாக இருக்கும் சூழலில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 2017 இல் புனரமைக்கப்பட்ட உள்ளக பயிற்சித் திட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. சுயமாக முன்வந்து சேவையாற்றும் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டு பூராவும் எந்தவொரு துறையிலும் பட்டப் படிப்பை மேற்கொள்ளுகின்ற மாணவர்களிடமிருந்தும், சமீபத்தில் பட்டம் பட்டதாரிகளிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டன.இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பங்கை நிறைவேற்றுவதற்காக ஆராய்ச்சி உட்பட ஆணைக்குழுவின் செயல்பாடுகளை ஊக்குவிக்கவும் பாதுகாக்கவும் இளைஞர்களிடையே பொது நன்மையுடன் தொடர்புடைய பணிகளில் ஈடுபடுவதற்கான அர்ப்பணிப்பை வளர்ப்பதற்கும், வெற்றிகரமான விண்ணப்பதாரர்களை அனுப்புவதே இந்த திட்டத்தின் நோக்கமாகும். உள்ளகப் பயிற்சிகள் குறைந்தபட்சம் மூன்று மாத காலத்திற்கு திட்டமிடப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளதுடன், உள்ளக பயிற்சியாளர்களுக்கு தலைமை அலுவலகத்தில் அல்லது பணிப்பாளர்கள் அல்லது பிராந்திய ஒருங்கிணைப்பாளர்களின் நெருங்கிய வகையிலான மேற்பார்வையின் கீழ் ஒரு பிராந்திய அலுவலகத்தில் பயிற்சி பெறுவதற்கான தெரிவுக்கான வாய்ப்பு வழங்கப்பட்டது. மேற்குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் பற்றிய அறிவித்தல் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டதுடன், மின்னஞ்சல் மூலம் பட்டம் வழங்கும் கல்வி நிறுவகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

2023 ஆம் ஆண்டில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பணியாற்றுவதற்காக 145 உள்ளகப் பயிற்சியாளர்கள் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டதுடன், இது முந்தைய ஆண்டில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 89 பயிற்சியாளர்களுடன் ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஆகும். தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களுக்கு இடையில் பயிற்சியாளர்கள் பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்பட்டனர்:




### *4.5.4 ஊடகங்களுடனான தொடர்புகள்*

நிறுவனமானது பொது மக்களுடன் நெருங்கும் முயற்சிகளின் ஒரு அங்கமாக ஆணைக்குழுவினால் பிரசித்தப்படுத்தல் அத்தியாவசியமெனக் கருதப்படும் பிரதான விடயம் பற்றியும் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் தொடர்பாக பொது மக்களுக்கு அறிவூட்டுவதற்கும் ஊடகங்களுடனான தொடர்பு பேணி வரப்பட்டது. இதற்காக ஆணைக்குழுவானது பாரம்பரிய அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களைப் போன்றே இணையவழித் தளங்களையும் விருத்தி செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்துகின்றது.

#### *அ) பாரம்பரிய அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுடன் நடவடிக்கை மேற்கொள்ளல்*

ஆணைக்குழுவின் அனைத்து கொள்கை சார்ந்த பரிந்துரைகள், தலையீடுகள் மற்றும் அறிவுறுத்தல்கள் வெளியீடுகளைப் போன்றே பணிப்புக்கள் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு பொது

மக்களுக்கு அவற்றை அணுக முடியுமான வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. சில சந்தர்ப்பங்களில் சிவில் சமூக அமைப்புக்கள், ஆணைக்குழுவின் கருப்பொருள் சார்ந்த உப குழு அங்கத்தவர்கள், இலங்கையின் இராஜ தந்திர தூதுவராலயங்கள், சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் மனித உரிமைகள் நிறுவனங்கள் கூட்டமைப்பின் தொடர்பாடல் வலையமைப்பு மற்றும் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் தேசிய மனித உரிமைகள் நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்புக்களுக்கு இலத்திரனியல் முறையில் பகிர்ந்துகொள்ளப்படுகின்றது. அவ்வாறான இற்றைப்படுத்தல்கள் மற்றும் தகவல்களை பொது மக்கள் அறிந்துகொள்வதற்காக பிராந்திய அலுவலகங்களின் அறிவித்தல் பலகைகளில் காட்சிப்படுத்துவதற்காக குறித்துரைக்கப்பட்ட அறிவுறுத்தல்களுடன் அனைத்து பிராந்திய அலுவலகங்களுக்கும் அனுப்பப்படுகின்றது. ஆணைக்குழுவினால் ஆசிய பசுபிக் ஒன்றியத்தின் செய்திகளில் வெளியிடுவதற்கும் தகவல்கள் வழங்கப்படுவதுடன் அந்த செய்தி இதழ்களில் போன்றே உலகளாவிய ரீதியில் விரிவான வாசகர்களுக்கு அதனூடாக தகவல்கள் வழங்கப்படுகின்றது.

### ஆ) இணையவழி தளங்ளைப் பயன்படுத்தல்

ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஆலோசனையை வழங்குவதற்காக அதன் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் பற்றி பொது மக்களை அறிவுறுத்துவதற்காக முகநூல் மற்றும் டுவிட்டர் சமூக ஊடக தளங்கள் முறையாகப் பயன்படுத்திக்கொள்ளப்படுகின்றது.

## 4.5.5 சிவில் சமூக அமைப்புக்களுடனான தொடர்புகள்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசேடமாக பிராந்திய அலுவலகங்களினூடாக சிவில் சமூக அமைப்புக்களுடன் நெருங்கிய வகையில் நடவடிக்கை மேற்கொள்கின்றது. ஆணைக்குழுவின் அலுவல்கள் மற்றும் செயற்பாடுகளை போசிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற சிவில் சமூக அமைப்புக்கள் உயர் விருதுகளுக்கு உட்படுத்தப்படுவதுடன், ஆணைக்குழுவினால் முக்கியமாக மனித உரிமைகளுடன் தொடர்புடைய பணிகளில் ஈடுபடுகின்ற சிவில் சமூக அமைப்புக்களின் நடவடிக்கைகளுக்கு பங்களிப்பு வழங்கப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் சிவில் சமூகத்தின் உதவி ∴ தொடர்புடன் தனது எண்ணக்கரு நாடு பூராவும் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

### அ) பிராந்திய சிவில் சமூக அமைப்புக்கள் ஒருங்கிணைப்புக் குழுக்கள்

பிரதேச மட்டத்திலான சிவில் சமூக ஒருங்கிணைப்புக் குழுக்கள் ஊடாக ஆணைக்குழு பெற்றுக்கொள்ளும் நெருங்கிய வகையிலான ஒத்துழைப்பானது

மனித உரிமைகள் மீறல்களை இனங்கண்டுகொள்ளல் அல்லது ஆணைக்குழுவின் தலையீடுகள் தேவைப்படும் நிலைமைகளை இனங்கண்டுகொள்வதற்கு வழங்கப்படுகின்றது. மேலும், இந்த ஒருங்கிணைப்புக் குழுக்கள், பிரதேச ரீதியில் மனித உரிமைகளைப் பாதுகாக்கின்ற நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக ஆணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றன. 2023 ஆம் ஆண்டில் இவ்வாறான கூட்டங்களை நடாத்துவதற்கு ஆணைக்குழு தொடர்ச்சியாக நடவடிக்கை மேற்கொண்டது

## *ஆ) கருப்பொருள் சார்ந்த உப குழு அங்கத்தவர்களாக சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள்*

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் கருப்பொருள் சார்ந்த உப குழுக்களின் அங்கத்தவர்களாக நடவடிக்கை மேற்கொண்டு ஆணைக்குழுவின் அலுவல்களுக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பை வழங்குவதற்கான வாய்ப்பை பெற்றுக்கொள்ளுமாறு சிவில் சமூகத்தின் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் செயற்பாட்டு அங்கத்தவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. சிவில் சமூகம் உப - குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுவதனூடாக ஆணைக்குழுவுக்கு தனதுகொள்கை மட்டத்திலான எண்ணக்கருக்கள் ∴ முயற்சிகளை மேம்படுத்திக்கொள்வதற்கு அவற்றின் நிபுணத்துவ அறிவு மற்றும் அனுபவத்தைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக் கிடைத்தது. (மேலதிக தகவல்களுக்கு கீழே 5.1 ஐப் பார்க்கவும்.)

## *இ) சிவில் சமூக அமைப்புக்களினால் ஏற்பாடு செய்யப்படும் பல்வேறு நிகழ்வுகளில் பங்குபற்றல்*

2023 ஆம் ஆண்டில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் மற்றும் ஆளணி அங்கத்தவர்கள் சிவில் சமூக அமைப்புக்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட கீழ் குறிப்பிடப்படும் நிகழ்ச்சிகளில் பங்குபற்றினர் :

- ஏநுயேுளுயு அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட டுபுடீவுஞ பிரஜைகளின் உரிமைகள் தொடர்பான கலந்துரையாடல்.
- பொது மக்களுக்கான சட்டம் மற்றும் மனித உரிமைகள் நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பொது மனித உரிமைகள் தொடர்பான அறிவுறுத்தல் நிகழ்ச்சித் திட்டம்.
- நுஙரவைல ளுடு இனால் 2023 ஜனவரி 09 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்ட டுபுடீவுஞ நபர்களின் பிரபஞ்ச தவணை மீளாய்வின்போது (ருளைநசளயட ீநசழைனநை சுநஎநைற) வெளிப்படுத்திக்கொள்ளலுடன் தொடர்புடைய கலந்துரையாடல்

## ஈ) சிவில் சமூக அமைப்புக்களுடனான கலந்துரையாடல்கள்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் தீர்வுகளை வழங்குவதற்கான கலந்துரையாடலை மேற்கொள்வதற்கு தனது தேவைகள் மற்றும் குறைகளை தலைமை அலுவலகத்திற்கு அனுப்புமாறு சிவில் சமூக அமைப்புக்களுக்கு ஆண்டின் ஆரம்பத்திலேயே அழைப்பு விடுக்கப்பட்டது. அந்தக் கலந்துரையாடல்களுக்கான உதாரணங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன: ஏற்றுமதி செயலாக்க வலயங்களில் அயஜ ிழறநச பிரிவின் கீழ் பணியாற்றும் ஊழியர்களின் தொழிலாளர் உரிமைகள் மீறப்படல் மற்றும் அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் குறுகிய கால மற்றும் நீண்ட கால அடிப்படையிலான தலையீட்டை மேற்கொள்வதற்கான ஆற்றல்கள் தொடர்பான கூட்டமொன்று ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தில் நிபுணத்துவ அறிவைக் கொண்டுள்ளவர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட சிவில் அமைப்புக்களினது பிரதிநிதிகளின் பங்கேற்புடன் 2023 ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

- தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினரின் மனித உரிமைகளை உறுதி செய்வதற்காக அவர்களுடைய பொதுவான தேவைகளுடன் தொடர்புடைய வகையில் நடவடிக்கை மேற்கொள்ளுகின்ற வினைத்திறன்மிக்க சிவில் சமூக வலையமைப்பொன்றை ஏற்படுத்துவதற்காக ஆணைக்குழுவினால் 2023 நவம்பர் 04 ஆம் திகதி ஹட்டன் உப அலுவலகத்தில் கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டது. இந்தக் கலந்துரையாடலில் 52 பேர் பங்கேற்றனர்.

- இயலாதமையுடைய நபர்களுக்கான அமைப்புக்களின் ஒன்றிணைந்த முன்னணிக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் இயலாமையுடைய நபர்கள் தற்போது முகங்கொடுக்கின்ற பிரச்சினைகள் அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க பின்பற்றுவதற்கு முடியுமான பொருத்தமான அணுகுமுறைகள் குறித்த கலந்துரையாடலொன்று 2023 மார்ச் 21 ஆம் திகதி நடைபெற்றது.

- டுபுடீவுஞ நபர்களின் நல்வாழ்வு மற்றும் அவர்களுடன் தொடர்புடைய பிரச்சினைகளுக்கான தீர்வுகள் குறித்துக் கலந்துரையாடுவதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அந்த சமூகத்தின் பிரதிநிதிகளுடன் 2023 ஏப்ரல் 19 ஆம் திகதி கூட்டமொன்று நடாத்தப்பட்டது.

- இலங்கையில் உள்ள சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் தங்கள் தேவைகள் மற்றும் பரிந்துரைகளைப் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு மற்றும் ஆணைக்குழுவுக்கு தனது தற்போதைய வேலைத் திட்டங்கள் மற்றும் எதிர்காலத் திட்டங்களைப் பற்றிக் கலந்துரையாடுவதற்கான ஒரு கலந்துரையாடலொன்று மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும்

சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கிடையில் 2023 அக்டோபர் 10 ஆம் திகதி நடைபெற்றது.

இது தவிர, சிவில் சமூகத்துடன் முடியுமானவரை கூட்டங்களை நடாத்துவதற்கு பிராந்திய அலுவலகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இந்தக் கட்டளைகளுக்கமைய பல பிராந்திய அலுவலகங்கள் சிவில் சமூக பிரதிநிதிகளுடன் சந்திப்புகளை நடாத்தி, அவர்களின் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு தீர்க்கும் பணியில் ஈடுபட்டன.

## *உ)சிவில் சமூக அமைப்புக்களுக்கான பயிற்சியளிப்புக்கள்*

2023 ஆம் ஆண்டில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் சிவில் சமூக அமைப்புக்களின் அங்கத்தவர்களுக்காக பல்வேறுபட்ட பயிற்சி மற்றும் உணர்திறன் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.அவ்வாறான பயிற்சிகள் பற்றிய பொழிப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

- இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, சிவில் சமூக அமைப்புகளுடன் இணைந்து, மாத்தறையில் பொதுமக்களுக்கான மனித உரிமைகள் ∴ அடிப்படை மனித உரிமைகள் குறித்த கலந்துரையாடலை நடத்தியது.

- மனித உரிமைகள், அடிப்படை மனித உரிமைகள், சிறுவர் உரிமைகள், சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற பல்வேறு கருப்பொருள்களில் மாணவர்களை இலக்காகக் கொண்ட தொடர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் அம்பாறை, கல்முனை போன்ற இடங்களில் உள்ள பாடசாலைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களில் நடாத்தப்பட்டன.

- இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இயலாமையுடைய நபர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி மாத்தறை மற்றும் காலியில் நடைபெற்றது.

இது தவிர பாடசாலைகள், பல்கலைக்கழக மாணவர்கள், முப்படை அதிகாரிகள், பொலீஸ் உத்தியோகத்தர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் போன்றோர் நேரில் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டு, ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள் போன்றவை விநியோகிக்கப்பட்டன. இதுபோன்ற சந்தர்ப்பங்களில், ஆணைக்குழு அதன் நிறுவன வளாகத்திற்குள் இந்தக் குழுக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டது.

## அத்தியாயம் 5: கருப்பொருள் சார்ந்த தலையீடுகள்

5.1. கருப்பொருள் சார்ந்த உப குழுக்கள்
5.2. தனிநபர் உரிமைகள் தொடர்பான தலையீடுகள்
5.2.1. கைது செய்யப்பட்டிருக்கையில் ஏற்படும் மரணங்கள் மற்றும் சட்ட விரோதக் கொலைகள்
5.2.2 சித்திரவதை செய்தல்
5.2.3. தனிநபர் சுதந்திரம் மற்றும் பாதுகாப்புக்கான உரிமை
5.2.4. அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமை
5.2.5. கருத்துச் சுதந்திரம்
5.2.6. சிறுபான்மையினரின் உரிமைகள்
5.2.6. டுபுடீவுஜஞ உரிமைகள்
5.2.7. சிறுவர் உரிமைகள் மற்றும் கல்வி பெறுவதற்கான உரிமை
5.2.8. சுகாதார உரிமைகள்
5.2.9. இயலாமையுடைய நபர்களின் உரிமைகள்
5.2.10. முதியோரின் உரிமைகள்
5.2.11. பழங்குடி மக்களின் உரிமைகள்
5.2.12. சீவனோபாயத்திற்கான உரிமை

## *5.1. கருப்பொருள் சார்ந்த உப குழுக்கள்*

2016 ஆம் ஆண்டில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் சிறப்பு கருப் பொருள் சார்ந்த 09 உப குழுக்கள் நியமிக்கப்பட்டது. 1996 இன் 21 ஆம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இலங்கை அரசாங்கத்துக்கு கொள்கை ரீதியிலான தலையீட்டை மேற்கொள்ளுதல் சம்பந்தமாக ஆணைக்குழுவுக்கு பரிந்துரைகளை முன்வைப்பதற்காக ஒவ்வொரு கருப்பொருளுக்குரிய சட்டங்களை உருவாக்குதல், கொள்கைகள் மற்றும் உத்தியோகபூர்வ நடைமுறைகளை மீளாய்வு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் ஏற்புடைய விடயம் சம்பந்தமாக மேற்கொள்ள வேண்டிய கொள்கை மற்றும் செயன்முறை ரீதியிலான தலையீடுகள் சம்பந்தமாக ஆணைக்குழுவுக்கு அறிவுறுத்தல்களை வழங்குவதும் இந்த உப குழுக்கள் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த உப குழுக்களாவன்

1. இயலாமையுடைய நபர்கள் சம்பந்தமான உப குழு
2. கல்விக் கொள்கை (மனித உரிமையாக கவனத்திற்கொள்ளப்பட்டு) சம்பந்தமான உப குழு
3. டுபுடீவுஜஞ நபர்களின் உரிமைகள் சம்பந்தமான உப குழு
4. பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களின் உரிமைகள் சம்பந்தமான உப குழு
5. சித்திர வதைகள் மற்றும் கைதின்போது தாக்குதலைத் தடுக்கும் உரிமைகள் சம்பந்தமான உப குழு
6. பாலின சமத்துவ உரிமைகள் சம்பந்தமான உப குழு
7. முதியோர் உரிமைகள் சம்பந்தமான உப குழு
8. பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் சம்பந்தமான உப குழு
9. புலம்பெயர் தொழிலாளர்கள் உரிமைகள் சம்பந்தமான உப குழு

இந்த உப குழுக்களின் அங்கத்தவர்களாக துறை சார்ந்த தேர்ச்சி பெற்றவர்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர். ஆணையாளர் ஒருவர் அல்லது சிலர் ஒவ்வொரு குழுவினதும் தலைமைத்துவத்தை வகிப்பதுடன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆளணி அங்கத்தவர்கள் ஒவ்வொரு உப குழுக்களினதும் செயலாளர்களாக நடவடிக்கை மேற்கொள்கின்றனர்.

2023 ஆம் ஆண்டில் பாரிஸ் கோட்பாடுகளுக்கு இணங்க, குழுக்களுக்குள் பன்முகப் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கு உப குழு அமைப்பு மற்றும் கருப்பொருள் சார்ந்த துறைகள் பற்றிய உள்ளக ரீதியிலான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது. இலங்கையின் தற்போதைய சூழ்நிலையில்

தொடர்புடைய சிக்கல்கள் தொடர்பாக புதிய சில உப குழுக்களை அறிமுகஞ் செய்வதற்கு ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த உப குழுக்கள் 2024 இல் நியமிக்கப்படும்.

## *5.2. தனிநபர் உரிமைகள் தொடர்பான தலையீடுகள்*

### *5.2.1. கைது செய்யப்பட்டிருக்கையில் ஏற்படும் மரணங்கள் மற்றும் சட்ட விரோதக் கொலைகள்*

கடந்த நான்கு ஆண்டுகளில், இலங்கையில் சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகளுடன் சம்பந்தப்பட்ட கைதின்போது ஏற்பட்ட மரணங்கள் மற்றும் சட்டவிரோத கொலைகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அவதானிக்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டில், கைதின்போதான மரணங்கள் மற்றும் சட்டவிரோத கொலைகளைத் தடுத்தல் தொடர்பாக ஆணைக்குழு பின்வரும் தலையீடுகளை மேற்கொண்டது.

- **கைதின்போது ஏற்படும் மரணங்களைத் தடுப்பதற்கு மற்றும் முகங்கொடுப்பதற்காக இலங்கை பொலீஸுக்கு பொதுவான வழிகாட்டுதல்கள் மற்றும் பரிந்துரைகளை அறிமுகப்படுத்துதல்**

எதிர்காலத்தில் பொலீஸ் அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் இதுபோன்ற கடுமையான மனித உரிமை மீறல்களைத் தடுப்பதற்கான முக்கியமான தேவையை உணர்ந்து, ஆணைக்குழு " கைதின்போது ஏற்படும் மரணங்கள் மற்றும் சட்டவிரோத கொலைகளைத் தடுப்பதற்காக இலங்கை பொலீஸுக்கு சவால்களை மதிப்பீடு செய்வதற்கான கருவி மற்றும் பரிந்துரைக்கப்பட்ட வழிகாட்டல்கள்வழிகாட்டல்கள்" தயாரிப்பதற்காக பலதரப்பட்ட ஒழுக்காற்றுக் குழு நியமிக்கப்பட்டது. அதன்படி, பொலீஸ் கைதின்போது ஏற்படும் மரணங்களைத் தடுப்பதற்காக இலங்கை பொலீஸுக்காக மேம்படுத்தப்பட்ட பொதுவான வழிகாட்டல்கள் மற்றும் பரிந்துரைகள் இலங்கை மன்றக் கல்லூரியில் 2023 டிசம்பர் 11 ஆம் திகதி நினைவுகூரப்படும் சர்வதேச மனித உரிமைகள் தின வைபவத்தின்போது வழங்கப்பட்டன.

- **பொலீஸ் போதைப்பொருள் பணியகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவரின் மரணம் குறித்த விசாரணை.**
  **(ர்சுஊ.˙.ஞருழ.˙.ஆழவுரு.˙.01.˙.23)**

இந்த விவகாரம் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் முறையான முறைப்பாடொன்று இல்லாமல், சொந்தப் பிரேரணை விசாரணையொன்று ஆரம்பிக்கப்பட்டது. போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் குற்றச்சாட்டின் பேரில் சந்தேக நபர் 2023.01.10 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட பின்னர், விசாரணைக்கு இணங்க மறுத்து அந்த நபர் குழப்பத்தை ஏற்படுத்தியதாகக் கூறப்படுகிறது. அந்த நேரத்தில், போலீசார் நிலைமையைக் கட்டுப்படுத்த

முயன்றதுடன், இதன் விளைவாக, சந்தேக நபர் மயங்கி விழுந்து சுயநினைவை இழந்ததாகக் கூறப்படுகிறது. ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட விசாரணையின்போது சந்தேக நபர் இயற்கையான காரணங்களால் இறக்கவில்லை என்றும், அவரது உடலில் பல காயங்கள் காணப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது. விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

- **விசேட அதிரடிப் படையினருடன் ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் கொலை வழக்கில் சந்தேக நபர் ஒருவர் மரணித்தல் (ர்சுஊ.ீ.ளுருழ.ீ.ஆழுவுரு.ீ.20.ீ.23)**

தென் மாகாணத்தின் கரகொட பகுதியில் போதைப்பொருள் கடத்தலை எதிர்த்துப் போராடுவதில் தீவிரப் பங்கு வகித்த முன்னாள் பொலீஸ் பரிசோதகர் பாலேந்திரசிங்க கொலை வழக்கில் சந்தேக நபரான சஞ்சீவ பிரேமகுமார சில்வாவின் மரணத்திற்கு வழிவகுத்த துப்பாக்கிச் சூடு தொடர்பாக மற்றொரு சொந்தப் பிரேரணை விசாரணை தொடங்கப்பட்டுள்ளது. 2023 அக்டோபர் 12 ஆம் திகதி மீட்டியாகொடவில் விசேட அதிரடிப் படையினருடன் (ளுவுகு) நடந்த துப்பாக்கிச் சூட்டின்போது சந்தேக நபர் காயமடைந்துள்ளதுடன், அவரைக் கைது செய்யும்போது பலபிட்டிய மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். ஆணைக்குழுவினால் முறையே 2023.10.31 மற்றும் 2023.11.17 ஆம் திகதிகளில் விசேட அதிரடிப்படை தலைமையகம் மற்றும் மீட்டியாகொட பொலீஸ் நிலையப் பொறுப்பதிகார் (ழுஐஊ) ஆகியோரிடமிருந்து விரிவான அறிக்கைகளை ஆணைக்குழு கோரியுள்ளது. ஆணைக்குழு மேலும், பலபிட்டிய மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரியிடம் (துஆழு) 2023.11.24 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பிரேத பரிசோதனை அறிக்கையை சமர்ப்பிக்குமாறு ஆணைக்குழு கேட்டுக் கொண்டது. அறிக்கையிடப்பட்ட ஆண்டின் இறுதிக்குள், கோரப்பட்ட எந்த அறிக்கைகளும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கவில்லையென்பதுடன், மேற்குறிப்பிடப்பட்ட விசாரணை நடாத்தப்படுகின்றது.

- **விசேட அதிரடிப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரின் மரணம் (HRC/SUO/MOTU/17/23)**

இறந்த நபர் 2023 அக்டோபர் 12 ஆம் தேதி ஹம்பாந்தோட்டையில் போதைப்பொருள் வைத்திருந்தபோது விசேட அதிரடிப்படை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். இறந்தவர் அவிசாவளையில் நடந்த ஒரு கொலை தொடர்பாக தேடப்பட்டு வந்தவர் என்பதனால் பின்னர் அவிசாவளை பொலீஸுக்கு மாற்றப்பட்டார். கொலைக்காகப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் ஆயுதத்தைக் கண்டுபிடிப்பதில் பொலீஸ் அதிகாரிகளுக்கு உதவிக் கொண்டிருக்கையில் தப்பிச் செல்ல முயன்றபோது சந்தேக நபர் படுகாயமடைந்ததாகக் கூறப்படுகிறது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 2023 அக்டோபர் 17 ஆம் தேதி அவிசாவளை பொலீஸ்

நிலையத்திற்குச் சென்று அவதானிப்புகளை மேற்கொண்டது. மேலும், அவிசாவளை மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரியிடமிருந்து தகவல் அறிக்கை, ஹம்பாந்தோட்டை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடமிருந்து விரிவான அறிக்கை மற்றும் விசேட அதிரடிப் படை மற்றும் அவிசாவளை பொலீஸ் அத்தியட்சகரால் மேற்கொள்ளப்பட்ட கைதுகள் குறித்த அறிக்கை ஆகியவற்றை ஆணைக்குழு கோரியுள்ளது. மனுதாரர்களிடமிருந்தும் சாட்சியங்கள் கோரப்பட்டன. தற்போது விசாரணைகள் நடாத்தப்பட்டு வருகின்றது.

- **பொலீஸ் கைதில் இருக்கும்போது பெண்ணொருவர் மரணித்தமை (HRC/SUO/MOTU/11/2)**

திரைப்பட தயாரிப்பாளர் ஒருவரின் வீட்டில் வீட்டு பணிப்பெண்ணாக பணிபுரிந்த பதுளையைச் சேர்ந்த 42 வயதுடைய மூன்று குழந்தைகளின் தாயார், தங்க மோதிரத்தைத் திருடிய குற்றச்சாட்டில் வெலிக்கடை பொலீஸ் நிலையத்தினால் கைது செய்யப்பட்டிருந்தபோது 2023 மே 11 ஆம் திகதி மரணமடைந்தார். இறந்த பெண்ணின் உறவினர்கள், போலீஸ் காவலில் இருந்தபோது போலீஸ் அதிகாரிகளால் அவர் தாக்கப்பட்டதாகக் குற்றம் சாட்டினர். சொந்தப் பிரேரணையைத் தொடங்கி, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் குழுவொன்று வெலிக்கடை பொலீஸ் நிலையத்திற்குச் சென்று தங்கள் அவதானிப்புகளை நடத்தியதுடன், காவல் நிலையத்திலிருந்து அறிக்கையையும் கோரியது. இந்த வழக்கு தொடர்பான விசாரணைகள் தற்போது நடந்து வருகின்றன.

### *5.2.2 சித்திரவதை செய்தல்*

ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை விசாரித்தலைப் போன்றே முறையான முறைப்பாடு இன்றி சொந்தப் பிரேரணை விசாரணை ஊடாக சித்திரவதை செய்யப்படுவதிலிருந்து விடுதலையாகும் உரிமை மீறப்படுதல் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஆணைக்குழு தலையீட்டை மேற்கொள்கின்றது.

- **கைது செய்யும்போது பொலீசாரினால் சந்தேக நபருக்கு சித்திரவதை மேற்கொள்ளல் மற்றும் மனிதாபிமானமற்ற முறையில் கவனித்தல் (முறைப்பாட்டு இல.: HRC/1604/15)**

2015 ஆம் ஆண்டில் சந்தேக நபரொருவரை மனிதாபிமானமற்ற முறையில் தாக்கியமை தொடர்பாக வெலிக்கடை பொலீஸ் நிலையத்திற்கு எதிரான இந்த முறைப்பாட்டில் அரசியலமைப்பின் 11 ஆவது உறுப்புரை மீறப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவினால் கண்டறியப்பட்டது. பாதிக்கப்பட்டவர் கடுமையான காயங்கள் காரணமாக கொழும்பு பெரியாஸ்பத்திரியின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டதுடன்

2015.05.07 ஆம் திகதி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிக்கையில், கைது செய்யப்பட்ட பின்னர் 04 நாட்கள் சிறையில் வைக்கப்பட்டதாகவும், அங்கு கிரிக்கெட் மட்டையால் தாக்கப்பட்டதாகவும், உடைந்த துணி துவைக்கும் வாளியால் அவரது கால் கடுமையாக வெட்டப்பட்டதாகவும், இதன் விளைவாக பல்வேறு காயங்கள் ஏற்பட்டதாகவும் முறைப்பாட்டாளர் குற்றஞ்சாட்டினார். தேசிய மருத்துவமனையில் அவரது காயங்களுக்கு சிகிச்சை பெற்றுக்கொண்டுள்ளார். காயங்கள் தற்செயலானவை எனக் கூறி வெலிக்கடை பொலீஸ் நிலையம் குற்றச்சாட்டுகளை மறுத்தது. தடயவியல் சட்ட மருத்துவ அறிக்கையில் பாதிக்கப்பட்டவரின் உடலில் பத்து காயங்கள் பட்டியலிடப்பட்டிருந்ததுடன், இதில் அவரது வாக்குமூலத்தின் பிரகாரம் கொடூரமான சித்திரவதையைக் குறிக்கும் கடுமையான காயங்கள் அடங்கியிருந்தது. தாக்குதல் மற்றும் உடைந்த வாளியினால் காயங்களை ஏற்படுத்தியமை போன்ற என்ற கூற்றை உறுதிப்படுத்தும் வகையில் கூரற்ற பொருளினால் பலத்த காயங்கள் இருப்பதாக அறிக்கை உறுதிப்படுத்தியது. கைது செய்யப்பட்ட தேதிகளில் முரண்பாடுகள் இருந்தபோதிலும், பாதிக்கப்பட்டவர் பொலீஸ் காவலில் இருந்தபோது தாக்கப்பட்டதை மருத்துவ சான்றுகள் உறுதிப்படுத்தின. தடயவியல் மருத்துவ சான்றுகள் மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையில், சித்திரவதை மற்றும் மனிதாபிமானமற்ற ரீதியில் கவனித்தலை தடைசெய்யும் இலங்கை அரசியலமைப்பின் 11 ஆவது உறுப்புரையின் கீழ் பொலீஸார் பாதிக்கப்பட்டவரின் அடிப்படை உரிமைகளை மீறும் வகையில் செயற்பட்டுள்ளதாக தீர்மானிக்கப்பட்டது. ஒவ்வொரு பிரதிவாதியும் ரூ. 10,000 வீதம் முறைப்பாட்டாளருக்கு ரூ. 40,000 செலுத்த வேண்டுமென ஆணைக்குழுவினால் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. பிரதிவாதிகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுத்து ஆணைக்குழுவுக்கு அறிக்கைப்படுத்துமாறு பொலீஸ் மா அதிபருக்கு பணிக்கப்பட்டது. பரிந்துரைகளை செயல்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிலிருந்து ஒரு வாரத்திற்குள் பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டுள்ளதா என்பதை ஆணைக்குழுவுக்கு அறிவிக்குமாறும் ஆணைக்குழுவு முறைப்பாட்டாளருக்கு உத்தரவிட்டது.

- பாடசாலை மாணவன் ஒருவனை மனிதாபிமானமற்ற முறையில் தாக்கியமை (ர்சூஊ.˙.ளுருமு.˙.ஆமுவுரு.˙.02.˙.23)

12 வயது மாணவன் ஒருவனை பாடசாலை ஆசிரியரொருவர் மனிதாபிமானமற்ற முறையில் தாக்கியமை தொடர்பாக கிடைக்கப்பெற்ற குற்றச்சாட்டின் அடிப்படையில், ஆணைக்குழு சொந்தப் பிரேரணை விசாரணையை மேற்கொண்டது. பேருவளை பிரதேசத்தில் 7 ஆம் தரத்தில் கற்கும் மாணவனான பாதிக்கப்பட்டவர், பாடசாலையில் கற்பிக்கும் பிக்கு ஒருவர் மேற்கொண்டதாகக் கூறப்படும் தாக்குதலால் பலத்த காயங்களுக்கு ஆளாகியுள்ளான். ஆயினும் விசாரணையை முன்னெடுத்துச்செல்லும்போது

முறைப்பாட்டாளருக்கு ஆணைக்குழுவின் முன் தோற்றுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளாமையினால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் மேலதிக சாட்சியங்கள் இல்லாமையின் அடிப்படையில் விசாரணை நிறுத்தப்பட்டது.

- கைது செய்யப்பட்டிருக்கும்போது மரணமடைதல் தொடர்பான விசாரணை **(HRC/SUO/MOTU/05/23)**

நீர்கொழும்பு பொலீஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மிரட்டிப் பணம் பறித்தல் மற்றும் நபரொருவருக்கு துப்பாக்கியை காண்பித்து அச்சுறுத்தியமை தொடர்பாக சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் கட்டுநாயக்க பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டு, பாதிக்கப்பட்டவர் ஒரு சதுப்பு நிலத்தில் மறைத்து வைத்திருந்த ஒரு கைக்குண்டு மற்றும் ஒரு கைத்துப்பாக்கியை மீட்டெடுத்ததாக போலீசார் தெரிவித்தனர். அப்போது அவர் கைக்குண்டை இயக்கி, பொலீஸாருக்கு எதிராக துப்பாக்கியைப் பயன்படுத்த முயன்றார் என பொலீஸார் தெரிவித்தனர். தற்காப்புக்காக சந்தேக நபரைத் துப்பாக்கியால் சுட்டதாகவும், இதன் விளைவாக, அவர் காயமடைந்து பின்னர் இறந்ததாகவும் போலீசார் தெரிவித்தனர். அதன்படி, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இந்த சம்பவம் குறித்து விசாரணையைத் தொடங்கியது. இருப்பினும், முறைப்பாட்டாளரின் ஆர்வம் இல்லாததால் ஆணைக்குழுவினால் விசாரணையை நிறுத்த வேண்டியேற்பட்டது.

### *5.2.3. தனிநபர் சுதந்திரம் மற்றும் பாதுகாப்புக்கான உரிமை*

ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகளை விசாரித்தலைப் போன்றே முறையான முறைப்பாடொன்று இல்லாமல் சுயமாக மேற்கொள்ளப்படும் விசாரணைகள் ஊடாக ஆணைக்குழு தலையீட்டை மேற்கொண்டு பாதுகாப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற மேலுமொரு உரிமை தனிநபர் சுதந்திரம் மற்றும் பாதுகாப்புக்கான உரிமையாகும்.

- சந்தேக நபரை பொலீஸார் தன்னிச்சையாக தடுத்து வைத்தல் (முறைப்பாட்டு இல.: **HRC/4670/22)**

இலங்கை அரசியலமைப்பின் 13(1) மற்றும் 13(2) உறுப்புரைகளை மீறுகின்ற வகையில், பொலீஸ் விசேட அதிரடிப்படையினால் நபரொருவர் தன்னிச்சையாகக் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு, பின்னர் 2022 நவம்பரில், கரையோர பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, சம்பந்தப்பட்ட பொலீஸ் அதிகாரிகளுக்கு எதிராக பொருத்தமான ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆணைக்குழுவினால் பொலீஸ் மா அதிபருக்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது.இவ்வாறு கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட முறைப்பாட்டாளரின் மகன், பின்னர் கொழும்பு

குற்றப்பிரிவுக்கும், பின்னர் கிராண்ட்பாஸ் பொலீஸ் நிலையத்திற்கும் மாற்றப்பட்டார். பலமுறை விசாரித்த போதிலும், தனது மகனின் விடுதலை தாமதமானதற்கான காரணம் முறைப்பாட்டாளருக்குத் தெரிவிக்கப்படவில்லை. அதைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்டவரின் சட்டத்தரணி, தனது சேவை பெறுநரைப் பார்ப்பதற்கு வாய்ப்பு வழங்கப்படாமல், கிராண்ட்பாஸ் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக 2022 நவம்பர் 25 அன்று ஆணைக்குழுவிடம் தெரிவித்தார். கிராண்ட்பாஸ் பொலீஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி, தான் பாதிக்கப்பட்டவரைக் கைது செய்யவில்லை என்றும், மற்றொரு சந்தேக நபரைப் பற்றிய தகவல்களைப் பெறுவதற்காக அவரிடம் விசாரித்ததாக ஒப்புக்கொண்டதாகவும் கூறினார். பின்னர் கிராண்ட்பாஸ் காவல்துறையினர், ஹெரோயின் வைத்திருந்தமை தொடர்பாக ஜூட் அரவிந்த என்பவரை 2022 நவம்பர் 28 ஆம் திகதி கைது செய்ததாகவும், அவருக்கு எதிரான அச்சுறுத்தல்கள் காரணமாக அவர் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

முறைப்பாடு கிடைத்ததும், ஆணைக்குழுவின் கடமை அதிகாரி கடலோர பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரியைத் தொடர்பு கொண்டு விடயங்களை விசாரித்தறிந்துகொண்டதுடன், பாதிக்கப்பட்டவர் 2022.11.23 ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டதாகக் கூறியிருந்தார். எவ்வாறாயினும் பின்னர் கிராண்ட்பாஸ் பொலீஸ் நிலையத்தையும் ஏனைய தொடர்புடைய அதிகாரிகளையும் தொடர்பு கொள்வதற்கு அல்லது அங்கு சென்று பார்வையிடுவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்தன. 2022 நவம்பர் 23 முதல் 27 வரை அவர் தடுத்து வைக்கப்பட்டதை உறுதிப்படுத்தும் சான்றுகள் மற்றும் வாக்குமூலங்கள் இருந்தபோதிலும், கிராண்ட்பாஸ் பொலீஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்டவரின் பொறுப்பு சம்பந்தமாக எந்தவொரு அறிக்கையும் இல்லையென்ற விடயம் விசாரணையின்போது தெரியவந்தது. கிராண்ட்பாஸ் பொலீஸ் நிலைய அதிகாரிகளின் வாக்குமூலங்களில் முரண்பாடுகள் இருப்பதை ஆணைக்குழு கண்டறிந்தது கொண்டதுடன், பாதிக்கப்பட்டவர் 2022 நவம்பர் 23 முதல் நவம்பர் 27 வரை சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என்பதையும் உறுதிப்படுத்தியது. கிராண்ட்பாஸ் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி சத்தியப்பிரமாணத்தின் கீழ் தவறான அறிக்கைகளை வழங்கி விசாரணையை நடாத்துவதற்கு ஒத்துழைக்கவில்லை என்ற விடயம் அவதானிக்கப்பட்டது. பிரதிப் பொலீஸ் மா அதிபர் உட்பட சிரேஷ்ட அதிகாரிகள் சட்டவிரோத தடுப்புக்காவல் குறித்து அறிந்திருந்த போதிலும் அது சம்பந்தமாக விசாரிக்கவில்லை என்றும் ஆணைக்குழு குறிப்பிட்டது. சட்ட ரீதியான உரிமைகளை மீறியமை தொடர்பாக பொலீஸ் மா அதிபர் பொருத்தமான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டது. ஒழுக்காற்று நடவடிக்கையை பரிந்துரைத்தலுக்கு மேலதிகமாக, பொலீஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் தொடர்பான முறையான கண்காணிப்பு முறைமையொன்றை நிறுவுமாறும் இலங்கை பொலீஸின் அனைத்து நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும்

ஏனைய சிரேʻட அதிகாரிகளும் அத்தகைய முறைமை குறித்து அறிந்திருப்பதை உறுதி செய்யுமாறும் ஆணைக்குழு பொலீஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுத்தது. இந்த பரிந்துரைகளை செயல்படுத்தி, 2023 ஜூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்புடைய அறிக்கையை சமர்ப்பிக்குமாறு ஆணைக்குழு பிரதிவாதிகளைக் கேட்டுக்கொண்டது. (மேற்கூறிய அறிக்கை மேற்கூறிய காலக்கெடுவிலோ அல்லது அதற்கு முன்போ பெறப்படவில்லை)

### *5.2.4. அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமை*

தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட நபர்களின் அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமையைப் பாதுகாப்பதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழு முனைப்பான பணியொன்றை நிறைவேற்றியுள்ளது. 2022 ஆம் ஆண்டில் மற்றும் அதன் பின்னரும் நாடு பூராவும் பரவிய பொது மக்களின் சிவில் எதிர்ப்பார்ப்பாட்டங்களை கவனமாக அவதானித்ததன் பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்களால் கொண்டுவரப்பட்ட முறைப்பாடுகளுக்கு சட்ட ரீதியிலான தீர்வுகளை வழங்குவதற்கு மேலதிகமாக அமைதியான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கான உரிமையைப் பாதுகாப்பதற்கு மற்றும் எதிர்கால எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின்போது அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மீறப்படுதலை தடுப்பதற்கு ஆணைக்குழுவினால் முனைப்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதற்கமைய 2023 ஆம் ஆண்டில் ஆணைக்குழு இந்த சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள கீழ் குறிப்பிடப்படும் ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன:

- சிவில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்காக அரச மற்றும் சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கான பரிந்துரைக்கப்பட்ட வழிகாட்டல்கள் தொடரை வெளியிட்டு செயற்படுத்தல்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ʻசிவில் ஆர்ப்பாட்டங்களைக் கையாளுதல் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்காக அரச மற்றும் சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கான பரிந்துரைக்கப்பட்ட வழிகாட்டல்களைʼ 2023 மே 12 ஆம் திகதி கொழும்பில் வெளியிட்டது. உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள், ஐ.நா. நிறுவனங்களின் பிரதிநிதிகள், முப்படைகளின் உறுப்பினர்கள், கல்வியாளர்கள், சிவில் சமூக ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சிரேʻட அதிகாரிகள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர். இந்த வழிகாட்டல்கள் சட்டமா அதிபர் திணைக்களம், சட்ட அறிஞர்கள், சட்ட அமுலாக்க அதிகாரிகள் மற்றும் பல்வேறு சிவில் சமூக பிரதிநிதிகளுடன் இணைந்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரின் தலைமையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் சுமார் ஒரு வருட காலமாக வரையப்பட்டன. வழிகாட்டல்கள் தொடர் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளன: அரசாங்கத்தின் பொறுப்புகள் சிவில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் நடவடிக்கை

மேற்கொள்ளும்போது சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கான பரிந்துரைக்கப்பட்ட வழிகாட்டல்கள் தொடர் ˙ மற்றும் நடைமுறைப்படுத்தல். வரைவு செயல்முறை மற்றும் ஆரம்பிப்பதற்காக துருசுநு திட்டத்தின் கீழ் ஐக்கிய நாடுகள் அமைப்பின் அபிவிருத்தித் திட்டதினால் (ருனுீ) நிதி வழங்கப்பட்டது.

- எதிர்ப்பு ஆர்ப்பாட்ட பேரணியை கலைப்பதற்கு பொலீசாரால் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மாணவர் பேரவை மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை (**HRC/SUO/MOTU/09/23**)

அரசியலமைப்பின் 14 ஆவது உறுப்புரை மீறப்பட்டமை தொடர்பாக விசாரணை நடாத்தப்பட்டது. பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான மாணவர் பேரவையினால் நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணி மீது 2023.04.03 ஆம் திகதி கொழும்பில் பொலீசாரால் மேற்கொள்ளப்பட்ட தண்ணீர் பீய்ச்சியடித்ததற்கு எதிராக பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான மாணவர் பேரவை முறைப்பாட்டை மேற்கொண்டிருந்தது. மாணவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குள் நுழைவதற்கு முயன்றபோது அங்கு ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்கு போலீசார் தண்ணீர் பீய்ச்சி அடித்தனர். இந்த சம்பவம் குறித்து பொலீஸ் தலைமையகத்திலிருந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஆணைக்குழு பிரதிவாதியிடம் கேட்டுக் கொண்டது. இந்த சம்பவம் குறித்த விசாரணை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### *5.2.5. கருத்துச் சுதந்திரம்*

இலங்கையில் எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் தன்னிச்சையாக கைது செய்யப்படுவதைத் தடுப்பதிலும், கருத்து சுதந்திரத்தைப் பாதுகாப்பதிலும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தீவிர பங்கை வகிக்கிறது.

- வெகுசன ஊடக அமைச்சினால் ஆநனயைடம.உழஅ என்ற வலைதளத்தைப் பதிவு செய்தலை நிராகரித்தல் (முறைப்பாட்டு இல.: **HRC/1044/21**)

இங்கு, வெகுசன ஊடக அமைச்சு தனது ஆநனயைடம.உழஅ என்ற வலைத்தளத்தைப் பதிவு செய்ய நியாயமற்ற முறையில் மறுத்ததாக முறைப்பாட்டாளர் குற்றம் சாட்டினார். 2019 இல் ஒரு விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து மதிப்பாய்வு செய்ததன் பின்னர், பாதுகாப்பு அமைச்சினால் அந்த வலைத்தளம் பாதுகாப்பு தொடர்பான சிக்கல்களை எழுப்புவதாகக் கூறி ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளதுடன், அதனூடாக வெகுசன ஊடக அமைச்சு பதிவு செய்வதனை நிராகரித்துள்ளது. இந்தப் பதிவு இல்லாமையின் காரணமாக தனது வலைதளத்திற்கு ஊடக அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருப்பதாகவும், அதனூடாக மக்களின் தகவலறிவதற்கான உரிமை மற்றும் கருத்துச் சுதந்திரம் மீறப்படுவதுடன் அரசாங்கத்தின் செயற்பாடுகளை அறிக்கையிடுவதற்கான வாய்ப்பு

வரையறுக்கப்படுவதாகவும் முறைப்பாட்டாளர் தெரிவிக்கின்றார். ஆநனையடம.உழஅ ஆநனையடம.உழஅ ஐப் பதிவு செய்வதற்கு மற்றும் அதன் ஊடகவியலாளர்களுக்கு ஊடகவியலாளர் அடையாள அட்டைகளை வழங்குவதற்கு பரிந்துரை செய்யுமாறு முறைப்பாட்டாளர் ஆணைக்குழுவிடம் கோருகின்றார். 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பிறகு, செய்தி வலைத்தளங்களைப் பதிவு செய்வதற்கு பாதுகாப்பு அனுமதிகளைப் பெறுதல் கட்டாயத் தேவையாகிவிட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சு தனது நிறுவனத்திற்கு பாதுகாப்பு அனுமதிகளை அனுமதிக்கவில்லை என்றும், அதுவே பதிவு செய்ய மறுத்ததற்குக் காரணம் என்றும் பிரதிவாதி கூறினார்.

விசாரணையின் போது, பதிவு செயல்முறை தொடர்பாக ஊடக அமைச்சு முரண்பாடான கூற்றுக்களை வெளியிட்டிருத்தல் கண்டறியப்பட்டது. இந்த முரண்பாடுகள் மற்றும் பதிவு செய்துகொள்வதற்கான தீர்மானத்திற்கு பாதுகாப்பு அனுமதிகள் தேவைப்படுவதனை மனித உரிமைகள் ஆணைக்குழு கவனத்தில் கொண்டது. செய்தி வலைத்தளங்கள் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இல்லாமல் இருப்பதை உறுதி செய்வதற்கான ஊடக அமைச்சின் பொறுப்பையும், அதே நேரத்தில் கருத்து சுதந்திரம் மற்றும் தகவலறியும் சுதந்திரம் தொடர்பான அடிப்படையில், தொடர்புடைய அமைச்சு அரசியலமைப்பின் 14(1) உறுப்புரையை மீறியதாக மனித உரிமைகள் ஆணைக்குழு கண்டறிந்தது. வெளிப்படைத்தன்மை மற்றும் நியாயத்தை உறுதி செய்வதற்காக அமைச்சு பொருத்தமான ஒழுங்கு நடவடிக்கை எடுத்து பதிவு செயல்முறையை மறுபரிசீலனை செய்யுமாறு ஆணைக்குழு பரிந்துரைத்தது.

### 5.2.6. நடமாடுவதற்கான சுதந்திரம்

2023 ஆம் ஆண்டில் ஊடகவியலளார்களின் அடிப்படை பயணிப்பதற்கான சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு ஆணைக்குழு தலையீட்டை மேற்கொண்டதுடன், குறிப்பாக ஊடகவியலாளர்களுக்கு அவர்களின் கருத்துக்களை வெளியிடுவதற்கான சுதந்திரம் மற்றும் தொழில் உரிமையை நடைமுறைப்படுத்துவதற்கு அது அத்தியாவசியமாகும்.

- **ஊடகவியலாளர்களுக்கு இரணைத்தீவுக்குப் பயணிப்பதனை வரையறுத்தல் (முறைப்பாட்டு இல.: HRC/KI/015/2021)**

2021 ஆம் ஆண்டில், அரசியலமைப்பின் 14(1)(ஏ) உறுப்புரையின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள நடமாடும் சுதந்திரத்திற்கான தனது உரிமையை மீறுவதாகக் கூறி, முறைப்பாட்டாளர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தார். முறைப்பாட்டாளர் மற்றும் இரண்டு ஊடகவியலாளர்கள் இரணைதீவுக்குச் சென்று கொண்டிருந்தபோது, முழங்காவில் இரணைமிதாநகரில் உள்ள காவல் நிலையமொன்றில் இலங்கை கடற்படையினரால் அவர்கள் தடுத்து

நிறுத்தப்பட்டனர். இந்த முறைப்பாடு தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகம், இலங்கை கடற்படையிடம் அறிக்கை கோரியிருந்ததுடன், 2023.03.16 தேதியிடப்பட்ட கடிதம் மூலம், அதன் தலைமையகத்திற்கும் வட மத்திய கடற்படைப் பகுதிக்கும் இடையிலான ”தொடர்பாடல் பிரச்சனை” காரணமாக இந்த சம்பவம் நிகழ்ந்ததாக கடற்படை கூறியது. ஊடகவியலாளர்கள் இரணைதீவுக்குள் நுழைவதனை கடற்படை நிராகரித்ததுடன், எதிர்காலத்தில் அந்தத் தீவுக்குச் செல்ல விரும்பும் ஊடகவியலாளர்கள் முன்கூட்டியே தகவல் தெரிவித்தால், வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கு முடியுமென அவர்கள் தெரிவித்தனர். மேற்கூறிய பிரச்சினை குறித்து கிளிநொச்சி மாவட்ட செயலாளரிடமிருந்தும் ஆணைக்குழு தகவல்களைக் கோரியது. 2021 பெப்ருவரி 14 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட ”ஏற்றுமதிக் கிராமம்” காரணமாக இரணைதீவு பகுதிக்குள் நுழைவதற்கு வதிவிடமற்றவர்கள் அனுமதி பெற வேண்டும் என்று தெரிவித்த கிளிநொச்சி மாவட்ட செயலாளர், அந்தப் பகுதிக்குள் நுழைய விரும்பும் வதிவிடமல்லாதோருக்கு போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செய்துகொள்வதற்கு கடற்படையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் மேலும் கூறினார். வதிவற்றோருக்கு உள்ளே நுழைவதற்கு அனுமதிக்கப்படவில்லை என்பதைக் குறிக்கும் ஊடக அறிக்கைகளை மேற்கோள் காட்டி ”தொடர்பாடல் பிரச்சனை” தொடர்பாக கடற்படையின் விளக்கத்தை முறைப்பாட்டாளர் நிராகரித்தார். தீவில் வசிப்பவர்களுக்கு மாத்திரம் அனுமதி வழங்குவதற்கு கடற்படை ஒரு பட்டியலைப் பயன்படுத்தியதை நேரில் கண்ட சாட்சியின் மீதும் கவனம் ஈர்க்கப்பட்டது.

சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழும், இலங்கை அரசியலமைப்பின் 14(1)(ஏ) உறுப்புரையின் கீழும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதன் பிரகாரம், நடமாடும் சுதந்திரம் ஒரு அடிப்படை மனித உரிமை என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டது. சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சாசனத்தின் (ஐஊஊசீசு) 12 ஆம் பிரிவு மூலம் நடமாடும் சுதந்திரத்தை குறிப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பொது விமர்சனம் இல. 27 ஊடாக ஐ.நா மனித உரிமைகள் குழு இந்த சுதந்திரத்தின் நோக்கத்தை தெளிவுபடுத்தியுள்ளது. அரசியலமைப்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம், இந்த உரிமையின் முக்கிய தன்மையைக் கருத்திற்கொண்டு, அதன் மீது விதிக்கப்படும் எந்தவொரு வரம்பும் சட்டபூர்வமானதாகவும், அவசியமானதாகவும், சமத்துவமானதாகவும் இருத்தல் வேண்டும்.

முறைப்பாட்டாளர் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் அரசியலமைப்பின் 15(6) மற்றும் (7) உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்கவில்லை என்பதனால் மேற்குறிப்பிடப்பட்ட சூழ்நிலைக்கு எந்த சட்ட அடிப்படையும் இல்லை என்றும், அந்த அடிப்படையில் முறைப்பாட்டாளரின் உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்றும் ஆணைக்குழுவினால் குறிப்பிடப்பட்டது. எதிர்காலத்தில் இதுபோன்ற மீறல்களைத் தடுப்பதற்காக இலங்கை மனித

உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவுகள் 15(3) (இ) மற்றும் (4) இன் அடிப்படையில் இலங்கை கடற்படைத் தளபதிக்கு ஆணைக்குழு பரிந்துரைகளை முன்வைத்தது.

அரசியலமைப்பின் 15(6) மற்றும் (7) உறுப்புரைகளின் கீழ் சட்டத்தால் அத்தகைய வரையறைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தாலே தவிர, இரணைதீவுக்கு பொதுமக்கள் செல்வதற்கான அனுமதிக் கட்டுப்பாடுகளை விதிப்பதைத் தவிர்த்தல்˙ இலங்கையின் அனைத்துப் பிரஜைகளுக்கும் முன் அனுமதி அல்லது அறிவித்தல் இல்லாமல் இரணைதீவுக்குள் நுழைவதற்கு இடமளிப்பதற்கு அறிவுறுத்தல் வழங்கல் ஆகிய விடயங்களை உள்ளடக்கி வட மத்திய கடற்படைப் பகுதி அதிகாரிகளுக்கு ஒரு சுற்றறிக்கை வெளியிடுதல் மற்றும் இந்தப் பரிந்துரைகளைச் செயல்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஒரு மாதத்திற்குள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பித்தல் என்பன அந்தப் பரிந்துரைகளாகும்.

### 5.2.7 *சிறுபான்மையினரின் உரிமைகள்*

மேற்பார்வை, ஆலோசனைகள், கல்வி மற்றும் சர்வதேச தலையீடு மூலம் சமூகத்தில் சமத்துவம் மற்றும் நீதியை மேம்படுத்துவதற்கு உதவுவதன் மூலம் சிறுபான்மை உரிமைகளைப் பாதுகாப்பதில் ஆணைக்குழு முக்கிய பங்கு வகிக்கிறது. 2023 ஆம் ஆண்டில், இலங்கையில் சிறுபான்மை சமூகங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது:

- இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அணுகல் மற்றும் தோற்றுதலை விரிவுபடுத்துவதற்கான அதன் தொடர்ச்சியான உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 2023 பெப்ருவரி மாதத்தில் யாழ்ப்பாணத்திற்கு ஒரு கள விஜயத்தை மேற்கொண்டது. வடக்கு மாகாணத்தில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்களுடன் தொடர்புடைய முக்கியமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் போன்றே அரசியல் அழுத்தங்களின்றி இடைக்கால நீதி வழிமுறைகளை ஆராய்தல் இந்த விஜயத்தின் நோக்கமாக இருந்தது. இந்த விஜயத்தின்போது மேற்கூறிய சிக்கல்களை மதிப்பீடு செய்யும்போது அரசாங்கத் தரப்பின் முனைப்பான நடவடிக்கைகளை எடுப்பதற்கான அவசரத் தேவைப்பாட்டை ஆணைக்குழு இனங்கண்டுகொண்டது. வடக்கு மாகாண மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தல் மற்றும் அதனை உறுதிப்படுத்துவதற்காக இத்தகைய நடவடிக்கைகள் மிக முக்கியமாகும். பயனுள்ள மற்றும் பொருத்தமான தீர்வுகள் மீது கவனத்தைச் செலுத்தி கைதிகளின் பராமரிப்பு மற்றும் மேற்பார்வை மீது பொறுப்புக்கூற வேண்டிய அமைச்சிற்கு இந்த விடயங்களை பரிந்துரைகளை வழங்க

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது,

- குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் போதைப்பொருள் கடத்தல், கள்ளக் கடத்தல் மற்றும் துன்புறுத்தல் போன்ற பிரச்சினைகளைத் தீர்த்தல் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு முனைப்புடன் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. உதாரணமாக, மன்னார் மீனவர்களைப் பாதிக்கும் மனித உரிமை மீறல்களைத் தீர்ப்பதற்கான பரிந்துரைகள் வழங்கப்பட்டன.

- மனித உரிமைகள் ஆணைக்குழு, மலைநாட்டில் வாழும் தமிழ் சமூகத்தின் நலனோம்புகை தொடர்பாக தொடர்ந்து சிறப்புக் கவனம் செலுத்தியுள்ளதுடன், முக்கியமாக தோட்டத் துறையில் பணிபுரியும் இந்த சமூகத்தின் உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் விழிப்புடன் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துள்ளது.இந்தத் தொழிலாளர்களின் உரிமைகள் குறித்த குறைகளுக்கு பதிலளிக்கும் விதமாக, குறிப்பாக செலுத்தப்படாத சட்டப்பூர்வமான அனுகூலங்கள் தொடர்பான பிரச்சினைகள் போன்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. 2023 ஆம் ஆண்டில், ஆணைக்குழு இந்தப் பரிந்துரைகளின் முன்னேற்றத்தை அவதானிப்பதற்காக தொடர்புடைய அனைத்துத் தரப்புக்களையும் அழைத்து குறித்த நடவடிக்கைகள் தொடர்பில் அவர்களை தீவிரமாக ஈடுபடுத்தியது.

### *5.2.8 டுபுடீவுஐஞ உரிமைகள்*

இலங்கையில் டுபுடீவுஐஞ சமூகத்தின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும் முன்னேற்றுவதிலும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஒரு முனைப்பான மற்றும் முக்கிய பங்கை வகித்துள்ளதுடன், இது தொடர்பான சட்ட சீர்திருத்தங்களுக்காக தோற்றுதல், விழிப்புணர்வு பிரச்சாரங்களை நடாத்துதல் மற்றும் இந்த சமூகம் அடிக்கடி எதிர்கொள்ளும் சமூக களங்கத்தை நிவர்த்தி செய்வதிலும் இந்த நிறுவனம் செயலூக்கத்துடனான மற்றும் முக்கிய பங்கை வகித்துள்ளது.

- பாலின மாற்றத்திற்குட்பட்டுவரும் நபர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பொலீஸ் உத்தியோகத்தர்களுக்கு வழிகாட்டல்களை வெளியிடல்.

2023 மார்ச் 15 ஆம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பாலின மாற்றத்திற்குட்பட்டுவரும் நபர்களைப் பாதுகாப்பதற்காக பொலீஸ் அதிகாரிகளுக்கான வழிகாட்டல்கள் தொகுப்பை வெளியிட்டது. டுபுடீவுஐ சமூகத்துடன் தொடர்பு கொள்ளும்போது அவர்களின் மனித உரிமைகளை எவ்வாறு பாதுகாப்பது என்பது குறித்த ஆலோசனைகளுடன் கூடிய 12

விதிகள் இந்த வழிகாட்டல்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. சட்ட அமுலாக்க சூழலிலும், ஒட்டுமொத்த சமூகத்திலும் பாலின மாற்றத்திற்குட்பட்டுவரும் நபர்களுடன் தொடர்புகளை மேற்கொள்ளும்போது மரியாதையுடனும் கண்ணியத்துடனும் நடாத்தப்படுவதை உறுதி செய்வதற்கான ஒரு முக்கியமான ஆதாரமாக இந்த வழிகாட்டல்கள் செயற்படுகின்றன. இதன் மூலம் இந்த சமூகத்திற்கு அவர்கள் தகுதியான பாதுகாப்பையும் மரியாதையையும் வழங்குவதுடன் ஓரினச்சேர்க்கை நடத்தையை குற்றமாகக் கருதும் தண்டனைகள் சட்டக் கோவையின் 365 மற்றும் 365 அ பிரிவுகளை இரத்து செய்வதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஒரு முக்கிய ஆலோசகராக இருந்து வருவதுடன், மேலும் தொடர்ந்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

## *5.2.9. சிறுவர் உரிமைகள் மற்றும் கல்வி பெறுவதற்கான உரிமை*

இலங்கையில் சிறுவர்களின் உரிமைகளை சுயாதீனமாக கண்காணிப்பதற்கு, அதற்காக தோற்றுவதற்கும், பாதுகாப்பதற்கும் ஆணைக்குழு கடமைப்பட்டுள்ளது. இலங்கையில் கல்வி உரிமையை மேம்படுத்துவதற்கும் மனித உரிமைகள் ஆணைக்குழுவும் நடவடிக்கை மேற்கொள்கின்றது. அறிக்கையிடும் ஆண்டில், கல்வி உரிமை உட்பட சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் ஆணைக்குழு பல தலையீடுகளைச் மேற்கொண்டுள்ளது:

- 2023 ஜனவரி மாதத்தில் மட்டக்குளியவில் பாடசாலையொன்றை மூடுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருந்தது. இந்த முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு அரசாங்கத்தை கட்டாயப்படுத்துவதற்கு ஆணைக்குழு தலையீட்டை மேற்கொண்டதுடன், இதன் மூலம் கல்வி உரிமையைப் பாதுகாத்தது.
- க.பொ.த உயர்தரத் பரீட்சை வினாத் தாள்களின் மதிப்பீட்டில் ஏற்பட்ட தாமதம் குறித்து பெறப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பான தலையீடு.

2022 கல்விப் பொதுத் தராதர (உயர்தரம்) ஐ க.பொ.த. (உயர்தரம்)ஸ பரீட்சை வினாத் தாள்களின் மதிப்பீட்டில் ஏற்பட்ட தாமதம் குறித்து ஆணையத்திற்குப் பெறப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் ஊடக அறிக்கைகளின் அடிப்படையில், ஆணைக்குழு ஒரு விசாரணையைத் தொடங்கியது. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் விடைத்தாள் மதிப்பீட்டிலிருந்து விலகியதால் தாமதம் ஏற்பட்டதாக விசாரணையின்போது தெரியவந்தது. அதன்படி, 2023 ஏப்ரல் 25 ஆம் திகதி ஆணைக்குழுவினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கும் பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்க சம்மேளனத்தின் (குருவுயு) தலைவருக்கும் இடையே ஒரு கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தப் பரீட்சையின் தரம் மற்றும் தரநிலை, வினாத்தாள்களைத் தயாரிப்பதில் இருந்து வினாத்தாள்களின் இறுதி மதிப்பீடு வரை பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பங்களிப்பைப் பொறுத்தது என்று

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சுட்டிக்காட்டினார். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தனிப்பட்ட மட்டத்தில் பங்களிப்பு செய்கிறார்கள் என்றும், அதிகப்படியான வரிவிதிப்பு பிரச்சினைக்கு தீர்வு காணத் தவறியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பரீட்சை மதிப்பீட்டு நடவடிக்கைகளில் இருந்து விலக முடிவு செய்துள்ளதாகவும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனத்தின் தலைவர் மேலும் கூறினார். பல்கலைக்கழக பேராசிரியர்களின் கோரிக்கைகள் குறித்துக் கலந்துரையாடுவதற்காக உயர்மட்டக் குழுவொன்று நியமிக்கப்படல் வேண்டும் எனவும், பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு மற்றும் இந்தப் பரீட்சையின் தரம் மற்றும் தரத்திற்கான சர்வதேச அங்கீகாரத்தைப் பாதுகாப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர் கூறினார். மேலும், பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டில் இருந்து பின்வாங்க வேண்டாம் என்றும், பரீட்சை வினாத்தாள் மதிப்பீடு முடியும் வரை தங்கள் போராட்டத்தை நிறுத்துமாறும் பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்க சம்மேளத்திடம் தவிசாளர் கேட்டுக் கொண்டார்.

- மாணவனொருவனுக்கு வழங்கிய உடல் ரீதியிலான தண்டனை (முறைப்பாட்டு இல.: **HRC/2650/18**)

ஹோமாகம பகுதியில் உள்ள ஒரு பாடசாலையின் பிரதி அதிபர் ஒருவர் அரசியலமைப்பின் 12(1) பிரிவை மீறி, ஒரு பிள்ளையின் கன்னத்தில் அறைந்து, தலைமுடியை வெட்டியுள்ள விதம் காரணமாக பாடசாலைக்குச் செல்ல தடை விதித்தமை காரணமாக அரசியலமைப்பின் 12 (1) உறுப்புரை மீறப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவினால் கண்டறியப்பட்டது. பிரதி அதிபரின் செயற்பாட்டை பாடசாலை அதிபர் நியாயப்படுத்தியதாகவும், பின்னர் பிள்ளைக்கு எதிராக பாகுபாடு காட்டியதாகவும் முறைப்பாட்டில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக, உயர்தர மாணவரான அந்தப் பிள்ளை அந்தப் பள்ளியில் தனது கல்வியை மீண்டும் தொடங்க மறுத்து வந்துள்ளான். விசாரணையின்போது மாணவரின் ஆக்ரோ'மான நடத்தை மற்றும் அவன் முடி வெட்டியுள்ள விதம் பாடசாலைக்குப் பொருத்தமற்றதாக இருப்பதனால் தாக்கியதாக பிரதி அதிபர் ஒப்புக்கொண்டார். இருப்பினும், மாணவன் இடைநீக்கம் செய்யப்பட்டதனை நிராகரித்ததுடன், மாணவனுக்கு தனது கல்வியைத் தொடர வாய்ப்பளிக்கப்பட்டது.

பிள்ளையின் கல்வி உரிமை மீறப்படாமல் இருப்பதை உறுதி செய்வதன் அவசியத்தை விசாரணையின்போது பிரதானமாக கருத்திற்கொள்ளப்பட்டது. கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட 12⁚.2016 ஆம் இலக்க சுற்றறிக்கை ஊடாக மாணவர்கள் மீது உடல் ரீதியான தண்டனையை வழங்குவதைத் தடை செய்யப்பட்டுள்ளதுடன், பாடசாலை அதிகாரிகள் அதை மீறியுள்ளனர். பாடசாலை அதிகாரிகளின் நடத்தை தண்டனைகள் சட்டக்கோவையின் கீழ் ஒரு குற்றமாகும். எனவே, பிரதி அதிபர் தொடர்புடைய சுற்றறிக்கைகளை

மீறியதாகவும், அதன் விளைவாக, அரசியலமைப்பின் 12(1) உறுப்புரையின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள பிள்ளையின் அடிப்படை உரிமைகளை மீறியதாகவும் ஆணைக்குழு முடிவு செய்தது. எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நிகழாமல் தடுப்பதற்கு மேற்படி பிரதி அதிபருக்கு எச்சரிக்கை விடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

- புலமைப்பரிசில் பரீட்சையில் குறைந்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களை பிரபலமான பள்ளிகளில் சேர்த்தல் (முறைப்பாட்டு இல.: **HRC/703/22, HRC/503/22)**

2020 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மிக அதிக வெட்டுப்புள்ளிகள் இருந்ததால், பரீட்சையில் சித்தி பெற்ற தங்கள் பிள்ளைகளை அதிக வளங்களைக் கொண்ட பாடசாலைகளில் சேர்ப்பதற்கான வாய்ப்பு இழக்கப்பட்டுள்ளதாக முறைப்பாட்டாளர்கள் குற்றம் சாட்டினர். பரீட்சையில் சித்தி பெறாத பிள்ளைகளை கல்வி அமைச்சின் செயலாளரின் அதிகாரத்தின் கீழ் அத்தகைய பாடசாலைகளில் சேர்க்கப்பட்ட சந்தர்ப்பங்களை சுட்டிக்காட்டி, தங்கள் குழந்தைகளின் உரிமைகள் மீறப்பட்டதாகவும் அவர்கள் விடயங்களை சமர்ப்பித்தனர்.

பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுமதித்துக்கொள்வதற்கான வெட்டுப் புள்ளிகள், மாணவர்களின் ஒட்டுமொத்த பெறுபேறுகள் மற்றும் ஒவ்வொரு பாடசாலைக்கும் அனுமதித்துக்கொள்வதற்காக நிலவுகின்ற கேள்வி போன்ற காரணிகளைக் கருத்தில் கொண்டு தீர்மானிக்கப்படுவதாகக் கூறி கல்வி அமைச்சு இந்த வழிமுறையை நியாயப்படுத்தியது. 2020 பரீட்சைக்காக தீர்மானிக்கப்பட்டுள்ள அதிக வெட்டுப் புள்ளிகள், முந்தைய ஆண்டுகளை விட பரீட்சையில் சிறந்து விளங்கிய மாணவர்களின் எண்ணிக்கையை பிரதிபலித்ததாகவும், சம்பந்தப்பட்ட ஒவ்வொரு பாடசாலையிலும் 6 ஆம் தரத்திற்கு சேர்ப்பதற்கு விண்ணப்பித்த வெற்றிடங்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டது என்றும், இது பெரும்பாலும் கிடைக்கக்கூடிய வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட அதிகமாக இருந்தது என்றும் அமைச்சு மேலும் தெளிவுபடுத்தியது. இத்தகைய நியாயப்படுத்தல் இருந்தபோதிலும், முறைப்பாட்டாளர்களின் முக்கிய வாதம் என்னவென்றால், பரீட்சையில் உண்மையில் அதிக புள்ளிகளைப் பெற்ற தங்கள் பிள்ளைகளைப் பார்க்கிலும் 23 தகுதியற்ற மாணவர்கள் பிரதான பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்பதாகும். முறைப்பாட்டாளர்கள் அதே பட்டியலை கல்வி அமைச்சுக்கு சமர்ப்பித்திருந்ததுடன், அதற்காக அவர்களுக்கு அமைச்சிடமிருந்து எந்தப் பதிலோ, மறுமொழியோ கிடைக்கவில்லையென்பதுடன், அமைச்சின் இத்தகைய நடவடிக்கைகள் தங்கள் பிள்ளைகளின் உரிமைகளை நேரடியாக மீறுவதாக மனுதாரர்கள் நம்பினர்.

விசாரணையின் பின்னர், 5 ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் போதுமான புள்ளிகளைப் பெறாத போதிலும், கல்வி அமைச்சின்

செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் சில மாணவர்கள் 6 மற்றும் 7 ஆம் வகுப்புகளுக்கு சேர்க்கப்பட்டதை ஆணைக்குழுவினால் அவதானிக்கப்பட்டதுடன், அதற்கான நியாயமான விளக்கம் அந்த அதிகாரிகளால் வழங்கப்படவில்லை. இருப்பினும், முறைப்பாட்டாளர்களின் பிள்ளைகளின் அடிப்படை உரிமைகள் பிரதிவாதி தரப்பினரால் மீறப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவினால் முடிவு செய்ய முடியவில்லை. விடயங்களைக் கருத்திற்கொண்டு, மிகவும் போட்டித்தன்மை வாய்ந்த பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற்ற மாணவர்களை பாடசாலைகளுக்கு அனுமதித்துக்கொள்ளல் தொடர்பாக மேலும் பரிசீலிக்கப்பட வேண்டும் என்ற விடயம் அவதானிக்கப்பட்டது. இறுதியாக, நடைமுறையில் உள்ள சுற்றறிக்கைகள் மற்றும் முறையான திட்டங்களுக்கமைய அதிக தேவை உள்ள அரச பாடசாலைகளில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு பிள்ளைகளைச் சேர்க்கும்போது மிகவும் முறையான மற்றும் வெளிப்படையான செயல்முறையை பின்பற்றுமாறு ஆணைக்குழு கல்வி அமைச்சிற்கு பரிந்துரைத்தது.

## 5.2.10 *சுகாதாரம் சார்ந்த உரிமைகள்*

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு சுகாதாரம் சார்ந்த உரிமைகளைப் பாதுகாத்தல் ஒரு முக்கிய விடயமாக உள்ளதுடன், சமீபத்திய முன்னேற்றங்கள் இந்த உரிமையின் முக்கியத்துவத்தை மேலும் வலியுறுத்துகின்றன.

- 2023 மார்ச் மாதத்தில் பொருளாதார நெருக்கடி காரணமாக அரச மருத்துவமனைகளில் அத்தியாவசிய மருந்துகளுக்கு கடுமையான பற்றாக்குறையை நாடு எதிர்கொண்டது. அந்த நிலைமையின் அவசரத்தை உணர்ந்த மனித உரிமைகள் ஆணைக்குழு உடனடியாக ஒரு விசாரணையைத் தொடங்கியது. ஆணைக்குழு சுகாதார அமைச்சு மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் கலந்துரையாடல்களை ஆரம்பித்து விசாரணை செயல்முறைக்கு வசதிகளை வழங்குதல் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

- 2023 ஆகஸ்ட் மாதத்தில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் மலையகத் தமிழ் சமூகத்திற்கு சேவை வழங்கும் பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்களை அறிவுறுத்தும் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

- தேசிய மனநல நிறுவனம் குறித்த விடயங்களைக் கண்டறியும் பணி

தேசிய மனநல நிறுவனம் என்பது இலங்கையில் உள்ள மிகப்பெரிய மனநல நிறுவனமாக இருப்பதுடன், வருடாந்தம் சுமார் 7,000 நோயாளிகள் இதில்

சிகிச்சை பெறுகின்றனர். நோயாளிகளை மனிதாபிமானமற்ற மற்றும் இழிவான முறையில் நடத்துவது தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளைத் தொடர்ந்து, ஆணைக்குழு தேசிய மனநல நிறுவனம் தொடர்பான விசாரணையைத் தொடங்கியது. விடயங்களைக் கண்டறியும் குழுவில் மனித உரிமைகள் மற்றும் பொது சுகாதார நிர்வாகத் துறைகளில் சிறப்பு அறிவும் அனுபவமும் கொண்ட நிபுணர்கள் இருந்தனர். விடயங்களைக் கண்டறியும் செயற்பாட்டில் முதன்மை பராமரிப்பு, வெளி நோயாளர் பராமரிப்பு, வதிவிட நோயாளிகள் சிகிச்சையளிப்பு மற்றும் சிறப்பு சிகிச்சை உள்ளிட்ட மருத்துவமனை வளவுகள் சோதனைக்குட்படுத்தப்பட்டன. 2023 ஜூலை மாதத்தில் தேசிய மனநல நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளரொருவர் மற்றும் ஒரு உளவள ஆலோசகர் உள்ளிட்ட இரண்டு நிபுணர்கள் குழுவில் நியமிக்கப்பட்டனர். செயற்பாட்டின்போது கண்டறியப்பட்ட விடயங்கள் தொடர்பான அறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது.

### 5.2.11 *இயலாமையுடைய நபர்களின் உரிமைகள்*

இலங்கையில் வாழும் இயலாமையுடைய நபர்களின் சிவில், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளுக்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு முனைப்புடன் செயற்பட்டு வருகிறது. இந்த பணிகளிடையே ஆணைக்குழுவில் இயலாமையுடைய நபர்களுக்கென ஒரு தனியான பிரிவை நிறுவுவதும் உள்ளடங்கும். இயலாமையுடைய நபர்களுக்கான அமைப்புகளின் ஒன்றிணைந்த முன்னணி போன்ற அமைப்புகளுடன் இணைந்து, இயலாமையுடைய நபர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு இயலாமையுடைய நபர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டம் மற்றும் சைகை மொழி சட்டம் உள்ளிட்ட முக்கியமான சட்டங்களை செயல்படுத்துவதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு முயற்சி செய்துள்ளது.

- சமுர்த்தி வங்கிகளில் இருந்து மாத்திரம் இயலாமையுடைய நபர்களுக்கான உதவித்தொகையைப் பெறுவதை அரசாங்கம் கட்டாயமாக்கியதன் காரணமாக இலங்கையில் இயலாமையுடைய நபர்கள் சமூகம் எதிர்கொள்ளும் பல சிரமங்களுக்கு தீர்வு காண்பதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் 2023.03.21 ஆம் திகதி மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு, சமுர்தி அபிவிருத்தித் திணைக்களம், அங்கவீனர்களுக்கான தேசிய செயலகம் மற்றும் இயலாமையுடையோர் அமைப்புகளின் ஒன்றிணைந்த முன்னணி ஆகியவற்றுடன் ஒரு சந்திப்பொன்றை நடாத்தியது. 2023 மே மாதம் முதல் எந்தவொரு வங்கியிலும் இயலாமையுடைய நபர்கள் தமது தனிப்பட்ட கணக்குகளுக்கு உதவித்தொகையை நேரடியாக மாற்றுவதாக மகளிர், சிறுவர் அலுவல்கள் ம்றறும் சமூக வலுவூட்டல்

அமைச்சின் மேலதிக செயலாளரின் உறுதிமொழியுடன் கூட்டம் வெற்றிகரமாக நிறைவு பெற்றது.

- இயலாமையுடைய நபர்களின் உரிமைகள் தொடர்பாக மகளிர், சிறுவர் அலுவல்கள் ம்றறும் சமூக வலுவூட்டல் அமைச்சுக்கு வெளியிடப்பட்ட பரிந்துரைகள்

2023 செப்டம்பர் 21 ஆம் திகதி இயலாமையுடைய நபர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டமூலம் பற்றிய தனது அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளை ஆணைக்குழு நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்த அமைச்சருக்கு அனுப்பியது. இயலாமையுடைய நபர்களின் உரிமைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் சாசனத்தின் கீழ் இலங்கையின் பொறுப்புக்கூறலை நிறைவேற்றுவதை உறுதி செய்தல் இந்த சட்டமூலத்தின் இலக்காகும். இயலாமையுடைய நபர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், மேம்படுத்துதல் மற்றும் நிறைவேற்றுவதற்கான சட்ட கட்டமைப்பை நிறுவுவதே இந்த சட்டமூலத்தின் நோக்கமாகும். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் பின்வருமாறு:

**அ.** சட்டமூலத்தில் அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு “போதுமானளவிலான மட்டத்திலான வதிவிட வசதி“ தரம் இன்னும் விரிவாக ஒருங்கிணைக்கப்படல் வேண்டும்.

**ஆ** இயலாமையுடைய பெண்கள் மற்றும் பிள்ளைகள் “பல்வேறு விதங்களில்“ அல்லது “தனித்தனியாக“ பாகுபாடுகளை எதிர்கொள்கிறார்கள் என்ற கருத்தை பரவலாக சட்டமூலத்தில் விரிவான வகையில் ஒன்றிணைத்தல் வேண்டுமென்பதோடு, பாலினம் மற்றும் வயது மட்டங்களுக்கமைய உணர்வுகளைப் பாதுகாக்கும் வகையில் இயலாமையுடைய நபர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், மேம்படுத்தல் மற்றும் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்வதற்கான குறித்துரைக்கப்பட்ட உறுதிப்பாட்டையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

**இ.** சட்டமூலம் ஊடாக கவனத்திற்கொள்ளப்படும் பிரகாரம் ஆணைக்குழுவின் கடமைகளை ஒரு சுயாதீன கண்காணிப்பு பொறிமுறையாக பேணி வருவதற்காக அதன் குறித்துரைக்கப்பட்ட தன்மை மற்றும் விடயப் பரப்பு தொடர்பாக கலந்துரையாடுவதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் முறையான மற்றும் அர்த்தமுள்ள ஆலோசனை நடாத்தப்படல் வேண்டும்.

ஈ அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய பேரவையின் அமைப்பு, நியமன செயல்முறை மற்றும் அதிகாரங்கள் தொடர்பான மீளாய்வு நடவடிக்கைகள் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளித்தலைப் போன்றே அதிக சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**உ.** அங்கவீனமுற்ற நபர்களுக்காக முன்மொழியப்பட்டுள்ள தேசிய பேரவைக்கான நிரல் அமைச்சாக நீதி அமைச்சு இருத்தல் வேண்டும்.

- 2024 நவம்பர் மாதத்தில் அனுராதபுரம், வடமத்திய மாகாணத்தில் போன்றே வட மாகாணத்தில் உள்ள இயலாமையுடையோர்களுக்கான பிரவேச கணக்காய்வுகுழுவுக்காக அணுகல் கணக்காய்வை நடாத்தல் பற்றிய பயிற்சித் தொடரொன்று நடாத்தப்பட்டது.

## 5.2.12 *முதியோர் உரிமைகள்*

முதியோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பல அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுத்துள்ளது. நாடு முழுவதும் உள்ள முதியோர் இல்லங்களில் முதியோர்கள் எதிர்கொள்ளும் சவால்களை கவனமாக ஆராய்ந்ததன் பின்னர் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் பல கள விஜயங்கள் மூலம், முதியோர்களின் அத்தியாவசியத் தேவைகள் மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கவனிப்பு குறித்து ஆணைக்குழு பெறுமதிமிக்க புரிதல்களைப் பெற்றுள்ளது.

- 2023 மே மாதத்தில் ஒவ்வொரு பொலீஸ் நிலையத்திலும் “முதியோர் கருமபீடத்தை“ அமைப்பதற்கு பொலீஸ் மா அதிபருக்கு பரிந்துரைத்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இந்த விடயத்தில் ஒரு குறிப்பிடத்தக்க படியை முன்னெடுத்துள்ளது. இந்த நடவடிக்கை ஊடாக முதியோர்களின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வை திறம்பட பாதுகாக்கும் ஒரு அர்ப்பணிப்புள்ள ஆதரவு அமைப்பை உருவாக்க முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.
- பாணந்துறையில் உள்ள ‘சிசில’ முதியோர் இல்லத்தில் வசிக்கும் ஒரு வயதான பெண் தாக்கப்பட்டதாக வெகுசன ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் கிடைத்த தகவலின் அடிப்படையில், ஆணைக்குழு 2023 மே மாதம் 8 ஆம் திகதி அந்த இல்லத்தை விசாரிப்பதற்கு அதிகாரிகள் குழுவொன்றை அனுப்பியது.

## 5.2.13. *பழங்குடி மக்களின் உரிமைகள்*

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கையில் உள்ள பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க தொடர்ந்தும் தொடர்ச்சியாகவும் செயல்பட்டு வருகிறது. இது தொடர்பான சமீபத்திய ஆய்வு 2022 டிசம்பர் 11 ஆம் திகதி இகினியாகலாவில் உள்ள சேனநாயக்க

சமுத்திரத்தில் மீன்பிடித்ததற்காக பழங்குடி மக்கள் குழு கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டமை தொடர்பான விசாரணையை மேற்கொண்டமையாகும். மேற்கண்ட விசாரணை இன்னும் நடந்து கொண்டிருக்கிறது.

- 2023 ஜனவரி 18 ஆம் திகதி ஊருவரிகே வன்னில அத்தோ அவர்களின் தலைமையில் தம்பாண, பொல்பத்தே, ஹென்னானிகல, வாக்கரே, கரச்சேனை, தொகூர் மற்றும் கட்டபரிச்சான் ஆகிய பழங்குடி சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஏனைய தலைவர்கள் (பழங்குடி மக்களின்) குழு ஆணைக்குழுவிடம் ஒரு முறைப்பாட்டை சமர்ப்பித்தது. அதன்போது பின்வரும் முக்கிய விடயங்கள் எடுத்தியம்பப்பட்டன:

  - பழங்குடி சமூகத்திற்கு சட்டபூர்வமான அங்கீகாரம் இல்லாமை.
  - பழங்குடி சமூகத்தின் பொருளாதார, சமூக, கலாச்சார, சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை கவனத்திற்கொண்டு அவர்களுடைய தனித்துவமான நிலையைப் பேணிப் பாதுகாப்பதற்கான கொள்கைகளை வகுப்பதற்கு சரியான பொறிமுறையொன்று இல்லாமை.
  - பழங்குடி சமூகத்தின் பொருளாதார, சமூக, கலாச்சார, சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பாக எந்தவிதமான உணர்வுபூர்வமும் இல்லாமல் சட்டங்களை செயற்படுத்துதல்.
  - பழங்குடி சமூகம் தங்கள் வாழ்வாதாரத்திற்காக மேற்கொள்ளும் செயற்பாடுகளை குற்றவியல் குற்றங்களுடன் சமமாக நோக்கி சட்டங்களை விதிக்கும் நிறுவனங்களை அடையாளம் காணுதல்.
  - பழங்குடி சமூகம் தங்கள் வாழ்விடங்களிலும் பாரம்பரிய நிலங்களிலும் அமைதியாக வாழ்வதற்கான சூழலை உறுதி செய்வதற்கான ஒரு பொறிமுறைக்கான வசதிகளை ஏற்படுத்தல்.

இந்தத் தலைவர்கள் 10 நிறுவனங்களை சாத்தியமான பிரதிவாதிகளாக அடையாளம் கண்டனர். அதாவது, வனவிலங்குகள் பாதுகாப்புத் திணைக்களம், சுற்றாடல் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், பொலீஸ் திணைக்களம், மகாவலி அதிகார சபை, காணித் திணைக்களம், விஞ்ஞான திணைக்களம், மீன்பிடித் திணைக்களம் மற்றும் கரையோர பாதுகாப்புத் திணைக்களம் என்பனவாகும். அதன்படி, பழங்குடி சமூகத்துடன் தொடர்புடைய இத்தகைய பிரச்சினைகளை எடுத்தியம்புவதற்கும் பழங்குடி சமூகத்திற்குப் பொருந்தக்கூடிய ஒரு தனிப்பட்ட சட்டத்தை உருவாக்கவும் 2023 ஜனவரி 27 ஆம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ஒரு முதற்கட்ட கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டது.

## 5.2.14. ***சீவனோபாயத்திற்கான உரிமை***

தனிநபர்களுக்கு தங்களையும் தங்கள் குடும்பங்களையும் பராமரிப்பதற்காக வாழ்வாதாரம் அவசியமாகும். எனவே, பல்வேறு நடவடிக்கைகள் மூலம் வாழ்வாதாரத்திற்கான உரிமையைப் பாதுகாப்பதற்கு ஆணைக்குழு கடுமையாக முன்வருகின்றது. எனவே, 2023 ஆம் ஆண்டில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு முறைப்பாடுகளை விசாரிப்பதன் மூலம் பல பயன்மிக்க நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டது.

- **இலங்கை இராணுவத்தின் சட்ட அலுவலர்களுக்கு தொழில்சார் படிகளை வழங்குவதனை நிராகரித்தல் (முறைப்பாட்டு இல.: HRC/2499/17)**

2017 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின்படி, அரசாங்க நிறுவனங்களில் இணைக்கப்பட்ட சட்ட அலுவலர்கள் என்ற அடிப்படையில், இலங்கை இராணுவத்தில் இணைக்கப்பட்ட ஒரு சட்ட அலுவலருக்கு தொழில்சார் கொடுப்பனவுகளை நிராகரித்தல் தொடர்பாக அரசியலமைப்பின் 12(1) உறுப்புரை மீறப்பட்டிருப்பதாக ஆணைக்குழுவினால் கண்டறியப்பட்டது. 2017 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் இலங்கையில் உள்ள பல்வேறு திணைக்களங்கள், அமைச்சுக்கள், அதிகாரிகள் மற்றும் அரச நிறுவனங்கள் இந்தப் படியை தங்களுடைய சட்ட அலுவலர்களுக்கு செலுத்தியிருப்பதாக முறைப்பாட்டாளர் தனது தர்க்கத்தை முன்வைத்தார்.
2017 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின்படி பாதுகாப்புப் படைகளில் சட்டத்தரணிகளுக்கான தொழில்சார் படிகள் தொடர்பாக, 2017 ஜூன் 17 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் னுஆளு.ஃ.0001.ஃ.ஏழ.டட ஆம் இலக்க சுற்றறிக்கைப் பிரகாரம் பாதுகாப்புப் படைகளில் சட்டம் விடயத்துடன் தொடர்பான பதவிகளுக்கு நேரடியாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள சட்ட அலுவலர்களுக்கு மாத்திரமே இந்தக் கொடுப்பனவைப் பெற உரிமையுண்டு என இலங்கை இராணுவம் வாதிடுகிறது. அதன்படி, முறைப்பாட்டாளர் இராணுவத்தில் சேர்ந்த பிறகு ஒரு வழக்கறிஞராகப் பதிவு செய்யப்பட்டு பின்னர் சட்டத் துறைக்கு மாற்றப்பட்டதால், அவர் தொழில்முறை கொடுப்பனவுக்குத் தகுதியற்றவர் என்பதாகும்.

ஆரம்ப ஆட்சேர்ப்புக்குப் பிறகு வழக்கறிஞர்களாகத் தகுதி பெற்று, பின்னர் இலங்கை இராணுவத்தில் சட்ட அலுவலர்களாகப் பணியாற்றும் சட்ட அலுவலர்களுக்கு தொடர்புடைய தொழில்முறை உரிமையை மறுப்பது பாரபட்சமானது என்று மனுதாரர் வாதிட்டார். மனுதாரர் உட்பட இராணுவத்தில் உள்ள சில சட்ட அலுவலர்கள் தொழில்முறை கொடுப்பனவைப் பெறவில்லை என்பதும், அதைப் பெறுவதற்கான அனைத்து தகுதிகளையும் அவர்கள் பூர்த்தி செய்திருந்தாலும், சட்டப் பணிப்பாளர் போன்ற சில உயர் அதிகாரிகளுக்கும் மேற்படி கொடுப்பனவு மறுக்கப்பட்டிருந்தாலும் சட்ட அலுவலர்கள் பதவிகளுக்கு நேரடியாக

ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அவரது கீழ் அதிகாரிகள் பலர் மேற்படி கொடுப்பனவைப் பெற உரிமையுடையவர்கள் என்பதும், இந்தக் கொடுப்பனவுகளை வழங்குவதில் இழப்பு சில சந்தர்ப்பங்களில் மனரீதியான துஂபிரயோகம் போன்ற ஒரு நிகழ்வுக்கு வழிவகுக்கும் என்பதும் ஆணைக்குழுவின் விசாரணையில் தெரியவந்துள்ளது. இது அரசியலமைப்பின் 12(1) உறுப்புரை மீறல் என்று கண்டறிந்த ஆணைக்குழு மனுதார சட்ட அலுவலருக்கு மற்றும் இதேபோல் நியமிக்கப்பட்ட அனைத்து அலுவலர்களுக்கும் 2017 முதல் அவர்களுக்கு உரிமையுள்ள குறிப்பிட்ட தொழில்முறை கொடுப்பனவைப் பெறுவதை உறுதி செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டது.

- **சத்தியாக்கிரகத்தில் பங்கேற்றதற்காக ஊழியர்களை நியாயமற்ற முறையில் பணிநீக்கம் செய்தல் (முறைப்பாட்டு இல.: HRC/1436|23)**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தனியார்மயமாக்கலுக்கு எதிரான சத்தியாக்கிரகத்தில் பங்கேற்றமையின் காரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்க கூட்டமைப்பில் உறுப்பினர்களாக இருந்த முறைப்பாட்டாளர் மற்றும் 19 தொழிற்சங்க செயற்பாட்டாளர்கள் 2023 மார்ச் 27 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பணியிலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்டனர், இது கடுமையான கலவரத்திற்கு வழிவகுத்தது. முறைப்பாட்டாளர்கள் கலவரத்தில் ஈடுபடவில்லை என விடயங்களை முன்வைத்து தெரிவித்திருந்தனர். தகுதிகாண் மற்றும் சம்பளத்திற்கு உட்பட்டு மீண்டும் பணியில் அமர்த்தப்பட வேண்டும் என்று மனுதாரர்கள் கோரியிருந்தனர். விசாரணையின் பின்னர், 2023 ஆகஸ்ட் 17 ஆம் திகதிய அறிக்கையின் மூலம் மனுதாரர்கள் பலம்மிக்க தொழிற்சங்க அங்கத்தவர்கள் என்பதால், தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணையைத் தடுக்கும் ஆற்றலை அவர்கள் கொண்டிருப்பதனால் அவர்களை மீண்டும் பணியமர்த்துதல் மாற்றுவழி இல்லையென பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் தெரிவிக்கப்பட்டது.

விசாரணைக்குப் பின்னர், மனுதாரர்களின் பணி நீக்கம் மற்றும் அவர்களை மீண்டும் பணியில் அமர்த்துவதனை மறுப்பதற்கான காரணங்கள் தெளிவாக இல்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழு முடிவு செய்தது. தொடர்புடைய பிரச்சினையைத் தீர்ப்பதில் ஏற்பட்ட நீண்ட கால தாமதம் குறித்தும் அது கருத்து தெரிவிக்கப்பட்டது. அதன்படி, 03 ஊழியர்களை அவர்களின் ஆரம்ப பணியிடங்களில் மீண்டும் பணியமர்த்தவும், தவறான நடத்தைகள் தொடர்பில் ஏதேனும் சான்றுகள் கண்டறியப்பட்டால், பிரதிவாதிகளுக்கு எதிராக தொடர்புடைய சுற்றறிக்கைகளின்படி உரிய நடைமுறையைப் பின்பற்ற வேண்டும் என்றும் கட்டாய விடுமுறையில் உள்ள ஊழியர்களை அவர்களின் ஆரம்ப பணியிடங்களில் மீண்டும் பணியமர்த்த வேண்டும் என்றும், 2 மாத காலத்திற்குள் முதற்கட்ட விசாரணைகள் நடத்தப்பட்டு முடிக்கப்பட வேண்டும் என்றும் ஆணைக்குழு பரிந்துரைத்தது.

நிறுவனத்தின் நடத்தை விதிகளுக்கு இணங்கிய வகையில் நடவடிக்கை மேற்கொள்வதனை நிறுத்திவிட்டு அதற்கு எதிராகச் செயற்பட்டால், மீண்டும் பணியமர்த்தப்பட்ட ஊழியர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு பிரதிவாதிக்கு இருக்கின்ற ஆற்றலுக்கு எந்த விதமான தடையும் ஆணைக்குழுவின் பரிந்துரை மூலம் ஏற்படாதென இலங்கை மனித உரிமைகள் குழுவினால் தெளிவாகக் குறிப்பிடப்பட்டது. மேலும், ஆணைக்குழுவின் பணிப்புக்களுக்கிணங்கிய வகையில் நடவடிக்கை மேற்கொள்ளல் தொடர்பாக ஆணைக்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பிரதிவாதிக்கு மற்றும் மனுதாரர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

- முன்னாள் துணைவேந்தருக்கு இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட உரிமை மீறல்கள் (முறைப்பாட்டு இல.: HRC/2764/21)

மனுதாரர் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் (ளுநுருளுடு) முன்னாள் துணைவேந்தர் ஆவார். 2015 பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த பிறகு, அவர் மீண்டும் பல்கலைக்கழகத்தில் இணைந்து கொண்டார். அவர் திரும்பவும் சேவையில் இணைந்து கொண்டதன் பிறகு, குறிப்பாக அவரது பதவி உயர்வுகள் மற்றும் விடுமுறை தொடர்பாக பல சிக்கல்களை எதிர்கொண்டிருந்தார். தகுதி அடிப்படையிலான பதவியான பேராசிரியர் பதவிக்கு பதவி உயர்வு கோரும் மனுதாரரின் விண்ணப்பமானது 2014 இல் அவர் பதவியை இராஜினாமா செய்வதற்கு முன்னரைப் போன்றே 2020 இல் மீண்டும் பணியமர்த்தப்பட்ட பிறகும் பல்கலைக்கழகத்தால் இரண்டு முறை நிராகரிக்கப்பட்டிருந்தது. மனுதாரரை மீண்டும் பணியமர்த்துதல் அவரது இராஜினாமா காரணமாக அவரது முந்தைய சேவையானது துண்டிக்கப்படாமல் மேற்கொள்ளப்பட்டதாக கருதப்பட மாட்டாதெனவும், எனவே அவரது சேவையின் அடிப்படையிலான பதவி உயர்வுகள் மற்றும் விடுமுறை போன்ற பணி மூப்பு சலுகைகளுக்கு அவர் தகுதியற்றவர் என்றும் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தினால் வாதிக்கப்பட்டது. அவரை மீண்டும் பணியிலிமர்த்துவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (ருபுஊ) வழிகாட்டல்களைப் பின்பற்றுவதாக பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

2018 ஆம் ஆண்டில், மனுதாரர் தேசியப் பட்டியல் மூலமாக பாராளுமன்றத்திற்கு நியமிக்கப்பட்டதுடன், அதன்படி அவர் மீண்டும் பல்கலைக்கழகப் பதவியை இராஜினாமா செய்தார். இருப்பினும், 2020 இல் அவரது பாராளுமன்ற பதவிக்காலம் முடிவடைந்த பிறகு, அவர் மீண்டும் பணியமர்த்துமாறு கோரிக்கை விடுத்ததுடன், ஒரு முறை மட்டுமே மீண்டும் பணியமர்த்துதல் வழங்கும் அவர்களின் கொள்கையை மேற்கோள் காட்டி, தென்கிழக்குப் பல்கலைக்கழகம் அந்தக் கோரிக்கையை நிராகரித்தவாறு

அவர் தனது முதல் பணியமர்த்தலில் சலுகையைப் பெற்றதாக அவர்கள் நம்புவதாகக் கூறினர்.

ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட விசாரணையின்போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்களுக்கமைய மனுதாரர் இராஜினாமா செய்வதற்கு முன்னர் பதவி உயர்வுக்கான ஆரம்ப விண்ணப்பத்தை பரிசீலிப்பதற்கு தென்கிழக்கு பல்கலைக்கழகம் மறுத்தமையானது அவரது சமத்துவ உரிமையை மீறுவதாக ஆணைக்குழு கண்டறிந்தது. அவர் மீண்டும் பணியமர்த்தப்பட்ட பிறகு அவருக்கு ஏழு ஆண்டுகள் ஓய்வு விடுமுறை வழங்க மறுத்ததும் நியாயமற்றதாகக் கருதப்பட்டது. 1983 இல் வெளியிடப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தாபன விதிக் கோவை உயர் கல்வி நிறுவகங்களின் நிர்வாகத்திற்கான வழிகாட்டியாக செயல்படுகிறது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் குறிப்பிடப்பட்டது.இராஜினாமா காரணமாக முந்தைய சேவை முடிவுறுத்தப்பட்டு மீண்டும் பணியில் அமர்த்தப்பட்ட நபர்களுக்கு ஏற்புடையதாகின்ற இந்த விதிக் கோவையின் பிரிவின் கீழ், அவர் பணி மூப்பு அனுகூலங்களுக்கு உரித்தற்றவர் என்று குறிப்பிடப்பட்டிருப்பினும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக இராஜினாமா செய்யும் பல்கலைக்கழக ஊழியர்களுக்கு இந்த விதி பொருந்தாது என்று கவனத்திற்கொள்ளப்படல் வேண்டும். 2014 ஆம் ஆண்டு துணைவேந்தராக இருந்தபோது மனுதாரர் சமர்ப்பித்த பதவி உயர்வுக்கான விண்ணப்பமானது அவருடைய இராஜினாமாவை கவனத்திற்கொள்ளாமல் செயல்படுத்த வேண்டும் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு கருதுகின்றது. மனுதாரரின் கோரிக்கையை பல்கலைக்கழக கவுன்சிலிடம் துணைவேந்தர் சமர்ப்பிக்கத் தவறிவிட்டார் என்றும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் இது தொடர்பாக எந்த விசாரணையும் நடத்தவில்லை என்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் கண்டறியப்பட்டுள்ளது.

அதன்படி, அரசியலமைப்பின் 12(1) மற்றும் 14(1)(எ) உறுப்புரைகள் ஊடாக உத்தரவாதம் அளிக்கப்பட்ட மனுதாரரின் அடிப்படை உரிமைகளை தென்கிழக்கு பல்கலைக்கழகம் மீறியதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் கண்டறியப்பட்டது. மேலும் தென்கிழக்கு பல்கலைக்கழகம் அதன் நடைமுறை சார்ந்த முறைகேடுகளை சரிசெய்து, இந்தப் பரிந்துரைகளை செயல்படுத்துதல் குறித்த அறிக்கையை 2023.03.07 க்குள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்றும் மேலும் பரிந்துரைக்கப்பட்டது.

## *அத்தியாயம் 6: சர்வதேச ஒத்துழைப்பு*

- *6.1. சர்வதேச கடப்பாடுகளுடன் இயைந்திருத்தலை விருத்தி செய்தல்*
- *6.2. சர்வதேச அமைப்புக்களுக்கு அறிக்கைகள் மற்றும் வெளியீடுகளை சமர்ப்பித்தல்*
- *6.3. பிராந்திய மனித உரிமைகள் அமைப்புக்களுடனான தொடர்புகளைப் பலப்படுத்தல்*
- *6.4. சர்வதேச அமைப்புக்கள் மற்றும் நிபுணர்களுடனான ஏனைய ஒத்துழைப்புக்கள்*
  - *6.4.1. இருதரப்புக் கூட்டங்கள்*
  - *6.4.2. வெளிநாட்டு நிதி கிடைத்தல்*

## *6.1. சர்வதேச கடப்பாடுகளுடன் இயைந்திருத்தலை விருத்தி செய்தல்*

2023 இல் ஆணைக்குழுவினால் இலங்கையின் சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளுடன் இயைந்திருப்பதனை விருத்தி செய்யும்போது ஆணைக்குழுவின் சட்ட ரீதியான ஆணைப் பிரகாரம் தேவையான பிரகாரம் சர்வதேச மற்றும் பிராந்திய மனித உரிமைகள் அமைப்புக்கள் மற்றும் பாதுகாப்புச் செயற்பாடுகளுடன் முனைப்பான தொடர்பாடல் மற்றும் ஒத்துழைப்பு தொடர்ச்சியாகப் பேணி வரப்பட்டது.

2023 நவம்பர் மாதத்தில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையில் அங்கீகரித்துக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படவுள்ள தேசிய மனித உரிமைகள் நிறுவனம் குறித்த 2023 பிரேரணையை அனுமதித்துக்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறுஇலங்கை அரசாங்கத்தை கோரியது. மனித உரிமைகள் மற்றும் காலநிலை மாற்றத்தைக் கையாள்வதில் தேசிய மனித உரிமைகள் நிறுவனத்தின் முக்கியத்துவத்தையும், இந்தப் பிரேரணைக்கு ஒத்துழைப்பு வழங்குவதனூடாக மனித உரிமைகளுக்கான இலங்கையின் அர்ப்பணிப்பை காண்பிக்கும் விதம் மற்றும் அதனூடாக சர்வதேச நிலைப்பாட்டை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதையும் ஆணைக்குழு வலியறுத்தியது. இது தவிர, அந்தப் பிரேரணைக்கு வலுவான ஆதரவை ஆணைக்குழு மீண்டும் வலியுறுத்தியது.

தேசிய மனித உரிமை நிறுவனங்களின் உலகளாவிய கூட்டமைப்பினால் 2022 ஒக்தோபர் மாதத்தில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவை "யு" நிலையில் இருந்து "டீ" நிலைக்குத் தரமிறக்கியதன் பின்னர், ஆணைக்குழுவினால் 2023 இல் "யு" நிலையை மீண்டும் பெற்றுக்கொள்வதற்காக மீண்டும் கோரப்பட்டது. பாரிஸ் இணை சுதந்திரக் கோட்பாடு, பன்மை வாதம் மற்றும் நுழைவு பற்றிய அதன் அர்ப்பணிப்புடன் இயைந்து செல்கின்ற பிரகாரம் சில நடவடிக்கைகளை ஆணைக்குழு நடைமுறைப்படுத்தியது.

## *6.2 சர்வதேச அமைப்புக்களுக்கு அறிக்கைகள் மற்றும் வெளியீடுகளை சமர்ப்பித்தல்*

2023 ஜனவரி மாதத்தில், மனித உரிமைகள் குழுவினால் அதன் 137 ஆவது அமர்வின்போது இலங்கையை (6 ஆவது தவணை அறிக்கை) மதிப்பாய்வுக்குட்படுத்துவதற்காக நாட்டில் உள்ள சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த அறிக்கை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டது. இலங்கை மனித உரிமைகள் ஆணையத்தின் தவிசாளர் 2023 மார்ச் 06 ஆம் திகதி மனித உரிமைகள் குழுவின் 137 ஆவது கூட்டத்தில் வாய்மொழியாக இந்த அறிக்கையை முன்னிலைப்படுத்தினார். தனது தொடக்க உரையில், இலங்கையில் ஐஊஉஙீசு ஐ செயற்படுத்துதல், நாட்டில் அரசியலமைப்பு சீர்திருத்த செயல்முறை

மற்றும் இலங்கையில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளைப் பாதுகாப்பதில் ஆணைக்குழுவின் வகிபாகம் போன்ற பல தொடர்புடைய விடயங்கள் குறித்து தவிசாளர் தனது கவனத்தை ஈர்த்தார்.

2023 மார்ச் மாதத்தில் ஜெனீவாவில் உள்ள சிறுவர் உரிமைகள் குழுவிடம் சமர்ப்பிப்பதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஒரு இணை அறிக்கையைத் தயாரித்தது. இந்த அறிக்கை ஊடாக சிறுவர்களின் உரிமைகள் மீறல்களுக்கு காரணமாக முடியுமான பல முக்கிய காரணிகளை அடையாளம் கண்டுகொள்ளப்பட்டுள்ளதுடன், அந்த மீறல்களை நிவர்த்தி செய்வதற்கான பரிந்துரைகளை வழங்குகிறது. சிறுவர் உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயத்திற்கிணங்க (ருஹேஊசுஊ) சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள சில நடவடிக்கைகளும் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 2019 - 2023 கால கட்டத்தில் சிறுவர் உரிமைகளை உறுதி செய்வதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து பல அரச நிறுவனங்களிடமிருந்து ஆணைக்குழு தகவல்களைப் பெற்றுக்கொண்டுள்ளது. அதற்கிணங்க, சிறுவர் உரிமைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் பாலின அடிப்படையிலான வன்முறை மற்றும் சிறுவர்கள் மீதான அதன் தாக்கம் குடும்ப உறவுகளை இழந்த குழந்தைகள் சிறுவர் உரிமைகளில் காலநிலை மாற்றத்தின் தாக்கம் உள்நாட்டில் இடம்பெயர்ந்த பிள்ளைகள் மற்றும் சிறுவர் கடத்தல் பற்றிய தகவல்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த அறிக்கை 2023 ஆகஸ்ட் 10 ஆம் திகதி ஜெனீவாவில் உள்ள சிறுவர் உரிமைகள் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

2023 செப்டம்பர் 11 முதல் 29 வரை சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் நடைபெற்ற வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான குழுவின் இருபத்தைந்தாவது அமர்வில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரால் பிரகடமொன்று முன்னிலைப்படுத்தப்பட்டது. வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான சமவாயத்தின் கீழ் இலங்கையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கடப்பாடுகளை கண்காணித்தல் மற்றும் குழுவிற்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் இடையிலான தொடர்புகளை அதிகரித்தல் போன்ற தலைப்புகளில் இந்த பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

2023 ஆம் ஆண்டில், மனித உரிமைகள் கவுன்சிலின் 54 ஆவது அமர்வுக்காக தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் குழுவினால் வெளியிட்ட அறிக்கையையும் ஆணைக்குழு அங்கீகரித்தது. முதியோர்களின் பாதுகாப்பிற்காக நிலவுகின்ற இடைவெளிகளைக் கண்டறிந்து அவற்றைத் திறம்பட நிவர்த்தி செய்வதன் முக்கியத்துவத்தை இந்த அறிக்கை அங்கீகரித்தது. முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நிலவுகின்ற பொறிமுறைகளை மேம்படுத்துவதற்கு உரிமைகள் தெளிவாக

குறிப்பிடப்பட்டுள்ள சமவாயம் போன்ற சர்வதேச சட்டகமொன்று பயன்படுமெனவும் அதனூடாக வலியுறுத்தப்பட்டது.

## *6.3 பிராந்திய மனித உரிமைகள் அமைப்புக்களுடனான தொடர்புகளைப் பலப்படுத்தல்*

'யு' அந்தஸ்தை மீண்டும் பெறுவதற்காக, 2023 ஆம் ஆண்டில் தேசிய மனித உரிமைகள் நிறுவனங்கள் தொடர்பான உலகளாவிய கூட்டணியிடம் ஆணைக்குழு மீண்டும் விண்ணப்பித்தது. 2021 ஆம் ஆண்டில், பாரிஸ் கோட்பாடுகளுக்கு ஏற்ப நிறுவனத்தின் சுயாதீனத் தன்மையை பேணி வருவதற்கு தவறியதாலும், கைது செய்யப்பட்டிருக்கையில் ஏற்பட்ட மரணங்கள் மற்றும் சித்திரவதைகள் குறித்து ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் திருப்தியற்ற நிலையாலும் ஆணைக்குழு 'டீ' அந்தஸ்துக்கு தரமிறக்கப்பட்டது. மீண்டும் 'யு' அந்தஸ்தையுடைய நிறுவனமொன்றாகுவதற்காக முன்வைக்கப்பட்ட விண்ணப்பத்தை கவனத்திற்கொள்வதற்காக தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் உலகளாவிய கூட்டணி ஒரு உப குழுவைக் கூட்டியது. உப குழு 2023 இல் கலந்துரையாடல்களை நடாத்தவுள்ளது.

2022 - 2024 ஆம் ஆண்டுக்கான தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் பொதுநலவாய ஒன்றியத்தின் (ஊகுரேசுஐ) மூலோபாயத் திட்டம் குறித்த தனது அவதானிப்புகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சமர்ப்பித்தது. ஆணைக்குழுவினால் திட்டத்தின் அனைத்து மூலோபாய ரீதியிலான முன்னுரிமை துறைகளும் எடுத்துக்காட்டப்பட்டதுடன், ஊகுரேசுஐ மூலோபாயத் திட்டத்துடன் தொடர்புடைய விளையாட்டு, வணிகம், காலநிலை மாற்றம், பெண்கள் மற்றும் சிறுமிகளின் உரிமைகள், சுகாதாரம் மற்றும் மனித உரிமைகள் போன்ற மூலோபாய முன்னுரிமைத் துறைகளை முன்னுரிமைப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டது.

2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் பணிகளில் இனப்பெருக்க உரிமைகளை ஒருங்கிணைப்பது குறித்து ஆசிய பசுபிக் ஒன்றியம் (யீகு) மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் சனத்தொகை நிதியம் (ருNகீயு) ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்ட செயலமர்வுகளில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பங்கேற்றது.

2023 செப்டம்பர் மாதம் இந்தியாவின் புது டில்லியில் நடைபெற்ற ஆசிய பசுபிக் ஒன்றியத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் ஆணைக்குழு இணையவழி முறையில் பங்கேற்றது. ஆசிய பசுபிக் ஒன்றியம் என்பது தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப உதவியை வழங்கும் பிராந்திய அமைப்பாகும்.

## *6.4 சர்வதேச அமைப்புக்கள் மற்றும் நிபுணர்களுடனான ஏனைய ஒத்துழைப்புக்கள்*

### *6.4.1. இருதரப்புக் கூட்டங்கள்*

பல்வேறு நிறுவனங்களுடன் இரு தரப்புக் கலந்துரையாடல்களை மேற்கொண்டு சர்வதேச ஒத்துழைப்புச் செயற்பாடுகளை விரிவுபடுத்திக் கொள்வதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு தேவையான அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய:

- 2023 ஜனவரி மாதம் இலங்கைக்கான நியூசிலாந்து உயர் ஸ்தானிகர் அதி மேதகு மைக்கேல் எப்பிள்டன், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு விஜயம் செய்து அதன் தலைவரைச் சந்தித்து பரஸ்பர முக்கிய விடயங்கள் குறித்துக் கலந்துரையாடினார்.
- 2023 பெப்ருவரி மாதம் இலங்கைக்கான பிரான்சின் தூதுவர் அதி மேதகு ஜீன் - பிரான்கொயிஸ் பாக்டெட் அவர்கள் ஆணைக்குழுவுக்கு விஜயம் செய்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் ஆணையத்தின் ஏனைய சிரே்‘ட அதிகாரிகளைச் சந்தித்து, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றும்போது எதிர்கொள்ளும் சவால்களைப் பற்றிக் கலந்துரையாடினார்.
- இலங்கை மற்றும் மாலத்தீவுக்கான கனடா உயர் ஸ்தானிகர் அதிமேதகு எரிக் வொல்‘ அவர்கள் 2023 ஏப்ரல் இல் ஆணைக்குழுவுக்கு விஜயம் செய்து, தவிசாளர், மனித உரிமைகள் ஆணையாளர்கள் மற்றும் சிரே்‘ட அதிகாரிகளைச் சந்தித்து, மனித உரிமைகள் துறைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பிரச்சினைகளில் இருதரப்பு ஒத்துழைப்பு மீது கவனம் செலுத்திக் கலந்துரையாடினார்.

### *6.4.2. வெளிநாட்டு நிதி கிடைத்தல்*

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அதன் அடிப்படைச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குத் தேவையான நிதியின் பெரும் பகுதி பொதுத் திறைசேரி ஊடாக கிடைக்கின்றது. அது தவிர, 2023 இல் ஐரோப்பிய சங்கம் (நுரு) - இலங்கை நீதிமன்றங்கள் மறுசீரமைப்பு (துருசுநு) நிகழ்ச்சித் திட்டம் ஊடாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (ருனுீ) மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் சிறுவர் நிதியம் (ருஜேஊநுகு) போன்ற இரண்டு நன்கொடை நிறுவனங்களிடமிருந்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு நிதி கிடைத்தது. பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை, வினைத்திறன் மற்றும் தரம் மீது கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், நவீன, வினைத்திறன்மிக்க நீதிமன்றப்

பிரிவொன்றை கட்டியெழுப்புவதற்காக இலங்கை நீதிமன்றங்கள் மறுசீரமைப்பு (துருசுநு) நிகழ்ச்சித் திட்டம் மூவகை அணுகுமுறையை கையாள்கின்றது. ஆணைக்குழுவுக்கு நிதி வழங்குவதன் பிரதான நோக்கம், பொது மக்களுக்கு மிகச் சிறந்த சேவையொன்றை ஆற்றுவதற்கான ஆற்றலைக் கொண்ட சுயாதீன நிறுவனமொன்றாக ஆணைக்குழுவின் இயலளவை பவப்படுத்துவதாகும். அதற்கமைய, ஆணைக்குழுவினால் இலங்கை நீதிமன்றங்கள் மறுசீரமைப்பு (துருசுநு) நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் சில செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு முன்னின்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ருனோீ உடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கமைய, ஆணைக்குழுவுக்கு கீழ் குறிப்பிடப்படும் விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது:

1. தோட்டத் தொழிலாளர்களின் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் (இரத்தினபுரி மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் உப அலுவலகங்களை நிறுவுதல் உட்பட)
2. மனித உரிமைகள் குறித்து பொதுமக்களுக்கு அறிவுறுத்துவதற்காக தொலைக் கல்வி கற்றல் பொறிமுறையை நிறுவுதல்
3. இயலாமையுடைய நபர்களுக்கு நியாயமான தங்குமிட வசதிகளை வழங்குதல்
4. சிறைச்சாலைகள் ஆய்வின் பரிந்துரைகளை செயற்படுத்துதல்
5. ஆளணி முகாமைத்துவம் குறித்த வழிகாட்டுதல்களை வெளியிடுதல்
6. ஆணைக்குழுவின் மூலோபாயத் திட்டத்திற்கு ஏற்ப புலனாய்வு மற்றும் புலனாய்வுப் பிரிவின் இயலளவை வலுப்படுத்துவதற்கு நிபுணத்துவ தொழில்நுட்ப உதவி மற்றும் ஆதரவை வழங்குதல்
7. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு ஊடகப் பிரிவான்றை நிறுவுதல்
8. ஆராய்ச்சிப் பிரிவொன்றை நிறுவுதல்
9. நிலுவையில் உள்ள கோப்புகளை அகற்றுவதற்கான உதவி (டீயஉமடழப)
10. துரித பதிலளிப்பு பிரிவை நிறுவுதல்
11. தேசிய தடுப்பு பொறிமுறைக்கான (ழேஆ) உதவியை வழங்குதல்

# அத்தியாயம் 7: மனித வளங்கள், நிருவாகம் மற்றும் நிதிசார் அலுவல்கள்

7.1. ஆளணி மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள்
7.1.1. உள்நாட்டுப் பயிற்சி வாய்ப்புக்கள்
7.1.2. சர்வதேச நிகழ்ச்சித் திட்டங்கள்
7.2. ஆளணி மற்றும் வெற்றிடங்கள்
7.3. வருடாந்த நிதிக் கூற்றுக்கள்

### *7.1. ஆளணி மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள்*

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தனது ஆளணியின் தொழில் நிபுணத்துவம் மற்றும் இயலளவை அதிகரிப்பதற்காக அர்ப்பணிப்புடன் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மனித உரிமைகள் மீறப்படுதல்களுக்கு சிறப்பான வகையில் பதில் அளிப்பதற்கு மற்றும் மனித உரிமைகள் விருத்திக்காக நிறுவனம் சார்ந்த சிறப்புத் தேர்ச்சி அத்தியாவசிய காரணியென்பதனை ஆணைக்குழு புரிந்துணர்ந்து, ஆணைக்குழு, தலைமை அலுவலகத்தைப் போன்றே பிராந்திய அலவலகங்களினது ஆளணி அங்கத்தவர்களின் உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியிலான பயிற்சி வாய்ப்புக்களைப் பயன்படுத்திக்கொள்வதற்கு ஊக்குவிக்கின்றது.

2023 ஆம் ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளைப் போலன்றி, உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியாக நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பயிற்சி பயிற்சி வாய்ப்புக்கள் ஊடாக அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ள முடியுமாகியது.

#### *7.1.1. உள்நாட்டுப் பயிற்சி வாய்ப்புக்கள்*

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு பிரிவுகளின் இயலளவை மேம்படுத்திக்கொள்ளும் நோக்கில், ஆணைக்குழுவினால் தொடர்புடைய ஆண்டில் அதன் ஆளணிக்காக பல தகவல்கள் அமர்வுகள் மற்றும் செயலமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன. 2023 ஜனவரி 23 ஆம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தில் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பணிகள் தொடர்பாக ஆணைக்குழுவின் ஆளணிக்காகஇயலளவு விருத்தி நிகழ்ச்சித் திட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

- 2023 ஜூலை 24 ஆம் திகதி ஆணைக்குழுவின் ஆளணிக்கு துரித பதிலளிப்பு குறித்த சிறப்புப் பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டது.
- இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அலுவலர்களுக்கான அறிமுக நிகழ்ச்சித் திட்டமொன்று 2023 ஒக்டோபர் 2023 இல் ஆணைக்குழுவில் நடைபெற்றது.
- 2023 நவம்பர் மாதம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலக உதவியாளர்களுக்கு மனப்பாங்கு விருத்தி குறித்த பயிற்சித் திட்டம் ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் நடைபெற்றது.
- இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆளணிக்காக சிறுவர் குற்றவாளிகளுடன் தொடர்புடைய சட்டங்கள் குறித்த பயிற்சியொன்று 2023 ஒக்டோபர் 16 ஆம் திகதி கொழும்பில் நடாத்தப்பட்டது.

- இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆளணிக்காக சித்திரவதை குறித்த தேசிய தடுப்பு பொறிமுறை குறித்த பயிற்சியொன்று 2023 நவம்பர் 13 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

### *7.1.2. சர்வதேச நிகழ்ச்சித் திட்டங்கள்*

முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது, நடப்பு ஆண்டில் ஆணைக்குழுவின் ஆளணி அங்கத்தவர்கள் பல வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புகள் மற்றும் திட்டங்களில் முனைப்புடன் பங்கேற்றனர். ஆண்டு முழுவதும் நடைபெற்ற இதுபோன்ற வாய்ப்புகளில் பெரும்பாலானவை ஐக்கிய நாடுகள் அமைப்பின் அபிவிருத்தித் திட்டம் (ருNூனுP) போன்ற நன்கொடை நிறுவனங்களால் வசதிகள் வழங்கப்பட்டவையாகும். மேலும் அந்தப் பயிற்சிகள் முக்கியமாக ஆசிய நாடுகளில் நடாத்தப்பட்டன. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆளணி அங்கத்தவர்கள் பங்கேற்ற வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புகளின் முழுமையான பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| | **பங்கேற்றவர்களின் யெபர் மற்றும் பதவி** | **காலப் பகுதி** | **நாடு** | **நிகழ்ச்சித் திட்டம்** |
|---|---|---|---|---|
| 01 | திருமதி ர்.ர்.ஆ.ஆ..மு. ஹேரத் - கல்வி மற்றும் விசேட நிகழ்ச்சித் திட்டம் | 21.05.2023 - 23.05.2023 | தாய்லாந்து | இனப்பெருக்க உரிமைகளுக்காக தோற்றும் ஆலோசனை திட்டம் பற்றிய ருNூகுPயு.யுீகு செயலமர்வு |
| 02 | திரு. ஆ.யு.ே. சந்திரசிறி, பணிப்பாளர் - ஆராய்ச்சி மற்றும் மேற்பார்வை | 04.06.2023-10.06.2023 | தாய்லாந்து | ஆசியாவின் ர்சுஐ பற்றிய வணிக மற்றும் மனித உரிமைகள் பயிற்சி (ருNூனுP இனால் நிதி வழங்கப்பட்ட) |
| 03 | திரு. மு.மு. வில்லவராஜன் - பணிப்பாளர் - சர்வதேச உறவுகள் | 18.06.2023 - 24.06.2023 | கொரியா | 2023 இல் கொரியாவின் சியோலில் மனித உரிமைகள் அலுவலர்களுக்கான கூட்டு நிகழ்ச்சித் திட்டம் |
| 04 | திரு. யு.று.ஆ.அஹமட், சட்ட அலுவலர் | 18.06.2023 - 21.06.2023 | மாலைத்தீவு | தெற்காசியாவின் சிறுவர் உரிமைகள் நிறுவனங்கள் பற்றிய பிராந்திய ஆலோசனை |
| 05 | திரு. று.ஊ.னு. அருணஸ்ரீ | 18.06.2023 - 21.06.2023 | மாலைத்தீவு | தெற்காசியாவின் சிறுவர் உரிமைகள் நிறுவனங்கள் பற்றிய பிராந்திய ஆலோசனை |
| 06 | நீதிபதி டு.வு.டீ. தெஹிதெனிய, தவிசாளர் | 19.10.2023 - 23.10.2023 | ர்'யா | ஏஐஐ ஆவது சர்வதேச விஞ்ஞானம் மற்றும் செய்முறை மாநாடு - மொஸ்கோ |
| 07 | பேராசிரியர் பஸ்னா ஹனிபா - ஆணையாளர் | 03.11.2023 - 11.11.2023 | இத்தாலி | இலங்கை மற்றும் அதன் புலம்பெயர்ந்தோரிடமிருந்து மதம், வன்முறை மற்றும் அரசியல் மறுகட்டமைப்பு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | குறித்த சர்வதேச மாநாடு |
| 08 | திரு. ஆ.யு.ே. சந்திரசிறி, பணிப்பாளர் - ஆராய்ச்சி மற்றும் மேற்பார்வை | 12.12.2023 - 17.12.2023 | நேபாளம் | ஷே்ஆ நேபாளம் கல்வி சுற்றுலா (ருனேஷ் துருசுநு கருத்திட்டம் ஊடாக நிதி வழங்கப்பட்டுள்ளது) |
| 09 | திருமதி ே.து.னு. விஜயவிதான - ஆராய்ச்சி உதவியாளர் | 12.12.2023 - 17.12.2023 | நேபாளம் | ஷே்ஆ நேபாளம் கல்வி சுற்றுலா (ருனேஷ் துருசுநு கருத்திட்டம் ஊடாக நிதி வழங்கப்பட்டுள்ளது) |
| 10 | திருமதி வு. சுபாீனி - நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | 12.12.2023 - 17.12.2023 | நேபாளம் | ஷே்ஆ நேபாளம் கல்வி சுற்றுலா (ருனேஷ் துருசுநு கருத்திட்டம் ஊடாக நிதி வழங்கப்பட்டுள்ளது) |
| 11 | திருமதி ஐ.ளு. விதான, முகாமைத்துவ உதவியாளர் | 12.12.2023 - 17.12.2023 | நேபாளம் | ஷே்ஆ நேபாளம் கல்வி சுற்றுலா (ருனேஷ் துருசுநு கருத்திட்டம் ஊடாக நிதி வழங்கப்பட்டுள்ளது) |

## 7.2. ஆளணி மற்றும் வெற்றிடங்கள்

- 2023 ஆரம்பத்தில், 2022.09.30 ஆம் திகதியன்று நிலவிய 84 வெற்றிடங்களில் 13 சட்ட அலுவலர் பதவிகள் மற்றும் 26 மனித உரிமைகள் அலுவலர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக அரச சேவையில் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அலுவர்களை ஆட்சேர்த்துக்கொள்வதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கோரப்பட்டது. அதற்கமைய, அரச சேவையிலிருந்தே அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக 13 சட்ட அலுவலர் மற்றும் 16 மனித உரிமைகள் அலுவலர்கள் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டதுடன், மீதி 11 மனித உரிமைகள் அலுவலர்கள் ஆட்சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன. இந்த 11 மனித உரிமைகள் அலுவலர்களை ஆட்சேர்த்துக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை 2024 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நடாத்தப்படும்.

- இது தவிர, கணிசமானளவு காலமாக வெற்றிடம் நிலவிய 04 உதவிப் பணிப்பாளர் பதவிகள், 05 சிரேஃட மனித உரிமைகள் அலுவலர் பதவிகள், 1 உள்ளக கணக்காய்வாளர் பதவி மற்றும் 17 முகாமைத்துவ சேவை உதவியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து உள்ளக அடிப்படையில் வேட்பாளர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருவதற்கான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது. அதற்கமைய, ஆணைக்குழு மேற்கூறிய வெற்றிடங்களில் 09 வெற்றிடங்களை நிரப்பியது.

- அலுவலக உதவியாளர் மற்றும் சாரதி ஆகிய ஆரம்ப மட்டப் பதவிகளுக்குக் நிலவுகின்ற வெற்றிடங்களின் அடிப்படையில் பலநோக்கு அபிவிருத்தித் திணைக்களத்திலிருந்து தகைமைகளைப் பெற்றுக்கொண்ட 08 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர்.

- 02 சட்ட அலுவலர்கள், 01 கல்வி பயிற்சி அலுவலர், 08 மனித உரிமைகள் அலுவலர்கள், 02 உரை பெயர்ப்பாளர்கள், 01 நூலகம் மற்றும் ஆவணப்படுத்தல் அலுவலர் மற்றும் 01 மென்பொருள் ∴ வன்பொருள் தொழில்நுட்பவியலாளர் என ஆட்சேர்ப்பு செய்வதற்கு 2023.11.30 ஆம் திகதி முகாமைத்துவ சேவைகள் துறையிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. இந்த வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு 2024 இல் ஆரம்பிக்கப்படும்.
- அறிக்கைப்படுத்தல் ஆண்டில், ஆராய்ச்சி உதவியாளர் மற்றும் நிகழ்ச்சிம் திட்ட உதவியாளர் பதவிகளுக்கு 02 முகாமைத்துவ உதவியாளர்கள் நியமிக்கப்பட்டனர் (கடமைகளை நிறைவேற்றுவதற்காக இணைப்புச் செய்தல்).

## 7.3. வருடாந்த நிதிக் கூற்றுக்கள்

ஆணைக்குழு பிரதானமாக அதன் அடிப்படைச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குத் தேவையான நிதியின் அதிகளவை திறைசேரியிலிருந்து பெற்றுக்கொள்கின்றது. ஆணைக்குழுவின் நிகழ்ச்சித் திட்டங்களின் நடவடிக்கைகளுக்காக ருனேூ மற்றும் ருஜேஊநுகு இடமிருந்தும் 2023 ஆம் ஆண்டில் கணிசமானளவு நிதி கிடைக்கப்பெற்றது. (வெளித்தரப்பு நன்கொடையாளர்களால் வழங்கப்படுகின்ற நிதியுதவி பற்றிய மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து 6.4.2 ஐப் பார்க்கவும்)

2023 ஆம் ஆண்டில் வெளித்தரப்பு நன்கொடையாளர்களால் வழங்கப்படுகின்ற நிதியுதவி பற்றிய விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:

| நிதியுதவி வழங்கிய நன்கொடை நிறுவனம் | நோக்கம் | கிடைக்கப்பெற்ற தொகை (ரூ.) | செலவு (ரூ.) |
|---|---|---|---|
| **ருனேீ** | ஐரோப்பிய சங்கம் - இலங்கை நீதிமன்ற மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டம் (துருசுநு) | 14,186,749.00 | 12,689,206.43 |
| **ருஜேஊநுகு** | ஐரோப்பிய சங்கம் - இலங்கை நீதிமன்ற மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டம் (துருசுநு) | 1,497,000.00 | 1,497,000.00 |


- **மொத்த வருடாந்த நிதி ஏற்பாடுகள்: (2023.01.01 முதல் 2023.12.31 வரை)**

| ஆரம்ப மீதி | 0.00 |
|---|---|
| <u>திறைசேரியினால் வழங்கப்பட்ட பணி முற்பணம்</u> | |
| மீண்டெழும் செலவினம் | 253,798,000.00 |
| மூலதன செலவினம் | 1,741,000.00 |
| ருஜேஊநுகு திட்டம் | 1,497,000.00 |
| ருனேீ திட்டம | 14,186,749.00 |
| ஏனைய பெறுவனவுகள் | 360,845.87 |
| வைப்புக் கணக்கின் தேறிய மாற்றம் | (1,514,530.52) |
| கழிக்க - திறைசேரிக்கு பணம் அனுப்புதல் | 2,158,422.94 |
| மொத்தப் பெறுவனவுகள் | **267,910,641.41** |
| <u>செலவுகள்</u> | |
| ஆளுக்கான வேதனாதிகள் | 134,836,572.45 |
| பிரயாணச் செலவுகள் | 1,083,203.83 |
| வழங்கல்கள் | 14,448,300.41 |
| பராமரிப்பு செலவு | 8,678,259.50 |
| சேவைகள் | 81,799,339.14 |
| மாற்றல்கள் | 9,201,107.71 |
| மனித உரிமைகள் நிகழ்ச்சித் திட்டங்கள் | 2,266,824.94 |
| மூலதனச் சொத்துக்கள் புனரமைப்பு மற்றும் மேம்பாடு | 823,990.00 |
| மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு | 117,782.00 |

| | |
|---|---|
| ஆற்றல் விருத்தி (இயலளவு மேம்பாடு) | 139,055.00 |
| இலங்கை நீதிமன்றத் துறைக்கு உதவி வழங்கல் (துருசுநு)- ருஜேஊநுகு | 1,497,000.00 |
| இலங்கை நீதிமன்றத் துறைக்கு உதவி வழங்கல் (துருசுநு)- ருனுீ | 12,689,206.43 |
| பல நோக்கு திணைக்களத்தின் அட்டுறு செலவுகள் (தலைப்பு 334) | 330,000.00 |
| மொத்தச் செலவு | **267,910,641.41** |

# பின்னிணைப்புக்கள்

## பின்னிணைப்பு 1 - இலங்கையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகங்கள் அமைந்துள்ள இடங்கள் - வரைபடம்



## பின்னிணைப்பு 2 பரிந்துரைகள் பட்டியல் :

| | முறைப்பாட்டு இல. | வழங்கப்பட்ட திகதி | கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் தன்மை | மீறப்பட்டுள்ள அரசியலமைப்பு உறுப்புரை ∴ உறுப்புரைகள் | பிரதிவாதி |
|---|---|---|---|---|---|
| 1 | HRC/1424/22 | 9/1/2023 | பாடசாலைகளுக்கு அனுமதி | 12(1) உறுப்புரை | ஆனந்தாக் கல்லூரி, கொழும்பு 10 |
| 2 | HRC/AP/594/16 | 9/1/2023 | அரச அதிகாரிகளின் செயற்பாடின்மை | 12(1) உறுப்புரை | தம்புத்தேகம பொலீஸ் |
| 3 | HRC/KL/146/21 | 9/1/2023 | தொழில் | 12(1) உறுப்புரை | தென் கிழக்குப் பல்கலைக்கழகம் |
| 4 | HRC/4325/16 | 9/1/2023 | பணி நீக்கம் | 12(1) உறுப்புரை | கிராம அபிவிருத்தி வங்கி |
| 5 | HRC/AP/145/14 | 9/1/2023 | அரச அதிகாரிகளின் செயற்பாடின்மை | 12(1) உறுப்புரை | கிரிபாவ பொலீஸ் |
| 6 | HRC/BD/163/15 | 9/1/2023 | சித்திரவதை | 11 உறுப்புரை | பதுளை சிறைச்சாலை |
| 7 | HRC/1112/21 | 9/1/2023 | பாடசாலைகளுக்கு அனுமதி | 12(1) உறுப்புரை | ரோயல் கல்லூரி, கொழும்பு 07 |
| 8 | HRC/1746/20 | 9/1/2023 | சித்திரவதை | 11 உறுப்புரை | மாத்தளை பொலீஸ் |
| 9 | HRC/825/18 | 9/1/2023 | சித்திரவதை | 11 உறுப்புரை | அஹுங்கல்ல பொலீஸ் |
| 10 | HRC/3886/15<br>HRC/3885/15 | 9/1/2023 | சித்திரவதை | 11 உறுப்புரை | மாரவில பொலீஸ் |
| 11 | HRC/K/267/21 | 9/1/2023 | அரச அதிகாரிகளின் செயற்பாடின்மை | 12(1) உறுப்புரை | பேராதனை பொலீஸ் |
| 12 | HRC/AP/259/18 | 9/1/2023 | சித்திரவதை | 11 உறுப்புரை | கிரிபாவ பொலீஸ் |
| 13 | HRC/AM/68/14 | 9/1/2023 | சொத்துரிமை | 12(1) உறுப்புரை | இலங்கை மகாவலி அதிகார சபை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14 | HRC/ANU/279/21 | 9/1/2023 | அரச அதிகாரிகளின் செயற்பாடின்மை | 12(1) உறுப்புரை | அனுராதபுரம் பொலீஸ் |
| 15 | HRC/4593/13 | 9/1/2023 | இடமாற்றல் | 12(1) உறுப்புரை | உள்;ராட்சித் திணைக்களம் |
| 16 | HRC/2257/15<br>HRC/2606/15 | 9/1/2023 | சித்திரவதை | 11 உறுப்புரை | வெலிபன்ன பொலீஸ் |
| 17 | HRC/1827/17 | 9/1/2023 | துன்புறுத்தல் | 12(1) உறுப்புரை | மாகாண கல்வி அமைச்சு |
| 18 | HRC/AP/514/14 | 9/1/2023 | கைது செய்தல் / தடுத்து வைத்தல் | 13(1) உறுப்புரை | மஹவிலச்சிய பொலீஸ் |
| 19 | HRC/AM/96/18 | 9/1/2023 | சொத்துரிமை | 12(1) உறுப்புரை | மாவட்ட செயலகம், அம்பாறை |
| 20 | HRC/187/22 | 10/1/2023 | பதவி உயர்வு | 12(1) உறுப்புரை | மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு |
| 21 | HRC/755/20 | 31/1/2023 | பாடசாலைகளுக்கு அனுமதி | 12(1) உறுப்புரை | சீ.டப்ளியூ.டப்ளியூ. கன்னங்கரா ம.வி. |
| 22 | HRC/703/22<br>HRC/503/22 | 31/1/2023 | பாடசாலைகளுக்கு அனுமதி | 12(1) உறுப்புரை | கல்வி அமைச்சு |
| 23 | HRC/1044/21 | 31/1/2023 | அரச அதிகாரிகளின் செயற்பாடின்மை | 12(1) உறுப்புரை | வெகுசன ஊடக அமைச்சு |
| 24 | HRC/832/15 | 31/1/2023 | பரீட்சைகள் | 12(1) உறுப்புரை | கொழும்புப் பல்கலைக்கழகம் |
| 25 | HRC/K/133/22/A | 8/2/2023 | பாடசாலைகளுக்கு அனுமதி | 12(1) உறுப்புரை | தர்மராஜ கல்லூரி, கண்டி |
| 26 | HRC/2315/17<br>HRC/2316/17 | 8/2/2023 | பரீட்சைகள் | 12(1) உறுப்புரை | இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 27 | HRC/KND/160/22 | 8//2023 | பாடசாலைகளுக்கு அனுமதி | 12(1) உறுப்புரை | தர்மராஜ கல்லூரி, கண்டி |
| 28 | HRC/KND/131/22 | 8/2/2023 | பாடசாலைகளுக்கு அனுமதி | 12(1) உறுப்புரை | மஹாமாயா பெண்கள் கல்லூரி, கண்டி |
| 29 | HRC/4574/15 | 8/2/2023 | அரச அதிகாரிகளின் செயற்பாடின்மை | 12(1) உறுப்புரை | கல்வி அமைச்சு |
| 30 | HRC/2523/21 | 9/2/2023 | தொழில் | 12(1) உறுப்புரை | இலங்கை பொலீஸ் |
| 31 | HRC/AP/521/16 | 8/2/2023 | சித்திரவதை | 11 உறுப்புரை | ஹபரனை பொலீஸ் |
| 32 | HRC/KND/168/22 | 8/2/2023 | பாடசாலைகளுக்கு அனுமதி | 12(1) உறுப்புரை | கிங்ஸ்வூட் கல்லூரி, கண்டி |
| 33 | HRC/2764/21 | 8/2/2023 | பதவி உயர்வு | 12(1) உறுப்புரை | தென் கிழக்குப் பல்கலைக்கழகம் |
| 34 | HRC/K/04/20 | 8/2/2023 | பாடசாலைகளுக்கு அனுமதி | 12(1) உறுப்புரை | தர்மராஜ கல்லூரி, கண்டி |
| 35 | HRC/2499/17 | 24/2/2023 | அரச அதிகாரிகளின் செயற்பாடின்மை | 12(1) உறுப்புரை | பாதுகாப்பு அமைச்சு / இலங்கை இராணுவம் |
| 36 | HRC/K/178/21 | 10/3/2023 | பணி நீக்கம் | 12(1) உறுப்புரை | இலங்கை விமானப் படை |
| 37 | HRC/1062/19 | 9/3/2023 | ஆட்சேர்ப்பு | 12(1) உறுப்புரை | கொழும்பு மாநகர சபை |
| 38 | HRC/575/17 | 8/3/2023 | அரச அதிகாரிகளின் செயற்பாடின்மை | 12(1) உறுப்புரை | பாதுகாப்பு அமைச்சு /பொலீஸ் மா அதிபர் |
| 39 | HRC/AM/22/14/ | 9/3/2023 | சித்திரவதை | 11 உறுப்புரை | இங்கினியாகலை பொலீஸ் |
| 40 | HRC/2698/21 | 9/3/2023 | பாடசாலைகளுக்கு அனுமதி | 12(1) உறுப்புரை | ரோயல் கல்லூரி, கொழும்பு 07 |
| 41 | HRC/1140/12 | 21/3/2023 | துன்புறுத்தல் | 12(1) உறுப்புரை | கமநல அபிவிருத்தித் திணைக்களம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 42 | HRC/1238/22 | 28/3/2023 | பணி நீக்கம் | 12(1) உறுப்புரை | சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகார சபை |
| 43 | HRC/3481/15 | 30/3/2023 | அரச அதிகாரிகளின் செயற்பாடின்மை | 12(1) உறுப்புரை | பிரதேச சபை, மஹர |
| 44 | HRC/BD/124/22 | 30/3/2023 | அரச அதிகாரிகளின் செயற்பாடின்மை | 12(1) உறுப்புரை | கிராம அலுவலர் |
| 45 | HRC/185/20 | 29/3/2023 | பாடசாலைகளுக்கு அனுமதி | 12(1) உறுப்புரை | ரோயல் கல்லூரி, கொழும்பு 07 |
| 46 | HRC/1126/22 | 4/4/2023 | பாடசாலைகளுக்கு அனுமதி | 12(1) உறுப்புரை | கேகாலை கல்லூரி, கேகாலை |
| 47 | HRC/MR/SUO/MOTU /05/22 | 4/4/2023 | அரச அதிகாரிகளின் செயற்பாடின்மை | 12(1) உறுப்புரை | நகர சபை, குருநாகல் / நகர அபிவிருத்தி அதிகார சபை / கம நல அபிவிருத்தித் திணைக்களம் |
| 48 | HRC/2650/18 | 4/4/2023 | சித்திரவதை | 11 உறுப்புரை | மஹிந்த ராஜபக்‘ கல்லூரி |
| 49 | HRC/4670/22 | 4/4/2023 | கைது செய்தல் / தடுத்து வைத்தல் | 13(1) உறுப்புரை | கிரேன்ட்பாஸ் பொலீஸ் |
| 50 | HRC/2819/17<br>HRC/2637/17 | 25/4/2023 | சித்திரவதை | 11 உறுப்புரை | விசேட அதிரடிப்படை |
| 51 | HRC/2602/20 | 25/4/2023 | சித்திரவதை | 11 உறுப்புரை | விசேட அதிரடிப்படை |
| 52 | SUO/MOTU/05/22 | 18/4/2023 | சட்ட விரோதக் கொலை | 11 உறுப்புரை | பாதுகாப்பு அமைச்சு / பொலீஸ் மா அதிபர் |
| | HRC/KND/198/22 | | சட்ட விரோதக் | 11 உறுப்புரை | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | கொலை | | |
| | HRC/1467/22 | | சட்ட விரோதக் கொலை | 11 உறுப்புரை | |
| | HRC/1468/22 | | சித்திரவதை | 11 உறுப்புரை | |
| | HRC/1173/22 | | சட்ட விரோதக் கொலை | 11 உறுப்புரை | |
| | HRC/1461/22 | | சித்திரவதை | 11 உறுப்புரை | |
| | HRC/1161/22 | | துன்புறுத்தல் | | |
| 53 | HRC/KND/610/22 | 4/5/2023 | பாடசாலைகளுக்கு அனுமதி | 12(1) உறுப்புரை | கிங்ஸ்வூட் கல்லூரி, கண்டி |
| 54 | HRC/3530/15<br>HRC/3531/15<br>HRC/3532/15 | 19/05/2023 | அரச அதிகாரிகளின் செயற்பாடின்மை | 12(1) உறுப்புரை | இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்லூரி நிறுவகம் |
| 55 | HRC/1397/22<br>HRC/769/22 | 19/5/2023 | பதவி உயர்வு | 12(1) உறுப்புரை | வன சீவராசிகள் திணைக்களம் |
| 56 | HRC/2041/21 | 8/6/2023 | அரச அதிகாரிகளின் செயற்பாடின்மை | 12(1) உறுப்புரை | வயம்ப பல்கலைக்கழகம் |
| 57 | HRC/BD/57/20 | 8/6/2023 | அரச அதிகாரிகளின் செயற்பாடின்மை | 12(1) உறுப்புரை | மாவட்ட செயலகம், பதுளை |
| 58 | HRC/2436/14 | 15/6/2023 | கைது செய்தல் | 13(1) உறுப்புரை | மது வரித் திணைக்களம் |
| 59 | HRC/K/37/18 | 15/6/2023 | பாடசாலைகளுக்கு அனுமதி | 12(1) உறுப்புரை | மஹாமாயா பெண்கள் கல்லூரி, கண்டி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **60** | HRC/1623/21 | 15/6/2023 | தொழில் | 12(1) உறுப்புரை | இலங்கை இராணுவம் |
| **61** | HRC/KND/399/22/M | 17/8/2023 | சொத்துரிமை | 12(1) உறுப்புரை | பிரதேச சபை, உடுதும்பறை |
| **62** | HRC/1604/15 | 23/8/2023 | சித்திரவதை | 11 உறுப்புரை | வெலிக்கடை பொலீஸ் |
| **63** | HRC/AM/52/20 | 1/9/2023 | கைது செய்தல் / தடுத்து வைத்தல் | 13(1) உறுப்புரை | அம்பாறை பொலீஸ் |
| **64** | HRC/BD/215/22 | 1/9/2023 | கைது செய்தல் / தடுத்து வைத்தல் | 13(1) உறுப்புரை | எத்திமலே பொலீஸ் |
| **65** | HRC/833/19 | 13/9/2023 | சித்திரவதை | 11 உறுப்புரை | இலங்கை கடற்படை |
| **66** | HRC/KND/45/23 | 13/9/2023 | பாடசாலைகளுக்கு அனுமதி | 12(1) உறுப்புரை | மஹாமாயா பெண்கள் கல்லூரி |
| **67** | HRC/4227/15 | 2/10/2023 | தொழில் | 12(1) உறுப்புரை | நில அளவைத் திணைக்களம் |
| **68** | HRC/KND/76/23 | 1/11/2023 | பாடசாலைகளுக்கு அனுமதி | 12(1) உறுப்புரை | கண்டி பெண்கள் உயர் கல்லூரி |
| **69** | HRC/2919/20 | 31/10/2023 | சித்திரவதை | 11 உறுப்புரை | மத்தேகொட பொலீஸ் |
| **70** | HRC/AP/237/16 | 1/11/2023 | சித்திரவதை | 11 உறுப்புரை | கலென்பிந்துனுவெவ பொலீஸ் |
| **71** | HRC/4765/22 | 1/11/2023 | பதவி உயர்வு | 12(1) உறுப்புரை | மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு |
| **72** | HRC/KI/15/21 | 8/12/2023 | நடமாடும் சுதந்திரம் | 14(1)(ஏ) உறுப்புரை | இலங்கை கடற்படை |

## பின்னிணைப்பு 03 - முறையான முறைப்பாடு மேற்கொள்ளப்படாமல் மனித உரிமை மீறல்கள் பற்றி விசாரணை செய்தல்

| | திகதி | முறைப்பாட்டு இலக்கம் | விடயம் | பிரதிவாதி |
|---|---|---|---|---|
| 1 | | HRC/SUO/MOTU/01/23 | சட்ட ரீதியற்ற கொலை | பொலீஸ் போதைப் பொருள் ஒழிப்பு பணியகம் |
| 2 | | HRC/SUO/MOTU/02/23 | சித்திரவதை | டீ.எஸ்.சேனாநாயக்க தேசிய பாடசாலை, பேருவலை |
| 3 | | HRC/SUO/MOTu/03/23 | சித்திரவதை | மருதானை பொலீஸ் |
| 4 | | HRC/SUO/MOTU/04/23 | சட்ட ரீதியற்ற கொலை | இலங்கை இராணுவம் |
| 5 | | HRC/SUO/MOTU/05/23 | சட்ட ரீதியற்ற கொலை | நீர்கொழும்பு பொலீஸ் |
| 6 | | HRC/SUO/MOTU/06/23 | ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் | பொலீஸ் மா அதிபர் |
| 7 | | HRC/SUO/MOTU/07/23 | கருத்துச் சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் | பாதுகாப்பு அமைச்சு / பொலீஸ் மா அதிபர் |
| 8 | | HRC/SUO/MOTU/08/23 | சட்ட ரீதியற்ற கொலை | மாரவில பொலீஸ் |
| 9 | | HRC/SUO/MOTU/09/23 | ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம | பொலீஸ் மா அதிபர் |
| 10 | | HRC/SUO/MOTU/10/23 | கல்விக்கான உரிமை | கல்வி அமைச்சு |
| 11 | | HRC/SUO/MOTU/11/23<br>HRC/2170/23 | கைதியாக இருக்கும்போது மரணித்தல் | வெலிக்கடை பொலீஸ் |

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | | HRC/SUO/MOTU/12/23 | கைதியாக இருக்கும்போது மரணித்தல் | அங்கொடை தேசிய மன நல ஆரோக்கிய நிறுவனம் |
| 13 | | HRC/SUO/MOTU/13/23 | கைது ∴ தடுத்துவைப்பு | பொரளை பொலீஸ் |
| 14 | | HRC/SUO/MOTU/14/23 | சொத்துரிமை | உதவி தோட்ட அத்தியட்சகர் |
| 15 | | HRC/SUO/MOTU/15/23 | கைதிகளின் உரிமைகள் | காலி சிறைச்சாலை |
| 16 | | HRC/SUO/MOTU/16/23 | கைதியாக இருக்கும்போது மரணித்தல் | தெஹிவளை பொலீஸ் |
| 17 | | HRC/SUO/MOTU/17/23 | கைதியாக இருக்கும்போது மரணித்தல் | அவிசாவளை பொலீஸ் |
| 18 | | HRC/SUO/MOTU/18/23 | கைது ∴ தடுத்துவைப்பு | எல்பிட்டிய பொலீஸ் |
| 19 | | HRC/SUO/MOTU/19/23 | சட்ட ரீதியற்ற கொலை | கந்தான பொலீஸ் |
| 20 | | HRC/SUO/MOTU/20/23 | சட்ட ரீதியற்ற கொலை | விசேட அதிரடிப்படை |
| 21 | | HRC/SUO/MOTU/21/23 | கைது ∴ தடுத்துவைப்பு | குற்றப் புலனாய்வுத் திணைக்களம் |
| 22 | | HRC/SUO/MOTU/22/23 | சித்திரவதை | வட்டரெக்க சிறைச்சாலை |
| 23 | | HRC/SUO/MOTU/23/23 | கைதியாக இருக்கும்போது மரணித்தல் | களுத்துறை சிறைச்சாலை |